சர்வக்ஞர் உரைப்பா

கன்னட மூலம்

சர்வக்ஞர்

தமிழில்

இறையடியான்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113

சர்வக்ஞர் உரைப்பா

கன்னட மூலம்

சர்வக்ஞர்

தமிழில்

இறையடியான்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி.டி.டி.ஐ (அஞ்சல்), தரமணி, சென்னை - 600 113

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Sarvagnar Uraippa
Subject	:	Translation of the Kannada Sarvagnar verses
Editor	:	Iraiyadiyan
Publisher & Copyright	:	International Institute of Tamil Studies, C.P.T. Campus, Adyar, Chennai - 600 113.
Publication No.	:	393
Language	:	Tamil
Year of Publication	:	2001
Edition	:	First
Paper Used	:	18.6kg T.N.P.L. Super Printing
Size of the Book	:	21x14cms
No. of Copies	:	1200
No. of Pages	:	xvi + 162
Price	:	Rs. 40/-
Printed at	:	United Bind Graphics 101-D, Royapettah High Road Chennai - 4. ✆ : 4984693, 4661807

தமிழ் வளர்ச்சி இயக்ககம் வழங்கும் சிறந்த மொழிபெயர்ப்பு நூல் வெளியிடும் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற்று இந்நூல் வெளிவருகிறது.



சர்வக்ஞர்

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அணிந்துரை

கன்னட இலக்கியத்தில் மானுடம் பாடும் வானம்பாடியாக வாழ்ந்தவர் 'சர்வக்ஞர்'. அவருடைய காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் முதல் பகுதி என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

கி.பி. 1504-ஆம் ஆண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படுகின்ற விராட மகாலிங்கர் இயற்றிய கவிதை நூலான போதாம்ருதா எனும் நூல் சர்வக்ஞர் கவிதை ஆக்கத்திற்குத் துணை செய்த நூல் என்பர்.

சர்வக்ஞர் வாழ்ந்த காலத்தில் விராட மகாலிங்கர் வாழ்ந்திருக் கலாம் என்பது ஆய்வாளர்கள் குறிப்பாக அமைகிறது.

கி.பி. 1560-ஆம் ஆண்டில் வாழ்ந்த விரக்த தொண்டாத்திரியர் என்பவர் தொகுத்த அனாதி வீரசைவ சங்கரஹம் எனும் நூல் சர்வக்ஞர் எழுதிய பாடல்கள் பற்றிக் குறிப்பிடும் முதல் நூல் ஆகும்.

சர்வக்ஞர் பிறப்பு பற்றியும் அவர் தாய் தந்தையர் பற்றியும் உறுதியான சான்றுகள் கிடைக்கவில்லை. மேலும் சர்வக்ஞரின் இயற்பெயர் பற்றித் தெரியவில்லை. எனவே சர்வக்ஞர் பற்றிய தெளிவான வாழ்க்கை வரலாற்றினை அறிய இயலவில்லை.

கி.பி. 1868-ஆம் ஆண்டில் செர்மனியைச் சார்ந்த அருட்தந்தை 'வர்த்' என்பவர் சர்வக்ஞர் இயற்றிய 300 பாடல்களைத் தொகுத்து வெளியிட்டார். அவருக்குப் பின் சர்வக்ஞர் படைப்புகள் அனைத்தையும் தொகுத்து 1924-ஆம் ஆண்டு அருட்திரு உத்தங்கி சென்னப்பா வெளியிட்டார்.

அருட்திரு உத்தங்கி சென்னப்பா ஓலைச் சுவடிகளில் மறைந்திருந்த சர்வக்ஞர் பாடல்களைத் தொகுத்துத்தந்த பெருமைக்குரியவர். இந் நூலுக்குச் சென்னப்பா சிறந்த ஆய்வுரை எழுதியுள்ளார். சர்வக்ஞரின் இலக்கிய ஆளுமையை இந்நூல் வழி அறியலாம். இந்நூலில் 2100 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

1980-ஆம் ஆண்டு பேராசிரியர் பசவராசு சர்வக்ஞர் படைப்புகள் அனைத்தையும் தொகுத்து ஆய்வுரையுடன் வெளியிட்டார். அந்நூலில் சர்வக்ஞர் இயற்றியதாகக் கருதப்படுகின்ற இடைச்செருகல்களாக அமைந்த பாடல்களையும் பாடவேறுபாடுகளையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

சர்வக்ஞரின் மூன்று வரிக் கவிதைகள் கன்னடத்தில் 'திரிபதி' என்று குறிப்பிடப்படும். கன்னட இலக்கியத்தில், நாட்டுப்புற இலக்கியத்தின்

வடிவாக இந்த மூன்றுவரிக் கவிதைகள் அமைந்துள்ளன. இப்பாடல்களில் சர்வக்ஞர் தம்முடைய கருத்துகளைச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். எனவே 'திரிபதிய திரிவிக்ரமன்' என்று சிறப்புப் பெயர் பெற்றார். ஏழை, எளிய மக்கள் அறிவுரைக் களஞ்சியமாக விளங்கிய அவரைத் தேடி வந்தனர். எனவே அவர் அம்மக்களுக்குப் புரிகின்ற வகையில் உயர்ந்த கருத்துகளை எளிய நடையில் தந்தார். மேலும் படிப்பவர்கள் மனங்களில் சென்று தங்கும் இயல்புடைய அப்பாடல்கள் அழகும் கலை உணர்ச்சியும் உடையன.

சர்வக்ஞர் தன் பெண்டு தன்பிள்ளை என்ற நிலையில் வாழ்ந்தவர் இல்லை. அனைவரும் உறவினர்கள் என்ற நிலையில் வாழ்ந்த உலகக் குடிமகன். எனவே 'யாதும் ஊரே: யாவரும் கேளிர்' என்பது போல எமதன்னை பூமி யாம் வணங்கும் தேவதையாம் எனில், இங்கு யாரை யான் வெறுப்பேன், சர்வக்ஞ' என்று உலகை உறவாக்கி உரிமை கொண்டாடுகிறார்.

மானிடம் முழுமைக்கும் சொந்தமான மானிடப் பண்புகளை உயர்த்திப் பாடியுள்ள நிலையில் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் நேசித்தவர் இவர்.

வாழ்க்கையில் எல்லாப் பரிமாணங்களைப் பற்றியும் அவர் பாடியுள்ளார். சமூகத் தொண்டே வாழ்க்கையின் இலட்சியம் என்று கருதி வாழ்ந்தார். போலித் துறவிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, மழித்தலும் நீட்டலும் கண்டு மயங்கற்க: மனத் துறவின் மாண்பறிவாய் சர்வக்ஞ' என்று பாடியுள்ளார்.

மழுங்க மொட்டை அடித்துக் கொண்டால் மட்டும் துறவி ஆக முடியாது. அவர் மனத்தாலும் துறவியாக இருக்க வேண்டும் என்று இங்குக் கூறியுள்ளார்.

தீயவர் வாழ்கின்ற உலகில் நல்லவர்கள் வாழ முடியுமா? என்பதை 'வெட்டும் பற்களுடன் வாழ்ந்திடும் நாவினைப்போல் தீயோர் தமக்கிடையில் சேர்ந்திருப்பர் நல்லவரும் தெரிந்திருப்பாய் சர்வக்ஞ' என்று வாழ்க்கையில் நம்பிக்கையை உருவாக்குகிறார்.

சாதி, சமயம், மூட நம்பிக்கைகள் முதலியவற்றை எதிர்த்துச் சர்வக்ஞர் குரல் எழுப்புகிறார். 'என்புதோல் போர்த்திய மலமூத்திர குட்டைக்குச் சாதி என்ன சொல்வாய், சர்வக்ஞ, சாதி என்ன சொல்வாய்? என்றும் நாம் உறையும் நானிலமும் நா அருந்தும் நன்னீரும், வளர்தீயும் வான்ஒளிர் கதிரோன் அவனும், வையமுளோர் யாவர்க்கும் பொது வென்றறியா, பல்குழுவும் பாழ்செய்யும் சாதிகளும், இங்கெதற்கு, தெளிந்திடுவாய், சர்வக்ஞ' என்றும் சாதியை எதிர்த்துக் குரல் எழுப்புகிறார்.

விலங்கின் புலாலை உண்பவனைக் காட்டிலும் தெய்வத்தின் பெயரால் ஒரு விலங்கை யாகத்திற்காகப் பலியிட்டு அதனை உண்பவனே

மிகவும் மோசமான தீண்டத்தகாதவன் என்ற கருத்தில், 'செத்ததைச் செகுத்து உண்பான் புலையன் அன்று தினம்தினம் வாழும் உயிரின் கழுத்தறுத்துச் சுவைத்துண்பான் இழிபுலையன் அவனே சர்வக்ஞ' என்று தீண்டாமையை எதிர்த்துப் பாடுகிறார்.

இல்வாழ்க்கை ஒருவனுக்குச் சிறப்பாக அமைந்து விட்டால் அவன் மறுமை இன்பத்தைத் தேடி அலையவேண்டிய தேவையில்லை என்ற கருத்தில் 'இதம் தரும் மனை, ஏராளமாய்ப் பணம், மனத்துக்குகந்த மனைவி, சர்வக்ஞ, இவை உனக்குக் கிட்டுமாயின் எங்கோ இருக்கும் சொர்க்கத்தை எரிமூட்டிக் கொளுத்திடுவாய்' என்று பாடியுள்ளார். மேலும், இவ்வுலகில் ஒருவர் இம்மை இன்பத்தையும் மறுமை இன்பத்தையும் எய்ய முடியும் என்பதை 'வயிற்றுக்குச் சோறிடல், வாய்மை உரைத்தல், பிறர்நலன் தன்னலமாகக் கொள்ளல், இவை இங்கே உம்பர் உலகாக்கும், இதிலொன்றும் வியப்பில்லை, சர்வக்ஞ' என்று பாடியுள்ளார்.

ஆணவம் அறிவு வளர்ச்சிக்கு எதிரியாக அமையும். எனவே முதலில் அறிவுவாணர்கள் அடக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும். நெல் பயிராக இருக்கும்போது நிமிர்ந்து நிற்கும். பயிர் முற்றிய நிலையில் சாய்ந்து இருக்கும். அதுபோல் அறிவுடையவர்களும் அடக்கமுடையவர் களாக விளங்க வேண்டும் என்பதை 'ஆணவத்தின் விளைவோ நினதறிவு சர்வக்ஞ, அவரிடமும் இவரிடமும் ஆர்வத்துடன் கேட்டு இவன் ஞான மலையானான், சர்வக்ஞ' என்று பாடுகின்றார்.

இறைவன் ஒருவனே என்ற கருத்தை 'ஒருவன் அன்றி உலகுக்கு இருவர் உண்டோ? ஒரு சர்வக்ஞனே உலகத் தலைவன். இவ்வுலகுக் கெல்லாம் ஒருவனே தெய்வம்: ஒருவனே சர்வக்ஞன்' 'அனைத்தும் அறிந்தவன் அனைத்துயிரும் படைப்பவன், உலகம் யாவிற்கும் உகந்த பரம்பொருள், ஒருவன், ஒருவனே ஓர்ந்திடுவாய் சர்வக்ஞ' என்றும் பாடியுள்ளார்.

இறைவன் மக்கள் மனங்களில் உறைபவன். எனவே கோயிலுக்குச் சென்று வழிபடத் தேவையில்லை என்பதை, ''மனத்தில் நினைப்பவனுக்கு மனை ஏன்? மடம் ஏன்? மனத்தில் நினையாதவன் கோயில் அருகிலிருந்து என்ன பயன்? தேகமே தேவாலயம்: ஜீவனே சிவலிங்கம், இந்திரியங்களை யடக்கிப் பக்தி செய்பவனுக்கே முக்தி சந்தேகமில்லை'' என்று பாடுகின்றார். மேலும், 'பாலில் படுநெய்யாய், பைம்புனலில் தீக்கனலாய், யாருக்கும் தெரியாமல் உன்னுள் உறைந்திடுவான் ஈசன் சிவன் என்றே உணர்வாய் நீ சர்வக்ஞ' என்று மக்கள் மனங்களில் நிறைந்துள்ள இறைவனைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

சர்வக்ஞர் பாடல்களில் பல்வேறு பாடுபொருள்கள் இடம் பெற்றுள்ளன. அவை சமூகம், அரசியல், பொதுமேலாண்மை, பொருளியல், வேளாண்மை, குடும்பம், கலைகள், வாணிபம், மருத்துவம், இசை, பருவ காலங்கள், பெண்கள், ஆடை, உணவு, கல்வி, அறம், ஒழுகலாறுகள்,

சோதிடம், வருவதுரைத்தல், தர்க்கம், சாதி, சமயம், இனம், ஆன்மீகம் போன்றன. இவரது பரந்த மனிதாபிமான நோக்கு, முதிர்ந்த விரிந்த ஞானம், தெளிந்த முடிவுகள், பொருள் தெளிவு, பட்டறிவு யாவும் அவரது கவிதைகளில் நிரந்தர வடிவம் பெற்றுள்ளன.

அவர் பாடிய பாடல்கள் மூன்று பெரும் பிரிவுகளாக அமைந் துள்ளன. உலகியல், அறக்கோட்பாடு, ஆன்மீகம் என்ற அடிப்படையில் இவற்றைப் பகுத்து 34 துணைப்பிரிவின் கீழ் வரிசைப்படுத்தியுள்ளார். இந்தத் துணைப்பிரிவுக்குப் 'பத்ததி' என்று பெயர். அவர் கன்னட இலக்கியத்தில் அறக்கோட்பாட்டை வலியுறுத்தி எழுதிய சீரிய சிந்தனையாளர். மக்கள் விழித்து எழுந்து சிந்திக்க அவர் பாடல்கள் எழுதினார்.

இருண்ட வாழ்க்கையில் வாழுகின்ற மனிதர்களை வெளிக்கொணர அவர் பாடல்கள் துணைநிற்கின்றன. சர்வக்ஞர் இல்வாழ்க்கையை வெறுத்தவரில்லை. வாழ்க்கையின் அனைத்து வகை அனுபவங்களையும் வெறுத்து ஒதுக்காமல் பாடியுள்ளார். மனித வாழ்வின் நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார். அடிமையாய் வாழ்வதைக் காட்டிலும் விடுதலை வாழ்வு மிகவும் சிறந்தது என்ற கருத்தில் அமைந்த பாடலைப் பாடி யுள்ளார். 'வீணைவளர் இசை நன்று, மந்திரியோடு நட்பு நன்று, இங்குன் தேகமெனும் பொறியதனை இயக்குவான் ஈசனருள் நன்று, இவற்றுக் கெலாம் மேலாய் நிற்கும் இவ்வுலகில் நின்னுடை உரிமை வாழ்வு' என்றும் 'அடிமையாய் ஆவின்பால் அருந்துதலின் அரைப்பட்டினி சிறுகூழ் உண்டு வாழ்தல் மேல், நாணிழந்து நல்விருந்து சுவைப்பதினும் நாட்பட்டு நலமிழந்த சோறுண்டல் மேல், சர்வக்ஞ, தேர்ந்திடுவாய்' என்றும் உரிமை வாழ்க்கைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

கல்வி குறித்துச் சர்வக்ஞர், 'பெறும் கல்வியே பிதாவும் அன்னையுமாம், பேணும் அறிவுடைமை உடன் பிறப்பால், உற்றபோது உதவிடுவான் நண்பனவன் உறவாவான் இன்பநிலை எய்தி வாழும் இடமதுவே தாய் நாடாம் ஈதறிவாய் சர்வக்ஞ' என்று கல்வியின் சிறப்பைப் பாடியுள்ளார்.

இறைவனின் பக்தர்களாக நடிப்பவர்களை ''மாடு செக்கிழுத்துத் தினமும் சுற்றி வந்ததுபோல் மனம் இல்லாமல் கோயிலைச் சுற்றினால் என்ன பயன்?'' என்று பாடுகின்றார்.

இறைவனைச் சரணடைய எவ்வழி சிறந்த வழி என்று பக்தர்கள் வினாவியதற்கு, 'இவ்வழியோ, அவ்வழியோ, எவ்வழியோ என்றலைந்து உடல்தேய்ந்து மாய்ந்திடாமல் ஈசன் இட்ட வழி நன்று என்றிருப்பாய் சர்வக்ஞ' என்று குறிப்பிடுகிறார்.

கொடையுள்ளம் கொண்ட வள்ளல்கள் வறியவர்களுக்கு ஈவது என்பது நீர் ஊற்றுப் போலச் சுரந்துகொண்டே இருக்கும். ஈயாதவர்களின்

செல்வம் குன்றிவிடும் என்பதைக், ''கொடுத்தது தனக்கு: கொடாதது பிறருக்கு'' என்று பேசுகின்றார்.

ஆன்மீகப் பயிற்சி வழங்கும் ஆசிரமங்கள் உண்மையானவை அல்ல என்ற கருத்தில், 'ஆக்கிய உணவின் அறுசுவை யதனை அதை அகழும் அகப்பைதான் அறியுமோ? அவ்வகப்பையைப் போல்வார் உயர்மனிதர் அன்று ஆன்ம ஞானப் பெருநெறி வேறாம் சர்வக்ஞ' என்று குறிப்பிடுகிறார்.

தமிழில் திருவள்ளுவரைப் போலவும், தெலுங்கில் வேமண்ணாவைப் போலவும், கன்னடத்தில் சர்வக்ஞர் விளங்குகிறார்.

கன்னட அற இலக்கியத்தின் தந்தையாகக் கருதப்படுகின்ற சர்வக்ஞரின் பாடல்களை நண்பர் இறையடியான் கன்னடத்தில் இருந்து தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

இறையடியான் பணியம்மா, சலங்கைச் சடங்கு, புரட்சி, தாம்பத்திய கீதம் முதலிய கன்னட நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். தமிழிலும், கன்னடத்திலும் புலமை மிக்கவர். இவருடைய சர்வக்ஞரின் உரைப்பா எனும் இந்நூலை வெளியிடுவதில் நிறுவனம் மகிழ்ச்சி அடைகிறது.

தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த மொழிபெயர்ப்பு நூல்கள் வெளயிடும் திட்டத்தின் நிதி உதவி பெற்று இந்நூல் வெளியிடப் படுகிறது. நிதி நல்கிய தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கு நன்றி.

இந்நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் காட்டிவருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் **மு. தமிழ்க்குடிமகன்** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு சு. இராமகிருட்டிணன் இ.ஆ.ப. அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூலினை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கு நன்றி.

இயக்குநர்

நன்றியுரை

திராவிட மொழிகளின் மும்மூர்த்திகளெனத் திருவள்ளுவர் வேமண்ணா-சர்வக்ஞர் ஆகியோரைக் குறிப்பார்கள்.

திருவள்ளுவருக்கு இணையாகக் கன்னட மண்ணில் பேசப்படுபவர் சர்வக்ஞர் திருவள்ளுவருக்கு இணையாக ஆய்ந்தறியப்பட்டவர் சர்வக்ஞர் எனில் அதுஎவ்வகையில் என்னும் வினா என்னுள் எழுந்தது. இந்தப் பின்னணியை மனத்துள் கொண்டு சர்வக்ஞரைப் படித்ததால் உருவானதே இந்நூல்.

திருக்குறளோடு ஒப்பீடு செய்யலாம் என்றே எழுதத் துவங்கினேன். எனது சிற்றறிவுக்கு அப்பாற்பட்டது இச்செயல் என்பது ஒருபுறம். கால மின்மை மற்றொரு புறம். மொழி பெயர்ப்பு மட்டும் முதலில் செய்யுங்கள், பிறகு ஒப்பீடு செய்யலாம் என எனது மொழி பெயர்ப்பு வளர்ச்சியை ஊக்கு விக்கும் பேராசிரியர் தமிழவன் அன்புக் கட்டளையிட அதுவே எனக்குச் சரியெனப் பட்டது.

சர்வக்ஞரைப் படித்தபோது பல்வேறு நிலைகளை அவர் சாடியிருப்பதை யும் போற்றியிருப்பதையும் நையாண்டி செய்திருப்பதையும் உணர்ந் தேன். சித்தர்களின் பாடல்களை நினைவுக்குக் கொண்டு வரும் பாடல்கள், இலக்கியச் செறிவுடைய பாடல்கள் எளிமையான சந்தங்கள் கொண்ட பாடல்கள், யதார்த்தம் நிறைந்த பாடல்கள் என்பன அவற்றுள் அடங்கி இருந்தன.

இந்நாள் வரையில் சர்வக்ஞரையும் திருவள்ளுவரையும் ஒப்பீடு செய்யும் நோக்கில் தமிழில் நூல் எதுவும் வெளியாகவில்லை. அத்தகு ஆய்வுக்கு இந்நூல் வழிகோலும் என்பது இந்நூலாசிரியனின் துணிபு.

கன்னடத்தில் பல அறிஞர்கள் சர்வக்ஞர் பாடல்களைத் தொகுத் துள்ளனர். அவற்றுள் உத்தங்கி சென்னப்பா தொகுத்தளித்துள்ளவையே முதன்மையானது எனக் கன்னடப் பேரறிஞர்கள் மகுடம் சூட்டியுள்ளனர். உத்தங்கி சென்னப்பா பல்வேறு தலைப்புகளில் வகைப்படுத்தியதை நானும் ஈண்டுக் கடைப்பிடித்துள்ளேன். எனவே, திருக்குறளோடு ஒப்பீடு செய்வோர்க்கு இது உதவும்.

கன்னடத்தில் உரைப்பா என்னும் வசன நடை பற்றி வெகுவாகப் பேசப்படுகிறது. கன்னட மொழிக்கு இருக்கும் தனிச் சிறப்பும் இதுவே என்பது கன்னட மொழி வல்லுநர்களின் கூற்று. புரட்சிக்கவி பசவண்ணரின் வசனங்களும் இதில் அடங்கும்.

சர்வக்ஞர் உரைப்பா 'திரிபதி' என்னும் மூன்றடிகளாலான பா வடிவம். இவ்வகைப் பாடல்கள் தமிழில் இல்லையா? என நோக்கும்போது

'ஆசிரியப் பாட்டின் அளவுக்கு எல்லை
ஆயிரம் ஆகும் இழிபு மூன்றடியே'

- என ஆசிரியப் பாவுக்கு மூன்றடிதான் அடிச் சிறுமையென இலக்கணம் உரைத்துள்ளது.

எனது 'கருநாடக நாட்டுப்புற இயல் - ஓர் அறிமுகம்' என்னும் முந்தைய நூலினைப் போலவே இந்நூல் ஆக்கத்துக்கும் ஐந்தாண்டுகளாயின.

முனைவர் திரு ச.சு. இளங்கோ கருநாடக மண்ணின் இலக்கிய, இலக்கண நூல்களை நன்கறிந்தவர். பாரதி, பாரதிதாசன் கவிதைகள் கன்னடத் தில் வெளிவரக் காரணமாயிருந்தவர். இப்போது, திருக்குறளுக்கு ஒப்பாகப் பேசப்படும் சர்வக்ஞர் உரைப்பா தமிழில் வெளிவந்தால் ஒப்பீட்டு ஆய்வுக்கு வழிகோலும் என்னும் உயர்நோக்கில் இந்நூல் வெளிவர ஆர்வம்

காட்டியதோடு உறுதுணையாக விளங்கிய அன்னார்க்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துக்கும் நான் என்றென்றும் கடப்பாடு உடையேன்.

வசன நடையில் எழுதத் துவங்கியபோது எனக்கு உதவிய நண்பரும் தனித் தமிழ்ப் பற்றாளருமான திரு மு. முத்துச் செல்வன், கன்னடச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் இடம் பெறப் பெரிதும் காரணமாக இருந்தார். நான்கு முறை திருத்தி அவரிடம் எடுத்துச் சென்ற போதெல்லாம் முகம் திரிந்து நோக்காமல் செம்மையுற அமையப் பேரார்வம் காட்டினார். பயன் கருதாதப் பண்பாளர் திரு மு. முத்துச்செல்வன் என் நன்றிக்கு என்றும் உரியவர்.

புலவர் கார்த்தியாயினி அவர்கள் ஒவ்வொரு பாடலையும் பலமுறை படித்துப் பொருள் உணர்ந்து சந்தங்கள் பிரித்து ஒழுங்குபடுத்தப் பேருதவியாக இருந்தார். தட்டச்சு செய்து நகல் எடுத்த பின் புலவர் காமராசர் பார்வைக்கு அனுப்பினேன். பொருள் விளங்காத பாடல்களை எனக்கு இனங் காட்டினார். புலவர் மா. விசுவநாதன் தன்னலங் கருதாமல் அமைதியாக தமிழ்த் தொண்டாற்றி வருபவர். மறைந்த பேராசிரியர் தண். கி. வேங்கடாசலம் கன்னட இலக்கிய இலக்கண நூல்களைத் தமிழுக்கு மொழி பெயர்த்த போது அவருடன் இருந்து பணியாற்றியவர். அன்னாரிடம் எனது மொழிபெயர்வைக் காட்டியபோது ஏறக்குறைய நாற்பது உரைப்பாக்களில் தான் பாடபேதங்களாகக் கருதியதை எடுத்துக் காட்டியதோடு சில இலக்கண மரபுகளைச் சுட்டிக்காட்டி நூல் செம்மையுற உதவினார். இம்மூவரானப் புலவர் பெருமக்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

கையெழுத்துப் படியைத் தட்டச்சு செய்வதில் நண்பர் சி. விசய குமாரும் திருவாட்டி கிரிஜாவும் உதவினார்கள். இவர்கள் இருவருக்கும் நகலெடுத்துக் கொடுத்த நண்பர்கள் நா. விவேகாநந்தனுக்கும் மா. விசயபூபதிக்கும் என் கடப்பாடு.

சர்வக்ஞர் உரைப்பா தொடர்பான கன்னட நூல்கள் தேவைப்பட்ட பொழுதெல்லாம் கன்னட இலக்கியக் கழகத்தின் சரசுவதி நூலகத்திலிருந்து நூல்கள் எடுத்துக் கொடுத்துதவிய நண்பர் ஹேமாத்ரி பட் அவர்களுக்கும் நன்றி உடையேன். இந்நூலின் பரிணாமம் அவரின் உதவியே எனில் மிகையாகாது.

இந்நூல் கன்னட மூலத்துக்கு நிகராக அமைந்துள்ளது என நினைக்கப் படுமானால் அப்பெருமை மூல ஆசிரியர் சர்வக்ஞருக்கு உரியது; குறைகள் இருக்குமாயின் எளியேனுக்கு உரியது. கன்னடமும் தமிழும் நன்கறிந்த சான்றோர்கள் எனது பிழைகளைச் சுட்டிக் காட்டினால் மனமுவந்து நன்றியோடு ஏற்பேன்.

கிராந்தி கவி சர்வக்ஞ பிரதிஷ்டான (புரட்சிக் கவி சர்வக்ஞர் நிறுவனம்) என்ற அமைப்பு சர்வக்ஞரின் உரைப்பாக்களை மக்களிடம் பரப்புவதில் மிகுந்த ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் தொண்டாற்றி வருகிறது. அதன் தலைவர் திரு. மகாதேவ ஹொரட்டி, செயலாளரும் சிவனடியார்களின் புகழைத் தனது கன்னட - தமிழ் நாடகங்களின் வாயிலாக மேடையேற்றி வருபவரும் எனது நண்பருமான திரு. பி.என். ருத்ரப்பா ஆகியோர் தமிழில் மொழிபெயர்த்துள்ள சர்வக்ஞர் உரைப்பா என்னும் இந்நூல் வெளிவர உறுதுணையாகவும் தூண்டுகோலாகவும் இருந்தனர். இவ்விருவர்க்கும் புரட்சிக்கவி சர்வக்ஞர் அமைப்புக்கும் எனது இதயங்கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

4.6.2001
பெங்களூர்

- **'இறையடியான்'**

முன்னுரை

சர்வக்ஞர் வரலாறு

சர்வக்ஞர் வரலாறு என்பதைவிட அவருடைய கதையென்னும் பின்புலத்தைக் கொண்டே சர்வக்ஞரின் வாழ்க்கை மற்றும் காலம் பற்றிக் கணிக்க முடிகிறது. அவர் எழுதிய திரிபதி (மூன்றடிகளைக் கொண்ட பா வகை)யின் வாயிலாக சர்வக்ஞரின் பிறப்பு, பெற்றோர், உறவு போன்ற செய்திகளை ஊகிக்க முடிகிறது.

தொடக்கம்

சர்வக்ஞரின் காலத்தைக் கன்னட அறிஞர்கள் துல்லியமாகப் பகுத்து வரையறுக்காதது பெருங்குறையாகக் கருத இடமில்லை. திருவள்ளுவர் என்று சொல்லும்போதே திருக்குறள் மட்டுமே முன் நிற்க, அவரது காலம், வாழ்க்கை ஆகியன சற்றே புறந்தள்ளி இருப்பதைப் போன்றே சர்வக்ஞரின் உரைப்பாவும் முதலிடம் பெறுகிறது எனலாம்.

கால அறிவின் தடங்கள் (காலக்ஞான பத்ததி) என்னும் தலைப்பின் கீழ் அமைந்துள்ள பாடல்கள் வழி அவர் வாழ்ந்த காலத்தை நிச்சயிக்க முடிகிறது என்கின்றனர் கன்னட ஆய்வறிஞர்கள்.

விசயநகரம் வீழ்ச்சியடைந்த காலம் கி.பி. 1365-ஆம் ஆண்டு. கி.பி. 1763 மற்றும் கி.பி. 1799 ஆகிய ஆண்டுகளில் 'இக்கேரி' என்னும் குறுநில வீழ்ச்சியும் திருவரங்க(ஸ்ரீரங்க)ப் பட்டணம் ஆங்கிலேயர் வசமான நிகழ்வும் நடந்தேறின. இப்பின்னணியைக் கருத்தில் கொண்ட மதப்போதகரான பாதிரி எஃப். கிட்டில் (Rev. F. Kittil) 'கன்னட இலக்கிய வரலாறு' என்னும் நூலின் பதிப்புரையில் சர்வக்ஞரின் காலம் கி.பி. 1800 என்கிறார்.

கி.பி. 1800-க்குப் பின்னர் கிடைத்த சர்வக்ஞர் உரைப்பாவின் ஓலைச் சுவடிகளில் பழங்கன்னட எழுத்தான 'ற' வடிவம் ஆர். நரசிம்ம ஆசாரியரை சிந்திக்க வைத்தது. இவ்வெழுத்து கன்னட மொழியில் வழக்கில் இருந்த காலத்தை அறுதியிட்டு சர்வக்ஞர் வாழ்ந்த காலம் கி.பி. 1700-க்கு பின்னராக இருக்காது என்னும் முடிவுக்கு வருகிறார். ''சர்வக்ஞ மூர்த்தி நிலுபிசித்த திரிபதி'' என்னும் ஓலைச் சுவடிகளை கண்டெடுத்தவர் சம்பாதனேய சித்த வீரண்ண ஆசார்யா என்பவர். இவர் கி.பி. 1600-க்கு முன்னர் சர்வக்ஞர் வாழ்ந்ததாக கருத முடியாது என்கிறார். மதப்போதகரும் கன்னட ஆய்வாளருமான மேனாட்டறிஞர் கி.பி. ரைசு (K.P. Rice) என்பவரோ கன்னட இலக்கிய வரலாறு என்னும் நூலின்கண் சர்வக்ஞர் காலம் கி.பி. 1600 என்பதை ஐயத்துடனேயே ஏற்கிறார்.

தனது வாழ்வின் பெரும் பகுதியைச் சர்வக்ஞர் ஆய்வுக்காகவே கழித்தவர் உத்தங்கி சென்னப்பா ஆவர். அவரின் ஆய்வுகளே பின்னர் எழுதிய பல நூல்களுக்கு முன்னோடியாக விளங்கியது. சர்வக்ஞர் வாழ்ந்த காலம் பற்றி நம்பகமான கருத்தினை முன் வைக்காத உத்தங்கி அவர்கள் சர்வக்ஞரின் உரை வீச்சில் காணும் ''அறிவுத் தடங்கள்'' பகுதியில் ஆங்கிலேயர், தொடர்வண்டி, தந்தி போன்ற சொற்கள் இல்லை யென்கிறார். விசய நகர வீழ்ச்சி பற்றியும் அக்காலகட்டத்தில் வாழ்ந்த வேற்றரசர்களைப் பற்றியும் சர்வக்ஞர் நேரில் கண்டும் பிறரிடம்

கேட்டறிந்தும் எழுதி இருப்பதால் அவருடைய காலம் பதினாறாம் நூற்றாண்டே என்பதை 1924-களில் உத்தங்கி எடுத்துரைத்தார். (ஆயினும் உத்தங்கி சென்னப்பா தொகுத்த சர்வக்ஞர் உரைப்பா நூலில் தந்தி, புகையூர்தி போன்ற தலைப்புகளை எடுத்தாண்டுள்ளார். இதனைப் பின்னர் காண்போம்)

சர்வக்ஞர் வாழ்ந்த காலம் கி.பி. 1500 முதல் கி.பி. 1600 வரையில் இருக்கலாம் என்கிறார் எச். தேவிரப்பா. இவர் கூற்றும் உத்தங்கியின் கூற்றும் நெருக்கமாக உள்ளதெனலாம். ஓலைச்சுவடிகளில் இருந்த சர்வக்ஞரின் உரைப்பாக்களைத் திரட்டி ''பரமார்த்த'' எனும் நூலினை வெளியிட்ட டாக்டர் எல். பசவராசு சர்வக்ஞரின் காலத்தைப் புதியதொரு கோணத்தில் கண்டார். *பிட்ட மண்டேய பிரபு என்பவரின் காலமான கி.பி. 1530-ஆண்டே சர்வக்ஞரின் காலம் என்கிறார். ஆனால் ஆவணங் களை ஆய்ந்தவரான டாக்டர் எம்.எம். கலபுர்சியோ சர்வக்ஞரின் காலம் கி.பி. 1474 என உறுதிப்படுத்துகிறார்.

பிட்ட மண்டேய பிரபுவைக் குறிப்பிடும் விரத மகாலிங்கம் அவரைவிட ஒரு தலைமுறைக்கு முன் வாழ்ந்தவரெனில் அவருடைய காலம் கி.பி. 1504 என்றாகும். ஆக விரத மகாலிங்கத்தின் ஆசானும் சமகாலத்துப் பெரியோனுமாகிய சர்வக்ஞர் கி.பி. 1500-இல் வாழ்ந்திருக்கக் கூடுமெனும் ஊகத்துக்கு வருகிறார் எஸ். சிவண்ணா அவர்கள். கி.பி. 1504 என்னும் வழக்கே இந்நாள்வரை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. (பிட்ட மண்டேய பிரபுவுக்கும் விரத மகாலிங்கத்துக்கும் தலைமுறையொன்று இடைவெளி இருந்ததொப்ப சர்வக்ஞருக்கும் விரத மகாலிங்கத்துக்கும் இடைவெளி இருந்திருக்கக் கூடுமென்பதைப் புறக்கணிக்க முடியாது.) சர்வக்ஞரின் காலம் பிட்ட மண்டேய பிரபுவின் காலத்துக்குச் சமமாக கி.பி. 1474 என்றே கொள்ளத் தோன்றுகிறது. ஆக சர்வக்ஞர் வாழ்ந்தது கி.பி.1475 என்னும் முடிவுக்கு வரலாம்.

பிறந்த இடம்

சர்வக்ஞர் பிறந்த காலக்கட்டம் பற்றிய விவாதங்களும் ஆய்வுகளும் கன்னட அறிஞர்களிடையே எழுந்த அளவுக்கு அவர் பிறந்த மண் பற்றி எழவே இல்லை. சர்வக்ஞரின் பெற்றோர் வாழ்ந்த இடத்தை அவரின் பாடல்களே செப்புகின்றன. சர்வக்ஞர் பிறந்தது 'அம்பலூரு' என்கிறார் உத்தங்கி சென்னப்பா. இந்நாளில் அம்பலூரு எனப்படும் இவ்வூர் தார்வாடு நகரின் இரேகேரூருக்கு அருகாமையில் உள்ளது. சர்வக்ஞரின் தந்தை எனப்படும் 'பசவரச'னின் ஊர் மாசூரு. அம்பலூருக்கு பதினாறு கி.மீட்டர் தூரத்தில் உள்ளது.

பிறப்பின் கதை

சர்வக்ஞரின் பிறப்பையொட்டி அரசல் புரசலான கதைகள் பல வுண்டு. கதைகளையொட்டிய வாதங்களும் எண்ணிலடங்காதன. சர்வக்ஞரின் பாடல்களையும் மற்றும் மக்களிடையே கேட்டறிந்த கதைகளின் சான்றுகளையும் ஒப்பாய்வு செய்த உத்தங்கி இப்படி எழுதுகிறார்:

---

* சர்வக்ஞரின் உரைப்பாவுக்கு பெருமை சேர்த்த சிறப்புக்குரியவர் சர்வக்ஞரின் சீடரான 'விரத மகாலிங்க' என்பவர். இவர் தொகுத்த ''குரு சொல்லமுதம்'' எனும் நூலில்தான் பிட்ட மண்டேய பிரபுவின் காலத்தை குறிப்பிட்டுள்ளார்.

''தாரவாடவிலுள்ள ஒரு குக்கிராமம் மாசூரு. பூசை செய்வதைத் தொழிலாகக் கொண்டவன் பசவரச. மல்லரச என்னும் பெயரும் இருந்த தாகப் பாடலொன்றின் வழி அறிய முடிகிறது. அவனது மனைவி மல்லவ்வ, நெடுங்காலம் குழந்தைப் பேறின்றி வாழ்ந்தவள். காசி விசுவநாதனை வேண்டி வருமாறு கணவனை அனுப்புகிறாள். 'தனக்கொரு ஆண் மகன்' பிறக்க வேண்டுமென இவனும் முறையிடுகிறான்.

வரமளித்த சிவன் பசவரசனின் கனவில் தோன்றி ''யாருக்கு முதலில் நீ கர்ப்பதானம் செய்கின்றாயோ அவளுக்கொரு ஆண் மகன் பிறந்து சிறப்பான்'' என்றாராம்.

திரும்பும் வழியில் அம்பலூரு என்னும் கிராமத்தில் தங்க நேரிடுகிறது. பயணக் களைப்பு இருப்பினும் சமைத்துச் சாப்பிட எண்ணி மட்பாண்டம் வாங்க மாலி என்னும் குயவப் பெண்ணின் வீட்டுக்குச் செல்கிறான். சமைக்கும் வேளையில் இடி மின்னலோடு பலத்த மழை.

புகலிடம் தேடியவன் மீண்டும் கைம்பெண்ணான மாலியின் வீட்டை அடைகிறான். மழையில் நனைந்த பசவரசனை வரவேற்ற மாலி வெளியூர்க்காரனுக்கு செய்யவேண்டிய மரியாதையைச் செய்கிறாள். இளமையாயிருந்த இருவரையும் மோகம் சூழ்கிறது. மழையும் தனிமையும் இருவரையும் ஒருடலாக்குகின்றன.

இவ்வுறவில் சூல்கொண்ட மாலி ஆண் மகனுக்குத் தாயாகிறாள். சிறுவனாக இருந்த சர்வக்ஞன் ''சிவனும் பார்வதியும் எனது பெற்றோர். ''புட்டத்தன்'' என்னும் பெயரில் கைலாயத்தில் இருந்தவன் நான். காரணமொன்றின் பொருட்டாகவே சிவன் என்னை பூமிக்கு அனுப்பினன். மாலியும் பசவரசனும் எனக்குப் பெற்றோராய் இருக்க அருகதையற்றவர்கள்'' என ஊராரிடம் சொல்லிக் கொண்டிருந்தான். இதனால் இள வயதிலேயே வீட்டினின்று விரட்டவும் பட்டான்.

இதுவரை அச்சாகியுள்ள அனைத்து நூல்களிலும் சர்வக்ஞரின் பிறப்புப் பற்றிய இக்கதையைக் காண முடிகிறது. இச்செய்தி ஓலைச்சுவடிகளில் ''கால அறிவுத் தடங்கள்'' என்னும் தலைப்பின் கீழ் பதிவாகியுள்ளன. ஆனால் சில நூல்களை ஆராயுங்கால் பிறப்புப் பற்றிய விவரங்கள் நூலின் முதல் இறுதியென அங்குமிங்குமாகச் சிதறியே கிடக்கின்றன. இவற்றுக்கு மாறாக வேறு சில படிகளில் கால அறிவுத் தடங்கள் என்னும் தலைப்போ சர்வக்ஞரின் பிறப்பையொட்டிய உரைப்பாக்களோ இல்லை. அம்பலூரில் பிறந்த சர்வக்ஞரே 'கால அறிவுத் தடங்கள்' தலைப்பில் எழுத, பிற உரைப்பாக்கள் சர்வக்ஞர் பெயரில் வேறொருவர் எழுதி இருக்கலாம் என்னும் ஐயப்பாடு பின்னாளில் எழலாம் என்பதை எழுபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பே உத்தங்கி சென்னப்பா சுட்டிக் காட்டினார்.

சர்வக்ஞரின் பிறப்பையொட்டி வேறு பல கதைகள் எழுந்துள்ளமை தவிர்க்க முடியாதன என்பது ஒருபுறமிருக்க இவற்றைப் பொய்யென நினைப்போருமுண்டு. பொய்யென உரைப்போர்க்கு கீழ்க்காணும் எதார்த்தங்களை முன் வைக்கிறார் உத்தங்கி சென்னப்பா.

கையெழுத்துப் படிகளில் சர்வக்ஞரின் பிறப்பைப் பற்றிய உரைப்பாக் களை அடுத்து, சாதி குலத்தைக் கண்டிக்கும் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

அவரின் பிறப்புப் பற்றிச் சொல்லிய கையோடு சற்றும் தொடர்பற்ற இப்பாடல்களைப் பாட வேண்டிய அவசியம் வேறு கவிக்கு இல்லை. தன் பிறப்பின் தாக்கம் சர்வக்ஞரை பாதித்ததால் மட்டுமே சாதி குலத்தை வன்மையாகச் சாடியுள்ளார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாம்.

திரிபதியெனும் மூன்றடிகளால் ஆன உரைப்பாக்களை யாத்த சர்வக்ஞர் கண்டிப்பு மிக்கவர் என்பதை ஒவ்வொரு பாடலிலும் காண முடிகின்றது. பிறப்பைப் பற்றி சொல்லும் பாக்களில் கதையில் வரும் சிறுவனின் கண்டிப்பை உணரலாம். எனவே சர்வக்ஞரின் பிறப்புக் கதையும் உண்மையே எனலாம்.

இவர் சமுதாயத்தில் அனைவராலும் போற்றப்பட்ட வேளையில், இவரோ சாதிக் கொடுமைகளைச் சாடுகிறார். இவர் கருத்தை ஏற்காத மக்களில் சிலர் பிறப்பைச் சொல்லிக் கேலி செய்யலாயினர். அக்கால் தனது பிறப்புச் செய்தியைச் சொல்ல வேண்டிய கட்டாயம் எழ, ''சொல்ல அறியேன் யான் சொல்லென்ப சொன்னேன்'' என்னும் உரைப்பா வழி தெற்றென விளக்குகிறார்.

''தந்தைக் குயவனாம் மல்ல தாய் மளவதேவி
இந்துசேகரனின் தவப்புதல்வன் - மண்ணில்
வந்து பிறந்தஎன் சர்வக்ஞ''

என்னும் பாடலை மேற்கோள் காட்டுகிறார், ஜி.எம். உமாபதி சாஸ்திரி. மேலும் இவர், ''புராணக் கதையொன்றில் குண்டய்யா என்னும் கதை பாத்திரம் வருகிறது. இவனொரு சிவனடியான். மல்லனும் குண்டய்யா குலத்தைச் சார்ந்தவனே'' என்று ஊகம் செய்கிறார். உமாபதி சாஸ்திரி சுட்டிய பாடலில் சர்வக்ஞரின் குலம் மாசு படிந்துள்ளதாகவே காண முடிகிறது.

முனைவர் ஜி.எஸ். சிவருத்ரப்பா அவர்கள் மேலே குறிப்பிட்ட பாடலை இடைச்செருகல் என்கிறார். தேஷ்பாண்டே மனோகர இராயரு என்பவர், ''குயவப் பெண்ணின் தந்தையே பசவரசனை வேண்டி அழைத்து, தனது மகளுக்குக் கர்ப்பம் தருமாறு கேட்டதாக'' விரசப்படுத்துகிறார்.

முனைவர் ரம். ஸ்ரீ. முகளி புதியதொரு வினா எழுப்புகிறார், ''சர்வக்ஞர் என்பது பெயரா? அல்லது குறியீடா?''

பின்னாளில் எழுந்த இக்கேள்விக்கு விடையளிக்கும் வகையில் உத்தங்கி சென்னப்பா அவர்கள் 1924-லேயே ''பெயரும் குறியீடும் இரண்டுமுடைத்தாம்'' என்றார்.

''சர்வக்ஞன் என்பது பெற்றோர் வழங்கிய பெயரன்று; வயதான காலத்தில் அவராகவே அவ்வாறு அழைத்துக் கொண்டாரோ? ஆயினும் சர்வக்ஞர் தனது உரைப்பா முழுவதும் நீதியை நிலைநாட்டும் புரட்சியாளராகவே காட்சி தருவதால் தன்னை ஒருகாலும் அப்பெயரில் அழைத்துக் கொண்டிருக்க மாட்டார்; எண்ணியும் இரார்'' என்கிறார் எ.ஆர். கிருட்டிண சாஸ்திரி. இதற்குச் சான்றாக,

''சர்வக்ஞன் என்பான் செருக் குடையவனோ?
சர்வரிடமும் ஒவ்வொன்றாய்க் கற்றே - கல்வியில்
மேருவாம் அவன் சர்வக்ஞ''

எனும் உரைப்பாவை மேற்கோள் காட்டுகிறார்.

சர்வக்ஞருக்கு வழங்கிய பட்டப் பெயராக இருக்கலாம் என்பது சிலரின் ஊகம். ஆயினும் இக்கூற்றுக்குச் சான்றளிக்க யாரும் முன்வரவில்லை.

அனைத்தும் அறிந்த அறிவன் இறைவன் ஒருவனே, அவ் விறைவினை மனத்துள் நிறுத்திய குறியீடாகவும் இருக்கலாமன்றோ? ஆயினும் ஒன்று மட்டும் உறுதியாகத் தெரிகிறது. சர்வக்ஞர் பெயரில் தேவதையர் யாண்டுமிலர். இதனால் சர்வக்ஞன் இன்ன ஊரினன், இன்ன இறைவனின் அடியான் என்று சொல்லும் சான்றுகள் யாதுமில்லை.

''சர்வக்ஞன் ஒருவனவன் கர்த்தனே
மண்ணுக் கவன் தெய்வமே''

என்னும் அடிகளில் சர்வக்ஞரின் நிலை தெற்றென விளங்குகிற தெனலாம். எது எவ்வாறு இருப்பினும் சர்வக்ஞர் என்பது கவியின் பெயர் என்பதில் ஐயமில்லை.

முனைவர் எல். பசவராசு என்பவர் சர்வக்ஞரின் குறியீட்டுப் பெயர் ''பரமார்த்த'' என்கிறார். மூன்றடிகளால் ஆன பாடல்களைப் 'பரமார்த்த' எனும் தலைப்பில் திரட்டிக் கன்னட அறிஞர்களுக்கு புதிய கோணத்தைக் காட்ட முயன்றார். கி.பி. 1636-இல் வெங்க என்பவர் திரட்டிய ஓலைச்சுவடி களில் காணப்படும் 'பரமார்த்த' என்னும் சொல்லை அடையாளமாய் காட்டினார். ஆயினும் வெங்க வாழ்ந்த சமகாலத்தவரான சித்த வீரணார்யா திரட்டியுள்ள திரிபதிகளில் சர்வக்ஞர் என்னும் பெயரே காணப்படுகிறது.

''பெயர்களை குறியீடுகளாகக் காட்டிக் கொள்வது மரபே. அப்பெயர் தான் விரும்பும் கடவுளின் பெயராக இருக்கலாம் (உ.ம். கண்ணதாசன்) தனக்குப் பிடித்தமான ஒரு மாந்தனின் குறியீடாக (பாரதிதாசன், சுரதா) இருக்கலாம். பரமார்த்த என்பது தத்துவப் பெயர், தனியொருவனைக் குறிக்கும் சொல்லன்று. நாமறிந்த வரையில் தத்துவப் பெயர்களைக் குறியீடுகளாக யாரும் கையாண்டதில்லை'' என்கிறார் டாக்டர் எம். சிதானந்த மூர்த்தி.

உத்தங்கி சென்னப்பா அறுதியிட்டதைப் போல் சர்வக்ஞர் என்பது கவியின் பெயரும் குறியீடுமாகி நிலைத்துள்ளது. கீழ்க்காணும் இரண்டு உரைப்பாக்கள் இதனை மெய்ப்பிக்கின்றன எனலாம்.

சர்வக்ஞன் என்பான் செருக் குடையவனோ?
சர்வரிலும் ஒவ்வொன்றாய்க் கற்றதனால் - கல்வியில்
மேருவாம் அவன் சர்வக்ஞ.

ஒருவர் இன்றேல் இருவருண்டோ உலகில்
ஒருவனே சர்வக்ஞன் கர்த்தனே மண்ணில்
ஒருவனே தெய்வம் சர்வக்ஞ.

முதல் உரைப்பாவில் காணும் சொல் கவியின் பெயரெனில் இரண்டாவது பாடலின் இரண்டாவது அடியில் காணும் சரணத்தில் வருவது கவியின் விருப்பக் கடவுளின் குறியீடு எனலாம்.

உரைப்பாக்கள்

உத்தங்கி சென்னப்பா 1928 உரைப்பாக்களை கி.பி.1924-இல் திரட்டினார். அவற்றுள் 1309 திரிபதிகள் சர்வக்ஞர் யாத்தவை. பிற இடைச் செருகல்கள். சென்னப்பாவே மீண்டும் இலக்கியம் மற்றும் பண்பாட்டுத் துறையினருக்காக 1960-இல் உரைப்பாக்களை மேலும் சேர்த்தார்.

அண்மையில் இந்நூலாசிரியன் முனைவர் அக்பர் அலியிடம் மடல் தொடர்பு கொண்டபோது 'சர்வக்ஞ வசனங்க'ளின் எண்ணிக்கை ஏறக்குறைய இரண்டாயிரமெனப் பதில் விடுத்துள்ளார்''. (சர்வக்ஞர் உரைப்பாக்களை ஆய்வு செய்து 1980-இல் முனைவர் பட்டம் பெற்ற திரு. அக்பர் அலி மைசூர் பல்கலைக்கழக அஞ்சல்வழிக் கல்வி மையத்தில் பல்லாண்டுப் பணியாற்றியவர். ''சர்வக்ஞரின் சமுதாயப் பார்வை மற்றும் இலக்கியச் சாரம்'' எனும் இவரது நூல் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது).

'வெங்க' என்பவரின் ஓலைச் சுவடிகளின் மூலம் தான் ஐயந்திரிபறத் தெளிந்தவை என 937 உரைப்பாக்களை தெரிவு செய்தார். நூறுமுதல் நூற்றிருபதுவரை சேர்த்தாலும் சர்வக்ஞர் உரைப்பாக்களின் எண்ணிக்கை 1050 மட்டுமே'' என்கிறார் 'பரமார்த்த' என்னும் பெயரில் நூல் எழுதிய டாக்டர் எல். பசவராசு.

யார் யாரோ யாரிடமிருந்தோ பெற்றது - அவரவரதே தம்பால் வைத்துக் கொண்டிருப்பது என்ற வகைகளில் சர்வக்ஞர் உரைப்பாக்கள் காணக்கிடக்கின்றன. எனவே எதையும் தேவையற்றதென ஒதுக்குதல் கூடாதென்றும் சொல்கிறார் எல். பசவராசு. விவாதமும் கருத்தாய்வுமின்றி சிறப்புடைய அல்லது உண்மையான உரைப்பாக்களைத் தெரிவு செய்ய இயலாதென்கிறார். ஆயினும் போலி உரைப்பாக்கள் தன் நூலின்கண் இடம் பெற்றுள்ளதை அவர் மறுக்கவில்லை.

''பிறருடைய உரைப்பாக்களைச் சர்வக்ஞர் உரைப்பா எனப் படிப்பதால் பிழையில்லை. அவ்வாறின்றி சர்வக்ஞர் உரைப்பாக்களைப் பிறருடையதெனத் தள்ளிவிட்டால் அதன் பாதிப்பு பெரியது'' என்கிறார் டாக்டர் சிதானந்த மூர்த்தி. பசவண்ணர், அல்லம்ம ஆகியோர்தம் கவிதைகளின் இறுதி சீர்களில் தாங்கள் வழிபட்ட கடவுள் பெயர் வைத்ததை மரபாகக் காணமுடிகிறது. அல்லம்ம தனது உரைப்பாக்களை 'குகையீசனே' என்றும், பசவண்ணர் 'கூடல சங்கமதேவ' என்றும் பாடியதைப் போலவே சர்வக்ஞர் தனது உரைப்பாவின் இறுதியில் 'சர்வக்ஞ' என முடிக்கிறார். தமிழில் வழங்கும் 'வாலறிவ' என்னும் சொல்லுக்கு இதனை ஒப்பாகக் கூறலாம். சர்வக்ஞர் உரைப்பா ஏற்கனவே ஆங்கிலத்திலும் தெலுங்கிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது ஈண்டு நோக்கற்பாலது.

சர்வக்ஞர் உரைப்பா

1. கடவுள் வாழ்த்து

க. கணபதி வணக்கம்

1. *சந்திரனைக் கொண்டவன் நந்தியின் வாகனன்தன்
தொந்திமகன் கணபதியைப் போற்றியே - முன்னெடுப்பேன்
சந்தம்நிகர் உரைப்பா(ய்) சர்வக்ஞ.*

உ. சர்வக்ஞரின் முற்பிறப்பு

2. *முன்னைக் கைலாயத்தில் சிவனின் ஆளாக
என்னையே விளித்தனர் புட்பதத்தனென - இந்நாள்
மண்ணின் சால்பாலீண்டு சர்வக்ஞ.*

3. *அந்நாள் புட்பதத்தனென ஆண்டுப் பொலிந்தனன்
இந்நாள் சிந்தனையால் அறிவர்க்கு அறிவராகி
விந்தையில் நிற்பவன்நான் சர்வக்ஞ.*

ங. மண்ணுலகில் சர்வக்ஞர் பிறப்பு

4. *மக்களற்றக் குறையை மல்லம்மாளும் இடர்
மிக்குண்டே பசவனிடத் துரைப்ப - காசியுறை
முக்கண்ணனால் வந்தேன் சர்வக்ஞ.*

5. *தக்கதொரு பிள்ளைக்கு விதவையாம் மல்லம்மாள்
முக்கண்ணனீந்த கவளமுண்ண வந்தேன் மண்ணில்யான்
தக்கதுரைத்தேன் கண்டதையே சர்வக்ஞ.*

6. *மண்பாண்டத்துள் சமைக்கும் வேளை - மழையும்
மண்ணும் கலந்த பின்மாலை - ஈருயிர்கள்
ஒன்றுங்காலை உண்டானேன் சர்வக்ஞ.*

7. *அம்பலூரெனும் பதியில் குயவர் தெருவில்
செம்பகமன்ன சிற்றிடையாளைப் பசவரசன் துய்க்க
அம்பலம் வந்தேன் சர்வக்ஞ.*

8. விந்து விட்ட கன்றபோது சூலேந்தியவள்
மந்தென மாதம்பத்து சுமக்க - வளர்ந்தேன்
செந்நீரில் கலந்தே சர்வக்ஞ.

9. மாசூர் பசவனும் ஈசனை வேண்ட
காசி உறைந்தோன் தந்த வரத்தால்
மாசிலா துதித்தேன் சர்வக்ஞ.

௪. இளமை

10. வஞ்சனை தாக்க வெளிப்போந்தேன் இளமையில்
வெஞ்சின மின்றியே உலகை உணர்ந்தின்று
கஞ்சரனானேன் அறிவில் சர்வக்ஞ.

11. 'தா' என்பேன் தாயென விளியேன்
தாயென யான் விளிப்பின் - பார்மாதர்
தாயெனக் கென்பேன் சர்வக்ஞ.

12. எந்தையும் தாயும் எனை வளர்க்க
சந்ததி யாரென விளித்தார் - சிவகணத்திடை
வந்தவன் யான் சர்வக்ஞ.

௫. சர்வக்ஞர் உரைப்பா

13. கோடியேழு இலக்கமேழு ஆயிரம் ஏழொடு
எட்டுப் பத்துக்களால் எழுதினேன் உரைப்பா
கேட்டிடு வாய் சர்வக்ஞ.

௬. சர்வக்ஞரின் பணிவு

14. சர்வக்ஞனை அறிந்தோர் அனைவரையும் அறிந்தோரே
சர்வக்ஞனை அறிந்தும் அறியாதோர் - இப்பூவில்
செருக்குடையரே காண் சர்வக்ஞ.

---

8. மந்து = குற்றம்

10. கஞ்சரன் - கதிரவன்

11. சர்வக்ஞரின் தன்னலை விளக்கமாக இப்பாடலை ஏற்கலாம்.

12. மாலன் - மாலி இருவரும் சர்வக்ஞரின் பெற்றோர்கள், ஒரு சமயம் சர்வக்ஞரைப் பார்த்து, "நீ யார் பிள்ளை?" எனக் கேட்க, இவ்வசனத்தை பதிலாக உரைத்தார் என்பது கதை.

14. பூ = மண்ணுலகு

15. சர்வக்ஞன் எனும்யான் செருக் குடையவனோ?
பார்மாந்தரிடம் பற்பல கற்று - பட்டறிவின்
பர்வதமே யான் சர்வக்ஞ.

எ. நன்றி (உரைத்தல்)

16. மனத்துள் நல்நினைவு வாழ்வில் ஒருமையென
மனம்நிறையத் தந்தோன் - பேரழகின் சிவனை
மனம்போற்றியே தொழுவேன் சர்வக்ஞ.

15. இதுபோல் மேலும் சில உரைப்பாக்கள் உண்டு.

2. குருவின் சிறப்பு

க. குருஞானம்

17. நற்குருவின் ஆழ்ஞானம் என்னென்பேன் கொல்லோ?
பொற்புடை மண்ணில் அகப்புற ஒளியின்
ஆற்றல் மிக்குடையரன்றோ சர்வக்ஞ.

உ. குருவின் தேவை

18. தன்னுள் தணலறியா மரம்! மாந்தர்
தன்னுள் உறைபவனைக் - குருவின் அருளின்றி
தானறியார் காண் சர்வக்ஞ.

19. இருள் அகற்றும் ஒளியாம் சிவனை
குருமுகத்தானும் அறிதல் - கயிறசைய ஆட்டுவோனை
அறிதல் போலன்றோ சர்வக்ஞ.

20. தலைமழித்தல் மனையாளைத் துறத்தல் கோவணமும்
கோலுமேந்தி தவமிருத்தல் பயன்தாரா - குருவின்
தலையாய அருளின்றேல் சர்வக்ஞ.

21. முக்கண்ணனை இனங்காட்ட வல்லோன் குருவாம்
முக்கண்ணனும் இனங்காட்டுவன் குருவின் மேன்மை
தக்கார்பிறரென்ப பொய்யாம் சர்வக்ஞ.

22. பிறரை மதியாது தன்னாற்றல் மிகையென்றே
பிறர்முன் திறம்காட்டுவோன் - குருவின் முகமும்
அறியாது ஒழிவன் சர்வக்ஞ.

23. தன்னாற்றல் நிறையென்பர் எக்காலும் களித்திருப்பர்
தன்னுயிரின் மதிப்புமறியார்க்கு மண்ணில் - குருமுகம்
காண்ப தரிதாம் சர்வக்ஞ.

24. படிப்பால் பயனன்று உயர்பணியால் பயனன்று
பட்டறிவால் பயனன்று குருவின் நல்லெண்ண
நோட்டம் இன்றேல் சர்வக்ஞ.

௩. குருவின் இலக்கணம்

25. ஊருக்கு வழிகாட்ட யாரும் இருந்தாலென்?
பாரில் மெய்யறிவைப் புகட்டும் குருவும்
யாரிருப்பின் தானென் சர்வக்ஞ.

26. உறவு என்போர் உண்டுறங்கிச் செல்வர்
அறியாரவர் கொடுந்தளை களைய - குருவினும்
உறவு யாருளார்சொல் சர்வக்ஞ.

27. தந்தைக்கும் குருவுக்குமொரு வேற்றுமை காண்பாய்
எந்தை காட்டுவர் குருவினை - குருவென்பவரோ
பந்தமதைக் களைவார் சர்வக்ஞ.

28. தத்துவத்தை நாளும் உள்ளிருத்தி - குற்றமற
இத்தரையில் இரந் துண்ணும் சித்தனே
வித்தகத்து குருவாம் சர்வக்ஞ.

29. சிவ வழிபாடின்றிப் பவமுனை விட்டகலா
சிவ பூசையாற்றும் குருவும் - மண்ணில்
அவமிலா தெய்வமேகாண் சர்வக்ஞ.

30. பிரபுவே! சத்குருவே! காயமது பொய்யென
அறுத்தெறிந்தாய் மாயப் பாசத்தை - சீடர்க்கு
உறவில்நீயும் தாயன்றோ சர்வக்ஞ.

31. குருவுக்கும் இறைவனுக்கும் இடை வெளியுண்டு
குருகாட்டுவர் இறைவனின் உறைவிடம் - இறைவனும்
குருவைக் காட்டுவரோ சர்வக்ஞ.

௪. குருவின் பெருமை

32. தத்துவங்கள் அறுவகை ஆடவர் மூவகையினும்பரத்
தத்துவ அறிவே வேறெனக்காட்டும் குருவே
தத்துவ இறைவனாம் சர்வக்ஞ.

33. அரனைநீயும் மிகையாய் நம்புவ துமேன்?
உருவில்சிறிய அகத்தியனும் குருவை நம்பியன்றோ
பருகினன் திரைக்கடலையே சர்வக்ஞ.

34. கற்பகம் தருவல்ல! காமதேனு பசுவுமல்ல!
கற்சிலையு மல்லர் மாந்தர் - குருவும்
வெற்று மாந்தரல்லர் சர்வக்ஞ.

ரு. குருநிந்தனை கேடு

35. பெரியோன் என்றெண்ணற்க குருவை எள்ளற்க
ஊர்க்கணக்கனொடு பகைகொள்ளற்க கடன் வழங்கற்க
அரிய தங்கத்தை சர்வக்ஞ.

36. குருசொல்லே நல்லுரையாம் குருசொல்லே பக்தியாம்
குருசொல்லே புத்தேள் உலகாம் - மேன்மையும்
குருசொல்லே ஆம் சர்வக்ஞ.

37. குருவாகி நின்றக்கால் போற்றி வணங்காது
பருக்கையே இன்பமென வாழும் மாந்தர்
பன்றியினும் கீழாம் சர்வக்ஞ.

சூ. குருத்தொண்டு

38. காளையாய் ஊழியனாய் முன்னும் பின்னுமாய்
காலுக்குச் செருப்புமாய் எந்தையாம் குருவுடன்
காலமெலாம் இருந்திடுவாய் சர்வக்ஞ.

எ. குருவுக்குப் பயப்படு

39. சுடுநீரும் சுழற்காற்றும் பாம்பும் சிம்மமும்
ஒடுங்கும்காண் குருவின் சொல்லுக்கஞ்சி - மாந்தர்
கெடுவர் அஃதறியாது சர்வக்ஞ.

40. பட்டமரமும் கற்பகமாம் மலடும் காமதேனுவாம்
மூடர்தம் கூட்டமும் பிரணவமோதுமாம் - நற்குரு
இட்ட ஆணைக்கஞ்சி சர்வக்ஞ.

41. குருசேவையில் நில்லாது பணிவிடை ஆற்றாது
பெறுவேன் மேலேறி முக்தியெனில் - அஃது
மேருமலையோ சொல் சர்வக்ஞ.

அ. குருவுரையின் தேவை

42. பசுங்கொடி பற்றியகுருடரும் பாழ்ங்குழியில் வீழ்வதன்ன
பசுமையன்ன குருவின் நல்லுரைகள் இன்றேல்
பசுமையன்ன துறக்கமுமில் சர்வக்ஞ.

43. பொல்லார்க்குத் தீயவுலகாம் நல்லார்க்கு மேலுலகாம்
பொலிவுடை குருமொழியால் தானுலகு சுழல்வதின்றேல்
தொல்லுலகு எரிந்தொழியும் சர்வக்ஞ.

44. தாய்மடிப் பாலருந்த கன்று மறியாதோ
தாய்மடியாம் குருமொழி பருகும் கன்றே
மெய்சீடனாம் அறிவாய்நீ சர்வக்ஞ.

45. வெய்யில்பட்ட வெண்பூண்டு காய்ந்து உதிர்வதன்ன
பொய்யில்லா குருமொழியால் அறுபடும் - பிறப்பெனும்
காய்ந்த கொடியும் சர்வக்ஞ.

46. வெள்ளைப் பூண்டும் உடல்நலம் பேணும்
உள்ளமுயர்ந்த குருமொழியோ பற்றிய பாவமும்
களையும் காண் சர்வக்ஞ.

47. பொல்லார்க்குத் தீயவுலகாம் நல்லார்க்கு மேலுலகாம்
நல்குரு மொழியால் தானுலகு உய்வதல்லால்
உலகு பொசுங்கும் சர்வக்ஞ.

ஆ. குருவுரையின் இலக்கணம்

48. வெண்ணெய் உருகி வீநெய் யாதலொப்ப
ஞானியாம் குருவின் நல்லுரையால் - துறக்கம்
எஞ்ஞான்றும் தப்பாது சர்வக்ஞ.

49. பரமன் என்பானும் விலகியே இருப்பனோ?
பரமனும் அரவணைப்பான் துறக்கம் - குருவின்
உரையைக் கேட்டக்கால் சர்வக்ஞ.

---

48. வீ = விரும்பும்

50. அரைக்க அரைக்க மணக்கும் சந்தனம்போல்
அறிவில் உயர்ந்த குருவுரையால் - காண்பாய்
துறக்கமும் உலகில் சர்வக்ஞ.

51. தயிர்கடைய வெண்ணெய் திரள்வது போலும்
பயிராம் குருவின் உரையால் - துறக்கம்
மெய் வசமாம் சர்வக்ஞ.

52. உரைத்ததை உரைப்பர் கேட்பதையே கேட்பரவ்
உரைதனில் உவகைக் காண்பர் - குருவினருள்
உரையே வேறாம் சர்வக்ஞ.

கo. நற்குருவும் தீக்குருவும்

53. சந்தனத்தின் நாற்றமதைப் பன்றியும் அறியுங்கொல்?
விந்தனை அறியா குருவுக்கு - நாளும்
நிந்தனை தப்பாது சர்வக்ஞ.

54. ஐம்பொறியே உறவுகளாம் எண்நீக் குணங்கட்கு
ஐம்படை விடுத்தன்ன விளங்கும் குருவே
ஐயனுமாவர் மண்ணில் சர்வக்ஞ.

55. ஒன்றினுள் அடங்கு மனைத்துமென அறிந்தகுருவும்
ஒன்றியே சீடனுக்கு உரையாதிருப்பின் - சீடனைக்
கொன்றதற் கொப்பாம் சர்வக்ஞ.

கக. சிறந்த மாணவனும் இழிந்த மாணவனும்

56. 'நான்நானென்ப' மறைதல் நன்றாம் அறபக்தியில்
நானெனும் நோயகலின் - குருவின் நல்லுரையும்
தானே வந்தடையும் சர்வக்ஞ.

57. கேடுகள் கோடியகலும் காமதேனுவாம் குருவை
நாடியே அழைத்துண்ணும் சீடருக்கு - நாளும்
தேடிவரும் சுகம் சர்வக்ஞ.

---

54. புராணக் கதை
ஐம்படை : திருமாலின் படைகளாகிய உருளை வாள், வில், தடி, சங்கு
ஐயன் : கடவுள்

58. முற்றும் பக்தியிலா சீடனுக்குரைத்த பொன்மொழிகள்
வற்றிய குளம்நம்பி - உயர்ரக நெல்லின்
நாற்றை நட்டதுபோலாம் சர்வக்ஞ.

59. ஈனப்பிறவி ஞமலியும் உண்ணுமோ தெங்கின்காய்
ஞான மற்றார்க்கு குருவின் உரையும்
ஊனமாம் காண் சர்வக்ஞ.

கஉ. நற்குரு மாணாக்கன் உரையாடல்

60. கட்டைகள் இரண்டைக் கட்டிவைப்பின் பயனென்?
கட்டைகள் இரண்டை உரசின் - தீயும்
சட்டெனப் பற்றும்காட்டை சர்வக்ஞ.

61. துறக்கமறியா குருவும் தெளிவறியா சீடனும்மென்ப
துறந்தது போலாம் நீதியும் - குருடன்
இறங்கியது போலாம்நீருள் சர்வக்ஞ.

62. உரைக்கும் குருவுக்கு செவியுறும் மாணவன்நன்று
உரைப்பதை செவியுறா - குருமாண வருறவு
ஒருமையுறா காண் சர்வக்ஞ.

63. குருவினை வேண்டி அவருரைப்பதைக் கேட்பதினும்
குருவே மனமுவந்து உரைப்பதைச் செவிமடுப்பது
மேருவென் றறிவாய் சர்வக்ஞ.

64. நீகேட் காமலே உரைப்பான் ஞானியாம்
நீகேட் குங்கால் வேற்றுரைப்பான் - அவ்வுரை
நீகேட் பினும்மூடனே சர்வக்ஞ.

கங. குருவருள் அடியார்க் குயர்வு

65. சிறுநாரும் வண்கொடியாம்; சிவயிந்திரரோ துணையாம்;
அரனீந்த புல்லிலையும் மலையாம் - குருவின்
கருணை இருப்பின் சர்வக்ஞ.

66. குருவே உமையெண்ணி எரிதீயில் புகினும்
எரிதீயும் நீராம் உன்அய்யனின் அன்புக்
கருணை உள்ளவரை சர்வக்ஞ.

67. உணவுக்கு விழையாதிரு ஐம்பொறியில் வீழாதிருமுக்
கண்ணனை விடாதிரு ஞானகுருக் கருணையும்
உன்வசமாம் காண் சர்வக்ஞ.

68. பற்றின்பத்தில் மூழ்காது பற்றிடரில் துவளாது
பற்றற்றவன் இணையடிப் பற்றின் - குருவருள்
எற்றைக் குமுண்டாம் சர்வக்ஞ.

கச. பணியாதார்க்குக் கேடு

69. ஈரவிறகினை எரிப்பின் ஈனுமோ அனலும்?
குருவருளு மெய்துவரோ மாந்தர் - ஐம்பொறிவாய்
குறை களிருப்ப சர்வக்ஞ.

70. உடல் வருத்தியென்ன? சாம்பல் தரித்தென்ன?
அடவி சென்றென்ன? குருவின் நல்லுரை
விட்ட கன்றபின் சர்வக்ஞ.

கரு. குருவின் காட்சியே பேறு

71. பொன்மாற்றம் செய்கல்லுக்கு காலம்பல தேவையன்று
பொன்மாற்றம் செய்கல் போன்றவராம் - மாணவர்க்குக்
கண்ணெனத் திகழ்குருவும் சர்வக்ஞ.

கசு. குருவினடியே வீடு

72. துயர் வாழ்வெனும் பாழ்கிணற்றுள் வீழ்ந்தோர்
துயர் களைந்து வெளியேற - குருவழியே
உயர் படியாம் சர்வக்ஞ.

73. குருவடி பணிய வாழ்வு மொளிரும்
தருவாயில் சுகமும் நிலையாகும் - கைலாயமுன்
இருப்பிட மாகும் சர்வக்ஞ.

74. குருவடிச் சேவை கிடைப்பின் - உலகில்
பெருவினையு மகலும் - கற்பூரக் குன்றெரிந்து
உருக்குலையு மாறுபோல் சர்வக்ஞ.

---

68. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு - திருக்குறள்.

73. தருவாய் = தக்க சமயத்தில்

கஎ. குருவினைத் தொழுதல்

75. பற்பல யோனியுள் பிறப்பெடுத்தேன் தடம்காணா
குற்றமகற்றும் குருவே பிறப்பெனும் வலையினின்று
பற்றியெனை மீட்பாய் சர்வக்ஞ.

76. புலிவாய்ப் பட்டே கதறும் மானானேன்
புலிவாய் மீள்வதரிதாம் குருவே மாயையெனை
பற்றிக் கொள்வளே சர்வக்ஞ.

77. எண்ணிலடங்கா சாத்திரங்கள் பலகற்றும் - பற்றும்வலை
என்னை விடவில்லை இடர்நீக்கும் நற்குருவே
என்னை மீட்பாய் சர்வக்ஞ.

78. உடலின்பம் போற்றி உயர்லிங்கம் நான்மறந்தேன்
மடமையுள் களங்கமுற்றேன் குருவே - வாழ்வெனும்
இடரகற்று இந்நாள் சர்வக்ஞ.

79. அப்பிறப்பில் என்றோ யான்செய்த சிறுசெயலால்
இப்பிறப்பில் தொடுகின்ற பேறடைந்தேன் - குருவே
இப்பிறப்பெனும் தளையறுப்பாய் சர்வக்ஞ.

80. பாவமே என்னுடலாம் களைவது உன்செயலாம்
பாவஆழ்கிணற்றுள் உழல்கின்றேன்-நீட்டும் கரம்பிடித்தே
பாவியை மீட்பாய் சர்வக்ஞ.

81. மேன்மைக் குருவே உனையன்றி உளரெவரோ
உன்னையான் காண்பேன் தினமும் - எனக்கு
இன்னுமேன் மானிடப்பிறப்பு சர்வக்ஞ.

கஅ. குருவினால் பாவம் நீங்கும்

82. கற்பூரக் குன்றெரிந்தும் பூசிடவோ நீறில்லை
பொற்புடை குருவடியைப் போற்றிவந்தால் பாழ்உலகப்
பற்றுக்குப் பற்றும்தீ சர்வக்ஞ.

83. குருவின் நல்லுரையைக் கொண்டாடும் ஒருவர்க்கு
உளிபட்ட பாறை உருக்குலைந்து போவதைப்போல்
அறுபடுமே பாவம் சர்வக்ஞ.

84. ஆற்றல் மிகையால் ஆல்சாயும் வேரொடு
ஆற்றலுடை குருவின் அருளுரையால் வினைசாயும்
போற்றுவாய் நாளும் சர்வக்ஞ.

85. குருவே நல்லுறவாம் குருவே நற்தெய்வமாம்
குருவே நற்பேறாம் பல்வே றுலகுக்கும்
குருவே வீடென்ப சர்வக்ஞ.

3. இலிங்கத்தின் மேன்மை

க. இலிங்கமே அனைத்தும்

86. நல்முலை கொடிகுண்டியென எங்கும் நிறைந்துள
எல்லாம் வல்லோனை சிந்தையில் அறிவோன்
நல்வேதம் அறிந்தவனாம் சர்வக்ஞ.

87. இலிங்கம்தரித்தோன் உயிர்தரித்தோனாம் மேன்மை
உடைத்தோனாம்
உலகின்பம் துய்ப்பவனு மவனாம் - பிறப்பெடுப்பதுவும்
இலிங்கம் வழியாம் சர்வக்ஞ.

88. ஓங்கார முகமின்றி உடலும் தானின்றி
ரீங்காரமாய் மேல்கீழென நீக்கமற நிறைந்தோனை
ஈங்கறியார் அரிபிரம்மனும் சர்வக்ஞ.

89. இலிங்கத்துக்குக் காட்டிக்காட்டியே உண்போனே கேளிது
இலிங்கமும் உண்ணுங்கொல்லோ? மூடனே இஃதறிந்து
நலிந்த அடியார்க்கீவாய் சர்வக்ஞ.

உ. பக்தி

90. உருத்திராக்கம் திருநீறு தரிக்க - மறையும்
பெரும்பா வங்கள் உலகில் - இருக்குமிடம்
வருவான் சிவனும் சர்வக்ஞ.

91. சிவபூ சனைசெய்தும் சிவனைப் போற்றியும்
சிவசிந் தனையே நிலையென்றும் இருப்பார்க்குச்
சிவபதவியாம் காண் சர்வக்ஞ.

92. குருலிங்க யோகியென்பர் சிவனொத்த வடிவராம்
அறிந்தும் உணர்ந்தும் வழிபடும் அடியார்
அரனடியை அடைவர் சர்வக்ஞ.

---

89. நட்டகல்லைத் தெய்வம்என்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து முணமுணென்று சொல்லுமந்திரம் ஏதடா!
நட்டகல்லும் பேசுமோ நாதன்உள் இருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ

- சிவவாக்கியர்

93. இலிங்கமுடை கோயில்நன்று கங்கைக் கரைநன்று
இலிங்கம் தொழுவோர்சொல் நட்பும் மிகநன்றாம்
இலிங்கவடியா ருள்நாளும் சர்வக்ஞ.

ரு. அனைத்தும் சிவமே

94. இலிங்கமெனும் மனமாகி இலிங்கமெனும் நினைவாகி
இலிங்கத்துள் மொழிப் பார்வையெனச் சங்கமிப்போர்
இலிங்கமே ஆவர் சர்வக்ஞ.

95. மனத்துள் பற்றினால் பற்றுவன் சிவனும்
மனத்துள் பற்றாது வாயால்போற்றின் சிவனுந்தான்
மனம்விட் டகல்வான் சர்வக்ஞ.

96. இன்ப துன்பங்களைச் சிவன்பால் விட்டுபேர்
இன்பப் பணியில்மூழ்கும் மாந்தரே - வீடெனும்
இன்பம் பெறுவர் சர்வக்ஞ.

97. வனமே கதியென எண்ணும் களிறன்ன
மனமே சிவனென நினையின் - பஞ்சையென்ன
குணவானென்ன கீழென்ன சர்வக்ஞ.

98. சீர்நன்று துர்மரமணமிலா மகன் நன்று
சீரிளமை நன்று இலிங்கமதை பக்தியுடன்
நேர்நின்று தொழுதல்நன்றாம் சர்வக்ஞ.

99. பரமனும் உயிரும் புலனாகா துள்ளிருக்க
கற்சிலையை நாளும்தொட் டணைத்தல்உயிர் மூச்சாம்
என்றுரைப்பான் மூடனன்றோ சர்வக்ஞ.

சு. படையல்

100. சிவனமுதை எச்சிலென எறியாமற் கொள்வோர்க்கு
சிவனுலகு நிலையாம் - பூவுலகில் அவருந்தாம்
வீணே போல்வர் சர்வக்ஞ.

101. துய்க்கும் பொருள் துய்த்து - உலகில்
துய்ப்பதைச் சிவனுக்கு அன்போடு படைப்பவரே
எய்துவர் மேன்மை சர்வக்ஞ.

102. திங்களொன்றில் இறந்த நாயின் உடலை
தங்கு தடையின்றி உண்டதன்னாம் - இலிங்கமதை
நீங்கியே உண்பதுவும் சர்வக்ஞ.

103. படைத்தவனுக்குப் படைக்கா துண்டால் என்னாம்?
அடைவர் கேடு அடைவர் தளை - இறைவனோ
இஃதறியான் காண் சர்வக்ஞ.

104. அஞ்சாமல் பருகின் விடமும் அமிழ்தாம்
அஞ்சியஞ்சியே அமிழ்தம் பருகினும் - அஃது
எஞ்சிய ஆலமாம் சர்வக்ஞ.

ரு. அடியார்

105. நவரசம் கவிக்கழகு வாழ்வோர்க்கு நிலமழகு
நவரசம் துறத்தல் குருவுக்கழகு உலகுக்கு
சிவனடியாரே அழகாம் சர்வக்ஞ.

106. எரியுந்தீயில் தெளிநெய்யொடு கற்பூரம் சேர்ப்பின்
திரியாமல் நின்று எரிவதன்ன - பேதங்கள்
எரித்தவரே மெய்யடியராம் சர்வக்ஞ.

சா. சிவனடியார்க்கு மறுபிறவியில்லை

107. ஆசைத்துன்பம் களைந்து ஐம்பொறிப்பிழை அறுத்து
ஈசனொடு ஒன்றிணையும் அடியார்க்கு - வாழ்வெனும்
பாசக் கயிறுமுண்டோ சர்வக்ஞ.

108. சிவனே கணவன், தானே மனைவியென
சிவனுள் கூடாமற் கூடும் சிவனடியார்க்கு
எவனுண்டு மறுபிறப்பு சர்வக்ஞ.

109. பிரம்மன் ஒருவனே மூவராயினர் பின்னென்ப
தரமாஞ் சொல்லொழுக்கத்துள் ஒன்றாகும் அடியார்க்கு
பிரம்மனும் அன்புடையன் சர்வக்ஞ.

---

107. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார் - திருக்குறள்

எ. ஒன்றிப்பு

110. கற்பூரமங்கை தீயெனும் பதியொடு இணைவதன்ன
நற்பரமனில் உயிர் கலக்கு மடியார்க்கு
உற்றத்துறக்க முண்டாம் சர்வக்ஞ.

111. ஊனுடல் உடையனல்லன் இறையுணர் வற்றவன்தான்
ஊனுடல் குணவாசைக் களைந்தோர் அன்றேமற்
றூனுடலற்ற இறையாளர் சர்வக்ஞ.

112. உடலுறை தத்துவத்தைத் தெளிவுறத் தானறிந்து
உடலுறை வதைநம்பின் துறக்கமும் உலகில்
திடமாம் என்றறிவாய் சர்வக்ஞ.

113. மண்வாழ் தேகமழிய வான்பாதை தான்கடந்தே
வானோருடன் ஒருமை கொண்டவனே ஆங்கு
மன்னுதல் ஆவன் சர்வக்ஞ.

114. இலிங்கமே காட்சியாம் இலிங்கமே நிலையாம்
இலிங்கமே அனைத் தின்பமாம் என்போர்
இலிங்கமே ஆவர் சர்வக்ஞ.

115. இரப்போர் தறுவாயறியார் கீழோர் மதியறியார்
வறியோர் பயமறியார் தானென் பதறியார்
இறைவனுள் கலந்தோர் சர்வக்ஞ.

116. ஐம்புலனுக் கடிமையாய் அல்லலுறும் மானுடனே
ஐயனை நாளும் நினைந்தே நெறியொழுகின்
ஐயன் நீயாவாய் சர்வக்ஞ.

4. இலிங்க வழிபாடு

க. இலிங்கச்செய்தி

117. அங்கிங் கென்றில்லை மேலில்லை கீழில்லை
தங்கு தடையில்லை தப்பில்லை இலிங்கத்துக்கு
தங்கவொரு கோயிலுமில்லை சர்வக்ஞ.

உ. சிவ வழிபாடு

118. ஆடையற்ற மாந்தன் இலிங்கமற்ற உடல்
மடைநீர் சொரியா சிவபூசை இம்மூன்றும்
உடையதாம் இழுக்கு சர்வக்ஞ.

119. அடிமுதல் முடிவரை பயன்தரு தருவைப்போல்
அடிபணிந்து சிவநெறி நின்றாற்றும் பூசனையால்
தேடிவரும் பெருமை சர்வக்ஞ.

ந. உள்ளம் ஒன்றிய சிவபூசை

120. உடற்றாமரை மெத்தை உயிர்மாணிக் கமேலிங்கம்
உடலுறை மனமலரால் சிவபூசை ஆற்றுவோனே
கடவுள் என்பேன் சர்வக்ஞ.

121. உயிரெனும் இலிங்கமதை அன்பால் அறிந்தோர்க்கு
பொய்ப்பிறப் பொன்றில்லை அச்சமில்லை ஐம்புலனால்
மெய்யாட்டங் களுமில்லை சர்வக்ஞ.

122. பழுத்த விளாங்கனி தோடுவிட் டகன்றதைப்போல்
பழுதிலா இலிங்க மறிந்தோன் புறவாழ்வும்
பழுதற்ற வாழ்வன்றோ சர்வக்ஞ.

123. மனமொன்றிய சிவபூசை பயக்கும் நன்மை
மனம்திரிந்தே கெடவேண்டா முலகில் - தீவினையும்
மனத்தைக் கெடுக்கும் சர்வக்ஞ.

ச. பக்தியற்ற வழிபாடு வீண்

124. நாளும் பேசுகின்றநா சண்டைக்குநாடும் கரங்கள்
நாளுக்கொரு சிந்தனையில் உருட்டுகின்ற செபமாலை
நாளும் கேடுடைத்தாம் சர்வக்ஞ.

125. மணியுருட்டும் விரல்கள் செபிக்கும் தீவாய்
மனமோ நினைக்கும் கோடியென்ப - பாழூரின்
ஈனநாய்க் கீடாம் சர்வக்ஞ.

126. கொல்லும் (ப)கையென மெல்லும் வாயென செபிப்போனும்
பொல்லா நினைவுகள் சூழ்மனத்துள் துதிப்போனும்
கல்லா புலையனே சர்வக்ஞ.

127. எண்வகை பூசைகள் செய்தென்? மனக்
கண்ஒன்றிய நிலையது அற்றுப்போயின் - வழிபாடும்
வீண் என்பாய் சர்வக்ஞ.

128. வகைவகைக் காட்சியால் பயனென்? தியான
வகையறியா சிவபூசனை - பாழூரில் எரிகின்ற
தகையிலா குடில்போலன்றோ சர்வக்ஞ.

ரு. அறிந்தொழுகு

129. இலிங்கத்தின் உணவை தானுண்டு உண்ட
கலந்தனில் கையலம்பியே எச்சிலைக் (மண்) கொட்டும்
நலிந்த மூடரைக்காண் சர்வக்ஞ.

130 பலகற்றும் பயனென்? பட்டுத் தரித்தென்?
குலத்தில் மறவர் என்றுரைத்தென்? இலிங்கப்
பலன் கிட்டாதாயின் சர்வக்ஞ.

131. தன்னுள் உறைகின்ற இலிங்கமதை மறந்தே
தண்கங்கை கோதாவரி காவிரி யமுனையில்
தான்மூழ்கின் பயனென் சர்வக்ஞ.

---

129. வீர சைவர்கள் தாங்கள் உண்ட பாத்திரத்தில் கையலம்பி அந்நீரை நிலத்தில் கொட்டாமல் குடிப்பதே வழக்கில் இருந்தது.

132. கல்வி கேள்விகளேன்? விடுகதை பழமொழிகளேன்?
பல்கிய புராணங்களு முனக்கேன்? இலிங்கத்தின்
நல்தடம் அறியாது சர்வக்ஞ.

133. காண்பாய் பிறரை தரிப்பாய் இலிங்கம்
மாண்புற தொழா மூடனே - இலிங்கம்
தானழிக்கும் கனலாம் சர்வக்ஞ.

134. சொல்லில் உயர்ந்து செயலில் தாழ்ந்தால்
ஆலெனக் கொண்ட இலிங்கமே - படமெடுத்துக்
கொல்லும் நாகமாம் சர்வக்ஞ.

கூ. சிவத் துறவிக்கு குலமில்லை

135. குலம்கெட்டு வாழ்வோர் குலங்காக்கும் தகையரோ
குலமறியா துறவியே - சிவனை வழிபடும்
குலமாவர் மேன்மையில் சர்வக்ஞ.

136. நாற்றமுடை ஊனுடலொரு என்பின் கூடுஆம்
நாற்றத்தின் காயத்துள் ஊனத்தின் உயிரிருக்க
வேற்றுமை தேடுவரோ சர்வக்ஞ.

137. பலமிலா எலும்புடலுக்கு தோலொரு போர்வை
மலமூத்திரக் கிருமிகள் கொண்ட உடலுக்கு
குலமும் ஏதய்யா சர்வக்ஞ.

5. இறைநலம்

க. இறைவன் ஒருவனே

138. அத்தெய்வம் இத்தெய்வம் உயர்தெய்வமென வேண்டா
இத்தரை உயிர்களுள் நிறைந்தோனே - எத்திக்கும்
உத்தம தெய்வமாம் சர்வக்ஞ.

உ. கடவுள் முற்றும் உணர்ந்தோர்

139. முகிலின் பல்தோற்றம் மயிற்பீலியில் ஓவியம்
அகில்மலர் இலைகளில் காணும் வண்ணங்கள்
வகிடெடுத்துக் கொடுத்ததுயார் சர்வக்ஞ.

140. விலக்கிய தெய்வமுன் அழுதும் பயனில்லை
உலகீன்ற ஈசனைப் போற்றினால் - ஈவான்
பலப்பல பின்னாளில் சர்வக்ஞ.

141. பெருங்காயத்துள் மணமும் தெங்கினுள் நீரும்
கருங்குயில் வண்டின் குரல்வளையில் - வைத்ததுயார்
அருமிசையை சொல் சர்வக்ஞ.

142. கள்ளியில் பாலும் முட்புதருள் தேனும்
எள்ளினுள் எண்ணெயும் இருக்க ஈசனை
எள்ளி நகைப்பதுவோ சர்வக்ஞ.

143. இரந்துண்ணும் தெய்வம் மனிதர்க்கு வரந்தருமோ?
இரப்பார்பால் இரப்பர் செல்வதுண்டோ? இஃதறிந்து
அரனை வணங்குதும் சர்வக்ஞ.

144. பல்வாய் அசைய பற்பலதெய்வம் தொழுதலினும்
உள்முகமாய் சிவனைப் போற்றின் - நாளும்
உள்ளபடி ஈவான் சர்வக்ஞ.

ங. உருவ வழிபாடு இழிவுடைத்து

145. உண்ண வருகின்ற அடியார்க்குக் கொடுக்காமல்
உண்ணவியலா இலிங்கம்முன் படைத்துத் - தொழுகின்ற
உன்மத்தரைப் பாராய் சர்வக்ஞ.

141. அரு = உருவமற்ற

146. குண்டுக் கல்லுக்கு மல்லிகைப் பரப்பி
அண்டியே தலைமுட்டித் தொழுவார்க்கு - நெற்றியில்
கண்டிடுமே வடுவும் சர்வக்ஞ.

147. நல்மனத்துள் உறைஇலிங்கம் மறந்தே - வழியோரம்
கல்லைத் தொழுவர் தெய்வமென - மனமே
கல்லான மூடரைக்காண் சர்வக்ஞ.

148. கல்கல்லென்றே யுரைப்பீர் கடவுளுண்டோ அக்கல்லுள்?
கல்லில் உருவழகை நிலைநாட்டிய - குருவின்
நல்லுரையே தெய்வமாம் சர்வக்ஞ.

149. தன்னுள்ளுறை இலிங்கத்தைத் தொழுதல் அறியான்
துண்டித்துச் செதுக்கிய சிலைமுன் - சிரம்சாய்க்கும்
துன்பத்தைக் காண்பாய் சர்வக்ஞ.

150. ஆதிபகவனை மனத்துள் நிறுத்தி உருகிடார்
வீதிக்கல்லைப் பதியாக்கித் தொழுகின்ற மதியில்லாகீழ்
சாதியோரைக் காண்பாய் சர்வக்ஞ.

௪. முக்கடவுளரை உணர்தல்

151. உயிர்த்தலுக்கு பிரம்மன் உய்விக்க மாலவன்
உயிரழிக்க உருத்திரன் - இவர்தம் இயல்புகள்
நீயறிவாய் அன்றோ சர்வக்ஞ.

152. மண்பெண் பொன்னெனும் வலையைப் பின்னி
மண்வாழ் மானிடரைப் பிணைத்துள்ள - சடைமுக்
கண்ணனைப் பாராய் சர்வக்ஞ.

௫. பிரம்மன் வல்லவனல்லன்

153. பிரம்மனே படைப்போன் என்றெண்ணும் மூடனேகேள்
பிரம்மனின் மனைவி நாசியற்றிருக்க - படைக்காததுமேன்
பிரம்மனும் அஃதை சர்வக்ஞ.

154. படைத்தவன் பிரம்மனெனும் பற்று வேண்டற்க
படைத்தவன் சிரத்தை சிவனறுக்க - பிறிதொன்றைப்
படைத்துக் கொள்ளாததேன் சர்வக்ஞ.

155. காக்குங்கடவுள் அரியும் தோற்பதில் என்றெண்ணற்க
நோக்கினன் தன்மகன் சிவனால் சாவதை
காக்கத் தவறினன் சர்வக்ஞ.

சா. திருமால் வல்லவனல்லன்

156. உலகம்பத்தைக் கைசுமந்து ஆநிரைகள் காத்து
பலவகையால் பாண்டவருக் கடியாளாகிய பரந்தாமனும்
பலர்போற்றும் தெய்வமெவண் சர்வக்ஞ.

எ. சிவனே எல்லாம் வல்லவன்

157. பிரம்மனும் அரியும் அரனின் படைப்பே
அரசர்க்குக் குடியும் இணையோ? யாருளார்
அரனினும் உயர்ந்தவர் சர்வக்ஞ.

அ. சிவமேன்மை

158. உயர்ந்தோர் நாட்டுக்காம் அனுமன் சிரிப்புக்காம்
உயர்திருமால் அடியாருள் இருப்பான் - முக்கண்ணனோ
தெய்வமாம் காண் சர்வக்ஞ.

159. பொன்னினும் பொருளில்லை பரிதியினும் ஒளியில்லை
சண்முகஅண்ணனுக் கிணையில்லை தகையினில் -
பிறைசூடியமுக்
கண்ணனுக்கு நிகர்தெய்வமில் சர்வக்ஞ.

160. நிலம் நீரிருக்க நீள்துயிலும் கொள்ளுவரோ?
நிலமீது சிவனிருக்க பிறதெய்வம் நம்புவோர்
நிலமீது மூடரேகாண் சர்வக்ஞ.

161. கரவினும் களவில்லை கேள்வியினும் வலிமையில்லை
எரிகதிரினும் ஒளியில்லை பற்பல தெய்வங்கள்
பரமனுக் கிணையில்லை சர்வக்ஞ.

---

155. தோற்பது + இல் = தோற்பதில்

158. கருநாடக கிராமிய ஆட்டங்களில் நகைச்சுவை பாத்திரத்தை 'அனுமன்' 'அனுமந்தன்' என்றழைக்கின்றனர்.

162. மொழியினும் மேலில்லை அடிமையினும் கீழில்லை
இழிகரவினும் தாழ்வில்லை தெய்வங்கள் பிறிதில்லை
அழிவிலா ஈசனினும் சர்வக்ஞ.

163. நித்திரையினும் சுகமில்லை இடரினும் பகைவரில்லை
இத்தரையில் வேதப்பொருளினும் பேச்சில்லை - சிவனினும்
சத்தானப் பொதுக்கடவுளுமில் சர்வக்ஞ.

164. அன்னையினும் ஆற்றுவோரிலர் அறிவிலியினும் மூடரிலர்
அணையா சோதியினும் விளக்கில்லை - நெற்றிக்
கண்ணனினும் வேறிலர் சர்வக்ஞ.

165. வண்டினும் கறுப்பில்லை எலுமிச்சையினும் புளிப்பில்லை
தன்னம்பிக்கையினும் குணமில்லை தெய்வத்துள்
சிவனுக்குத்
தன்னிக ரில்லர் சர்வக்ஞ.

166. கரியினும் கருப்பில்லை ஞானத்திலும் உயர்வில்லை
அரிய கல்வியினும் செல்வமில்லை - தெய்வத்துள்
உருத்திரனினும் வேறிலர் சர்வக்ஞ.

167. தரையைத் தேராக்கி பிரம்மனைச் சாரதியாக்கி
திருமாலை வில்லம்பாக்கி முப்புர மாண்டவனுக்கு
நிகராவர் யாரோ சர்வக்ஞ.

168. உண்மைக்கு மாறில்லை சிந்தைக்கு நிலையில்லை
தன்கையன்ன இதமான தொன்றில்லை - சிவனினும்
விண்மண்ணில் நிலைத்தோரில் சர்வக்ஞ.

6. பக்தியின் மேன்மை

க. பக்தியே சிறந்தது

169. பக்தியே முக்தியாம் பக்தியே சக்தியாம்
பக்தியும் பற்று மழியின் - மண்ணில்
பக்தியே இல்லை சர்வக்ஞ.

170. பக்தியே விதையாம் முக்தியே பலனாம்
உத்தியெனும் மரமேறின் - இம்மையில் உண்டாம்
முக்தியின் பயனும் சர்வக்ஞ.

உ. சிவனருள் இன்றேல் அனைத்தும் வீணே

171. வருவதும் போவதும் வரங்கள்பல பெறுவதும்சிவன்
அருளெனும் நற்பேற்றின் பயனாம் - அஃதின்றேல்
தருவதும் பெறுவதுமில் சர்வக்ஞ.

172. மருந்தும்மந்திரமும் இரசகுளிகையும் திருத்தும் நோயாயினும்
திருத்தமும் திருத்து மறிவும் - சிவனின்
அருளின்றி ஆகாதுகாண் சர்வக்ஞ.

173. கொடுப்பது திரும்பா இட்டதும் மறையும்
எடுப்பதுவும் தங்காது கையில் - சிவனிங்கு
கொடுத்திலன் ஆயின் சர்வக்ஞ.

174. சுரம்தாக்கிய மனிதனுக்கு சுவைப்பாலும் வேம்பாம்
நரகம்வீழ் நீசர்க்கு சிவபக்தியோ கடுவேம்பாம்
தரத்தில் நாளும் சர்வக்ஞ.

175. அரிநாமம் மொழியாமல் சிவனை நினையாமல்
அரனின் கருணை இல்லாமல் வாழ்விங்கு
அரிதாம் காண் சர்வக்ஞ.

176. அனைவருமிங்கு சிவனென நினைப்பதும் பாழாம்
அனைவரும் கைலாயமேகி - சிவனை மறப்பது
அனைவருக்கும் பாழாமாண்டும் சர்வக்ஞ.

177. வனம்நாடி வாழ்நாள் கழித்து - எக்காலும்
குணம்நாடி அன்பு செய்யார்க்கு - சிவன்
மணம்நாடி காப்பனோ சர்வக்ஞ.

178. திடமொடு காடமர்ந்து மவுனத்துள் இருப்பினும்
நடத்தையில் சிவனை மறப்பின் - சுவையிலா
அடிசிலுண்டது போலாம் சர்வக்ஞ.

179. இறைநலம் மிகினும் சடைமுடி வளர்ப்பினும்
இறைப்பற்றது உடைந்த வலம்புரிச் சங்காம்
அறநிலைப் பிறழின் சர்வக்ஞ.

௩. புனைபக்தி வீணே

180. இலக்குத் தப்பிய பல்லம்புகள் எய்தென்ன?
இலக்கின்றி வீண்பூசையின் பக்தியும் - யாண்டும்
இலக்கோடு நிலைப்பதில்லை சர்வக்ஞ.

181. மனமின்றிக் கோயிலை வலம்வந்தும் பயனென்ன?
கனச்செக்குச் சுமந்த எருதுகள் - நாளும்
மெனக்கெட்டுச் சுற்றுவபோல் சர்வக்ஞ.

௪. உள்ளார்ந்த பக்தியே சிறந்தது

182. வனமென்ன? மனையென்ன? நினைவே நன்றாம்
மனத்துள் சிவனை நினையான் - மலையிருந்தும்
மனத்தின் பயனென் சர்வக்ஞ.

183. உடலே கோயில் உயிரே இறைவன்
உடலின் செயலழியின் துறக்கமாம் - ஐயப்
படவும் யாதுள சர்வக்ஞ.

184. மனத்துள் நினைவுறையின் உடலுமொரு கோயிலாம்
மனம்திரிந்து பலவாறு பற்றின் உடலென்னும்
மனையே பாழாம் சர்வக்ஞ.

185. மனத்துள் நினையின் மனையென்ன மடமென்ன?
மனத்துள் நினையாது - தெய்வம் உறைகின்ற
மனையில் வாழ்ந்தென்ன சர்வக்ஞ.

ரு. பக்தியின் இலக்கணம்

186. அறிந்தாற்றும் அறமும் திறந்துநோக்கும் விழியும்
ஊறிய பக்தியின் சிவபூசையும் - மதயானை
மறமழிந்து வீழ்ந்ததைப்போல் சர்வக்ஞ.

187. உழைக்கும் அடியார் உயர்வைப் பாராய்
உழைப்பை மறந்த மறுநாள் - பிச்சையின்
அழைப்பே கதியாம் சர்வக்ஞ.

188. பக்தியில் மூழ்குதல் பக்தர்க்கு நன்று
பக்தர்க்குக் கொடுத்து எஞ்சிய துண்பது
முக்தியாம் சரணர்க்கு சர்வக்ஞ.

189. மணப்பாக்கு வெற்றிலைக்கின்பம் நோட்டம் கண்ணுக்கின்பம்
கண்கவர்தூண்கள் மாளிகைக்கு இன்பம் - அடியார்க்கு
நன்னெறியே இன்பமாம் சர்வக்ஞ.

190. அடியாரை வஞ்சியான் இறைவனை மறவான்
அடியாருள் ஒன்றியே அன்புகாட்ட வல்லான்
மிடிமை அறியான் சர்வக்ஞ.

191. வெண்மதியும் சுடுமோ? சிந்துவும் வற்றுமோ?
மண்ணில் மறவரும் அஞ்சுவரோ? அடியார்க்கு
என்னாம் ஐயம் சர்வக்ஞ.

சூ. அடியவரின் பக்தி

192. ஞாலத்துள் பல்வேதங்களோதி சீலத்துள் உயர்ந்தும்
சூலமேந்தியோன் பதமறியார் - பேதங்கள் கூலமென
மலமுண்டது போலாம் சர்வக்ஞ.

193. துர்நாற்ற வாயும் உடலுறவுகள்பல கொண்டதாயும் (பெண்)
நிர்மலமுடைய சிவனைப் போற்றாநாவும் - ஞமலி
துர்நாற்றத்தின் மலமுண்டொப்ப சர்வக்ஞ.

194. சிவனடியார் தூயலிங்கம் போலிருத்தல் வேண்டும்
சிவனடியார் பிறர்க்குத் துன்பம் இழைப்பின்
சிவனடியார் மூடரே சர்வக்ஞ.

195. மண்ணில் உயருடையோர் விடுக மூன்றினை
மண்பொன் பெண் பற்றுடையின் - சிவனும்
அண்மையில் இல்லைகாண் சர்வக்ஞ.

196. சக்தி இழப்பினும் பக்தி நன்றாம்
பக்தி இழக்கும் அடியார்க்கு மண்ணில்
முக்தியே இல்லைகாண் சர்வக்ஞ.

197. வேசியும் சிவனும் இருபுறமெனும் அடியார்
காசினியில் அறுசுவை உணவை முகர்ந்து
கூசியபன்றியைப் போல்வர் சர்வக்ஞ.

198. பொன்செய் மருந்தை எறிவரோ? கூளத்தில்
பொன்னினும் உயர் சிவனடியார் - சம்சாரத்துள்
எந்நாளும் இருப்பரோ சர்வக்ஞ.

199. சிவப்பற் றாளர் இல்லறப் பற்றற்றவரே
சிவப்பற் றறுத்த அடியார் - எக்காலும்
சிவபதம் அடையார் சர்வக்ஞ.

200. துறந்தார்க்கும் துவ்வாதார்க்கும் வீடடைய இடைவெளியாம்
துறந்தார் அடைவர்முக்தி - துவ்வாதார் வாழ்நாளில்
பறந்து பறந்தலைவர் சர்வக்ஞ.

201. அடியாரோடு இணைந்து அடியாரோடு மொழிந்து
அடியாருள் அடியாராகும் அடியார்கள் அடைவரே
முடிவினில் முக்தியும் சர்வக்ஞ.

எ. அடியார் நட்பின் மேன்மை

202. பழமொழிப் பாடங்களேன்? வேத நூல்களுமேன்?
பழந்தத்துவ வாதங்களு மேன்அடி யார்தம்
பழகியபாதை செல்வோர்க்கு சர்வக்ஞ.

203. நோட்டமோ சிவலிங்கத்துள் கூட்டமோ சிவனடியாருள்
நாட்டத்தின் மனமோ குருவினுள் - அடியாரின்
மாட்சிமை பாராய் சர்வக்ஞ.

அ. பக்தியின் பலன்கள்

204. இறைவனை நினைப்போர்க்கு எண்ணியது நடக்கும்
இறைவனை நினையா மூடர்க்கு விண்மண்ணில்
நிறைவே றுமோ சர்வக்ஞ.

205. கூடுவதற்கு மனைவியும் கொடுப்பதற்கு மன்னனும்
நாடுவதற்கு நண்பனும் அமைவர் - தொழுது
பாடுவோர்க்கு இறைவனை சர்வக்ஞ.

206. கரிசலை உழுவோன் அரசனை மதிப்போன்
அரியை நினைப்போன் இவருக்கு - பேறுகள்
அரிதன்று காண் சர்வக்ஞ.

207. பச்சைப் புல்லின் பனித்துளியும் - பகலவனின்
அச்சம்தரும் கதிரொளிக்கு மறைவதன்ன - பவம்விலகும்
அச்சமறியா பசவனெனில் சர்வக்ஞ.

கூ. அடியார்க்கு அடியார்

208. எழுவர் நிதமும் கோழியும் கூவுமுன்
தொழுது நினைப்பர் அரியையெனில் - சிவனும்
தொழுவோர்க்கு அடியனே சர்வக்ஞ.

கo. சிவமயம்

209. பெண்டு மணந்தென்ன? பிள்ளைகள் பெற்றென்ன?
பொன்கோடி அடைந்தென்ன உலகில் - பக்தியெனும்
மேனிலை இல்லாதவரை சர்வக்ஞ.

210. அனைத்தும் சிவமெனில் அச்சமும் ஏதய்யா?
அனைவரும் சிவனை நினைப்பின் - கைலாயம்
அனைவருக்கும் ஈண்டாம்காண் சர்வக்ஞ.

---

207. கன்னட மண்ணில் சமயப் புரட்சி செய்தவருள் வசவண்ணர்*
(பசவண்ணர்) முன்னோடி எனலாம்

* பிரபுலிங்க லீலை பார்க்க

211. கவிக்குஒன்பான் சுவைநன்று செவிக்கு இசைநன்று
தவிப்போர்க்கு பந்தமகற்றும் குருநன்று - வீடுபெற
சிவமந்திரம் நன்றாம் சர்வக்ஞ.

212. அனைத்தும் சிவமயம் என்பதுவும் சரியன்று
அனைத்தும் சிவமெனில் - நிலைத்தல் என்பதுவும்
அனைத்துக்கு மேனில்லை சர்வக்ஞ.

212. ஏன் + இல்லை = ஏனில்லை.

7. ஈசனின் மேன்மை

க. புலனடக்கியோனே ஈசனாம்

213. ஐம்மூன்று பருவத்தில் ஐம்பொறியின் துன்பங்களாம்
ஐம்பெரும் பாவங்கள் அடக்கின் - அகிலத்துள்
(*) ஐம்புலனும் வென்றோராம் சர்வக்ஞ.

214. இளமையின் ஏக்கம் பொறிவாயின் தாக்கமென
இளமையின் புலனடக்கின் - உலகில் அவரே
களங்கமிலா தெய்வமாம் சர்வக்ஞ.

உ. பரமாத்மா

215. ஒடுங்குகின்ற வாயுவை அறிந்தோன் சிவனையறிவன்
கொடுந்துயரம் அறுத்து இன்பங் கொண்டோன்
கொடுமுடியின் சிவனாவன் சர்வக்ஞ.

216. ஆசையை மிதித்து ஐம்புலனை அடக்கி
அசையா குறிக்கோளில் நிலையானோர் அவரன்றோ
இசையின் சிவனடியார் சர்வக்ஞ.

---

213. ஐம்புலனை வென்றவர்க்கு அன்னதானம் ஈவதால்
நன்புலன்களாகி நின்ற நாதர்க்கது ஏறுமோ
ஐம்புலனை வென்றிடாது அவத்தமே உழன்றிடும்
வம்பருக்கும் ஈவதும் கொடுப்பதும் அவத்தமே

- சிவவாக்கியர்

(*) ஐம்புலன் வென்றோர் - முனிவர்

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

- திருக்குறள்

215. உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக்
கருத்தினால் இருத்தியே கபாலம் ஏற்ற வல்லீரேல்
விருத்தரும் பாலராவீர், மேனியும் சிவந்திடும்
அருள்தரித்த நாதர் பாதம் அம்மைபாதம் உண்மையே

- சிவவாக்கியர்

216. இசை = புகழ்

8. ஞான வழி

க. அறிவே சிறந்தது

217. அறிவினும் பெரிதில்லை நாயினும் கீழில்லை
பரிதியின் ஒளிக்கு நிகரில்லை - உலகில்
அறிவே உயர்வாம் சர்வக்ஞ.

218. அறிவால் மண்ணுலகாம் அறிவால் விண்ணுலகாம்
அறிவின்றி மற்றவை உடையரேனும் - உலகில்
வறியவர் அவரேகாண் சர்வக்ஞ.

219. அறிவறியும் அறிவே உலகில் நிலையாம்
அரனுமறியான் அவ்வறிவை - பிரம்மனும் அறிவில்
பெரியோனென எண்ணற்க சர்வக்ஞ.

220. செல்லும் இடமெங்கும் செம்மனத்துள் நிலைத்திருக்கும்
நல்லறிவைக் கொள்வரோ சினந்து-அறிவெனும்
நல்வித்தே மூலமாம் சர்வக்ஞ.

உ. பக்தியொடு கூடிய அறிவே உயர்வு

221. தத்துவ அறிவே உயரறிவென அறிக
தத்துவத்தொடு சிவவழிபாடு இணையின் - சிவனினும்
உத்தமனாம் காண் சர்வக்ஞ.

222. ஏற்றநாற்று உழவுக்கழகு தோட்டத்துக் கழகுமல்லிகை
கற்ற பெரியார் நட்பழகு சிவனையறிதல்
மற்றவற்றினும் சிறப்பாம் சர்வக்ஞ.

ங. தெளிந்த அறிவு

223. மூலம் ஒன்றின்கண் வந்ததிவ் வுலகு
மூலத்தின் முதலறியின் கண்முன்னே ஞானத்தால்
உலகும் துலங்கும் சர்வக்ஞ.

224. வன்மக் கடலுள் அடங்கிய திரையும் மீண்டெழுவதுபோல்
தன்னுள் அடங்கிய இறைவனும் - உயிர்ப்பான்
தன்னுள் மீண்டும் சர்வக்ஞ.

225. மண்ணில் வடிவெடுத்தகால் தன்னையே சிலம்பென
எண்ணும் மாசறுப் பொன்னும் - இஃதறியா மாந்தரும்
மண்ணில் ஞமலிபோல்வர் சர்வக்ஞ.

226. சித்திரம் சுவரிருக்க தத்துவமுண்டோ அதன்கண்?
சித்திரத்தத்துவம் உண்மையெனில் - அஃது மூவுலகின்
தத்துவமே என்றுணர்வாய் சர்வக்ஞ.

ச. ஆன்ம வடிவம்

227. உடல் முகமற்ற 'ஓம்காரம்' - விரிவானென
படர்ந்துளது காண் யாண்டும் பரப்பிரம்மத்தின்
இடமும் அஃதேயறிவாய் சர்வக்ஞ.

228. (*) நீருள் வெப்பமும் பாலுள் நெய்யும்
பாருள்ளோர் கண்ணில் படாததன்ன - சிவனும்
மறைய நின்றுளான் சர்வக்ஞ.

ரு. யாண்டும் நிறைந்துள்ளோன்

229. கல்மரத்தில் இருப்பான் முட்கூர்மை உள்ளிருப்பான்
அல்லவென்றும் பொய்யென்றும் எண்ணற்க - இறைவன்
எல்லாவிடத் துமுள்ளான் சர்வக்ஞ.

230. வெட்டிய கட்டைக்கல் சித்திரமென நிறைந்தவனோ
சிவன்எனும்
வெட்டிநகை யகற்று நிந்தனையும் வேண்டற்க
பட்டிதொட்டி எங்குமவனே சர்வக்ஞ.

231. கல்லிலும் மண்ணிலும் முள்ளின் முனையிலும்
எல்லையிலா நினைவிலும் சிவனிருப்பான் - அவனுன்
இல்லமு மிருப்பான் சர்வக்ஞ.

232. அங்கிருப்பான் கல்லிருப்பான் எங்கிருப்பானென வேண்டா
இங்கிருப்பான் - மாந்தன் மனத்துள் கசிய
ஆங்குமிருப் பான்காண் சர்வக்ஞ.

(*) 228. ''விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்''
- திருநாவுக்கரசு

கூ. சிவனே உலகு

233. சிவனுள் உலகிருக்கும் உலகில் சிவனில்லை
சிவனினும் வேறுலகு ஒன்றில்லை - இக்கதையை
சிவனே அறிவான் சர்வக்ஞ.

234. பொருள் அனைத்திலும் இருப்பான் எனும் தத்துவம்
பொருள் உடைத்து என்பதனால் - விண்ணரிதற்ற
பொருளாம் அனைவர்க்கும் சர்வக்ஞ.

எ. சித்தர்க்குப் பிறப்பில்லை

235. நற்குரு முகத்தான் மெய்யறிவில் தெளிந்து
நற்குரு சொல்லே உண்மையெனும் சித்தர்க்குப்
அற்பப்பிறப்பில்லை யாண்டும் சர்வக்ஞ.

அ. மறுபிறவி பொய்யே

236. செத்துப்பிறப்பரென்பது பொய் மொழியே
வித்தினால் விளைவ தன்றோ - மரம்
சத்திழந்து பட்டபின் துளிர்ப்பதுவோ சர்வக்ஞ.

கூ. நிலையான தத்துவப் பொருள்

237. நிறையான வயிற்றுணவும் நிலைத்திடுங் கொல்லோ?
நிறை(நிலை)யான அகப்பொருள் உணர்ந்தோரே - உலகில்
நிறையான ஞானியாம் சர்வக்ஞ.

238. உயிரெனும் உள்ளொளியை உணர்வில் அறிந்தோர்க்கு
பொய்யான பிறப்பில்லை அச்சமில்லை ஐவகை
மெய்க்குற்ற முமில்லை சர்வக்ஞ.

கo. ஞானிக்கு பந்தமில்லை

239. நீருள்பிறப்பினும் முத்தும் தழுவுமோ நீரினை?
அருள்வழி மெய்யறிந்த அறிவர் - இல்வாழ்வில்
மருளாவரோ மீண்டும் சர்வக்ஞ.

240. நவம்நீங்கி வானடைந்த புகையும் திரும்புமோ?
பவமறுப்போன் பாதம் பணிந்தோர் வாழ்வெனும்
பவத்தீயில் வீழ்வரோ சர்வக்ஞ.

---

240. நவம் = பூமி

241. இந்திரிய ஆசைகளை அடக்கிக் கொன்றோன்
சுந்தரன் சுகமுடையோன் உலகுக்கு - அவனே
எந்நாளும் ஒளியாம் சர்வக்ஞ.

242. மண்ணில் பிறக்கும்ஓடு அம்மண்ணோடு இணையுமோ?
மண்பதியாம் ஈசனில் கலந்தோர் - வாழ்வெனும்
மண்ணில் இணைவரோ சர்வக்ஞ.

243. ஆனையடங்கும் ஆடியுள் ஞாயிறும் குளமடங்குமன்ன
பிணையறுக்கும் குருவுள் அடியாரடங்கின் - வாழ்வெனும்
வினையேது சொல் சர்வக்ஞ.

கக. ஞானியின் பன்முக நிலைகள்

244. தீமண்டல முண்டு நாபியின் உள்ளாம்
தீமண்டல நாடியில் காண்பாய் உன்னை
ஏமமிலாது நாளும் சர்வக்ஞ.

245. நீருள் திளைத்தாடும் கரியும் மீனுக்கஞ்சுமோ?
இருளுடையோரின் வெறிமொழிக் கஞ்சுவரோ தத்துவப்
பொருள்கண்ட ஞானியரும் சர்வக்ஞ.

246. யோகிக்குப் பாவமில்லை கடலுக்கு இணையில்லை
யோகியணியும் துண்டுக்கு அளவில்லை - அறிவர்க்கு
போகத் துன்பமில்லை சர்வக்ஞ.

247. காசிப் பயணத்தின் காரணம் என்னய்யா?
மாசிலான் மனத்துள் இருக்க - அலைவது
காசினியில் ஏனோ சர்வக்ஞ.

248. மிகையன்று பிரம்மம் தானென்பது - உலகில்
பகையும் செருக் குமழியின் - பிரம்மமும்
தகையாம் காண் சர்வக்ஞ.

244. ஏமம் = ஐயம், மயக்கம்.

249. வாய்மையறியின் இறந்ததைப் போலிருத்தல் வேண்டும்
வாய்மையறிந்து வீணில் பேசுவது - செத்தவர்க்கு
வாய்விட்டழுதது போலாம் சர்வக்ஞ.

250. யானொரு கத்தியை ஏனெடுப்பேன் புவியில்?
யான் யாதுவிடுத்து யாதுகொல்வேன்? உலகெலாம்
யானாகி இருக்குங்கால் சர்வக்ஞ.

251. வனப்புடை நங்கையும் தன்முன் நிற்க
மனவளமுடை சித்தனும் - என்பின் கூடென
மனம்எண்ணுவன் உலகில் சர்வக்ஞ.

252. உருக்காட்டியும் பிறரை அழைக்குங்கொல்? உலகை
கருவாய்க் கொண்ட மெய்யறிவின் சித்தரும்
உருக்காட்டியும் ஒன்றாம் சர்வக்ஞ.

253. அகில் சுட்டாலும் கறுத்தாலும் மணக்கும்
அகில மெய்யறிவின் சித்தர் - இடரில்
அகிலன்னாம் காண் சர்வக்ஞ.

254. இற்றைக்கு நாளைக்கென குவித்திடுதல் வேண்டா
இற்றைக்குக் கிடைத்ததைக் கொள்வாய் - உடல்நோய்
உற்றக்கால் இடராம் சர்வக்ஞ.

255. வந்ததே நோயென அஞ்சற்க - கைக்கு
வந்ததை உண்டு இன்புறுக - நோய்
வந்தக்கால் மடிக சர்வக்ஞ.

256. தன்னறிவில் ஆழ்ந்து தன்னையே தானறிவன்
தன்சுற்றம் நட்பு களைந்தே - பரமனில்
தன்னையே இணைப்பான் சர்வக்ஞ.

257. சேருஞ்சிறு துளிகளிங்கு பெருவெள்ளம் ஆவதுபோல்
பேரறிவர் மொழிகள்பல செவியுறவே செம்மையின்
வாலறிவன் ஆகுவரே சர்வக்ஞ.

258. இலக்கின்றி அம்புகளை எய்வதனால் பயனுண்டோ
பலனற்ற சொற்களினால் பயனுண்டோ - நல்லறிவு
இல்லாது போனபின் சர்வக்ஞ.

259. நான்வகை வேதமொடு தருக்கம்கற் றென்னபயன்?
தான்சார்ந்த நிலையில் சமமில்லை என்றால்
வீண்சாம்பலில்தீ வளர்ப்பதைப்போல சர்வக்ஞ.

260. ஆனைக்கு அச்சமேன்? ஞமலிக்கு அறிவர்கூட்டமேன்?
அறவோர்க்கு வறுமையேன்? ஞானிக்கு உலகில்
குறை மதியுமேன் சர்வக்ஞ.

261. தத்துவப் பொருளின் பொருளை யுணராது
தத்துவப் பெயரால் உண்ணும் சிவயோகிக்கு
தத்துவத்தின் துறக்கமேது சர்வக்ஞ.

9. யோகம்

க. யோகத்தின் பெருமை

262. மூலவிருளுக்கு ஒளிநன்றாம் ஒளியுடைய மனத்தின்
மூலவறைக்கு மிக்கொளிப் பாய்ச்சல் நன்றாம்
மூலயோகமிது அறிவாய் சர்வக்ஞ.

263. இழிந்தோர் இவரென சித்தரைச் சொல்வதேன்?
அழிவிலா சிவமயத்துள் உறைசித்தரும் உயர்ந்தோராம்
ஆழிசூழ் வையத்துள் சர்வக்ஞ.

உ. யோக விளக்கம்

264. பெய்யுங்கால் பெய்யும் பருவ மழையால்
உய்யும் பயிரன்ன - போகத்தை விட்டொழித்தல்
உய்த்தலின் யோகமாம் சர்வக்ஞ.

265. வேசியின் செயலொப்ப புறந்தள்ளுவது அன்றுயோகம்
வேசியின் ஆசையால் மயங்கும் நாயகன்தன்
நீசநிலையு மன்றுயோகம் சர்வக்ஞ.

ந. யோகக் கல்வி

266. மனமெனும் எண்ணிதழ் தாமரையாம் ஞானம்
மனமெனும் இதழில் உறங்கும் ஞானத்தை
மனமறிந்தவன் யோகியாம் சர்வக்ஞ.

267. நான்விரலிடை சுழல் வாயுவை - விசுத்தியில்
தான் காண்பதுவே உயர் யோகத்தின்
பான்மையயா முலகில் சர்வக்ஞ.

268. உபாதையிலா நாதவடிவில் நிலைத்துள இறைவன்தன்
பாதையாற் பெறுக இன்பம் - பிறவியெனும்
பாதையை நாடற்க சர்வக்ஞ.

---

262. யோகத்தில் மூலபந்தம் என்பது ஒன்று.

264. உய்தல் = இடுக்கண் நீங்குதல்
உய்த்தல் = அனுபவித்தல்

267. கண்டத்து அளவில் கடியஒளி காணில்
அண்டத்தர் ஆகும் உடம்பு. - அவ்வைக்குறள்

௬. யோகியின் குணங்கள்

269. சினமே எமனாம் பாவமே எமனாம்
சினமும் பாவமும் களையின் - எமனும்
தனதடிமை காண்பாய் சர்வக்ஞ.

270. பகையால் துன்பமாம் துறவிக்கு நாளும்
பகையும் களைய துறவும் சிறக்க
வகைசெயும் தவமே சர்வக்ஞ.

271. கலமுண்டு கையில் நாடுண்டு இரக்க
பல்காலும் சிவனின் அருளுண்டு - திரிந்துண்பாரினும்
செல்வரு முண்டோ சர்வக்ஞ.

272. உடலெனும் புற்றில் பேசும்நா வொருநாகமாம்
விடமேறின் தன்மானமும் மனத்தின் ஒருமையும்
விடாகருடனென பறந்துவரும் சர்வக்ஞ.

273. பசிதாகம் உடலுறவு ஆசை உறக்கமென்ப
பசுபறவை மானிடருக்கு ஒத்திருக்க - வேற்றுமையின்
மாசு வந்ததெவண் சர்வக்ஞ.

274. சினமது அழியாதாயின் எய்தார் உயர்நிலையும்
வினையெனும் பாவம் கடந்தார்க்கு - உலகில்
சினமும் யாண்டுளது சர்வக்ஞ.

275. இரந்துண்ணல் வானுலகேக சுத்தி பயக்கும்
இரக்காது - வயிற்றுக்கென பிறர்நோக அடித்துண்ணின்
அரிதாம் வானுலகும் சர்வக்ஞ.

276. இரப்போரிலா ஊரும் இருளுடை நரகமாகும்
இரந்துண்போர் வானுலகின் வழிகாட்டிகள் - தெய்வமாம்
இரந்துண்ட சிவனும் சர்வக்ஞ.

277. பசிவென்ற யோகியே பாருக்குத் தெய்வமாம்
பசியற்றறோன் சிவனாம் - கைலாயமும் அவனுறைய
வ(ா)சமாம் காண்பாய் சர்வக்ஞ.

278. சினமே பாவத்தின் உறைவிடம் என்பர்
இன்ன லின்பம் ஒன்றெனக் கொண்டோர்க்கு
முன்பின் பாவமேது சர்வக்ஞ.

279. ஆசையாணவம் நச்சென அழிப்பர் உலகில்
மாசகற்றி மடிகாக்கும் சிவயோகியர் - அடைவர்பின்
நேசமிகு நிலைப்பேறு சர்வக்ஞ.

280. அன்பே போகமாம்! போகமே அன்பாம்!
மண்ணில் பெறுக அனைத்தும் - உலகில்
அன்பே யோகமாம் சர்வக்ஞ.

281. அழுக்காறுடையார்க்கு உயர்தத்துவமேன்?
ஐந்தவித்தானுக்குச் சினமேன்?
ஒழுக்கமுடையோளுக்குப் பிறஆடவருமேன்? சித்தர்க்கு உயர்வும்
தாழ்வுமேன் சொல் சர்வக்ஞ.

282. மனையாள் உறவாக மாடமாளிகை வாழ்விடமாக
இணையிலா நெய்ப்போளி உணவாயிருக்க - ஐந்தவித்தவனே
இணையிலா யோகியாம் சர்வக்ஞ.

283. ஏற்பது பிச்சை நோற்பது தவம்
பார்ப்பது சமநோக்கு என்று இருப்போர்
பரமனுள் இணைவர் சர்வக்ஞ.

284. ஓதி விபூதிசாற்றியே நித்தம் காவியுடுத்தியே
வீதி வலம்வருவோர் யோகியல்லர் - ஐம்புல
மதிகாத்தோர் யோகியாம் சர்வக்ஞ.

10. சிவயோகம்

க. சிவயோகியின் இலக்கணம்

285. உண்டுண்டு களிப்போர் இறைவனை அறிவரோ?
உண்டும் உண்ணாத சிவயோகியரே - இறைவனைக்
கண்டின் புறுவர் சர்வக்ஞ.

286. மறைவிடம் கண்டவர் மனைவிக் கடிமையே
குறையிலா உரமுடை முனிவரும் - சதைப்பசிக்கு
இரையானவரே காண் சர்வக்ஞ.

287. இல்லாள்சுகம் கண்டவன் இழிமகளை நாடுவனோ?
வெல்லம் சுவைத்த நாவு - நாறிய
கொள்ளும்கோதும் சுவைக்குமோ சர்வக்ஞ.

288. சினமவா அறுத்துச் சிவனை துதிக்குங்கால்
மனம் திரிந்த மனையாள் கட்டியணைப்பதுபெண்
இனச் சலனமாம் சர்வக்ஞ.

289. தோள் வலிமையேன்? பொன்னுமேன்? மென்
தோளுடை பெண் துணையுமேன்? சிருங்காரமேன்?
கோளுறவு துறந்தார்க்கு சர்வக்ஞ.

உ. சிவயோகி எங்ஙனமிருப்பினும் நன்றே!

290. அங்ஙன மிங்ஙனம் எங்ஙனமிருந்தானென எண்ணற்க
அங்கியும் கிழிந்திடத் திரிந்துண்பான் - சிவயோகி
எங்ஙன மிருப்பினென் சர்வக்ஞ.

291. அங்குமிங்கும் அலைந்தே திரியும் சிவத்துறவியர்
அங்குமிங்கும் அலைபாயும் மனத்தை சமப்படுத்துவதால்
எங்கிருப் பினென் சர்வக்ஞ.

292. கரிமீ திருப்பான்! நெறியில் நின்றிருப்பான்!
திரிந் திருப்பான்! கடைமாந்தருள் நிலைப்பான்யோகி
சிரித்தென்ன அழுதென்ன சர்வக்ஞ.

ங. சிவயோகி நிந்தனை கேடு தரும்

293. கடையனென இகழற்க! துறவியைத் தூற்றற்க
சடையோனென இகழ்ந்த தட்சன் தலையும்
உடைந்த கதையறியாயோ சர்வக்ஞ.

294. சினமென்ப பாவத்தின் குடியிருப்பாம் கேளீர்!
கிணற்றுக் கயிறு அறுந்தன்ன - நரகெனும்
கிணற்றுள் வீழ்வர் சர்வக்ஞ.

295. சடைமுடியும் வளர்த்திடலாம்! தோலுடையும் தரித்திடலாம்!
இடைவிடாது உறைந்திடலாம் கோயிலின்கண் - ஐம்புலன்
அடைக்காத்தல் இடராம் சர்வக்ஞ.

296. படமுடைப் பாம்புக்கும் சடையுடைப் பெரியோர்க்கும்
படப்படப்பொடுநடுங்கியும் நயந்தும் வணங்கிடு - இறைவன்
விடாதுதருவன் முக்தியும் சர்வக்ஞ.

297. தவத்தின் பொருட்டுக் குகைவாசம் வேண்டற்க!
தவத்தினும் சினம் களையாவிடின் - அத்தவமே
அவத்தீயாகிச் சுடுமே சர்வக்ஞ.

ச. ஆழ்மனப் பற்று

298. இருட்டறையில் சுடரும் ஒளிசிந்தி எரிவதொப்ப
விருப்பொடு வழிகாட்டும் சிவயோகியும் - இருளின்
இருளகற்றும் விளக்காம் சர்வக்ஞ.

ரு. சிவயோகிக்கு மறுபிறப்பில்லை

299. துணிவின் துணையொடு யார்யார் சம்சாரமென்னும்
தண்கடலை நீந்துவரோ அவரெல்லாம் - வாரார்
மீண்டும் பிறவியெடுத்து சர்வக்ஞ.

சா. யோகியின் பேறு

300. மெய்ஞான யோகத்தின் மேன்மை அறிந்தோன்
மெய்வாய்ப் பசிநாற்றம் உறக்கம் துறந்தோன்
மெய்ஞான யோகியாம் சர்வக்ஞ.

301. பிறர்க்கை அமுதுண்ணான்! அரைக்குவளை நீரருந்தான்!
புறநிந்தனை கடிதலொடு பெண்ணுறவு கொள்ளான்
சிறப்பின் யோகியாம் சர்வக்ஞ.

ஏ. வேடதாரி

302. அத்தி காய்க்கும் மரமன்ன - உருத்திராக்கம்
மெத்தியென்ன உடலெங்கும் - மாந்தர் உயர்வுறும்
தத்துவம் அறியாமல் சர்வக்ஞ.

303. சாம்பலில் புரளும் கழுதையும் நீறுகொண்டதாமோ?
சாம்பலில் புரண்ட கழுதையாம் - தத்துவமறியாமல்
சாம்பல் உடல்கொண்டோர் சர்வக்ஞ.

304. கோல்நுனியில் பிழிந்த கோவணம்கட்டி - கைம்பெண்டிர்
நூலிடை கண்டே பேதலிக்கும் யோகி
பால்முடியை மழிப்பதுமேன் சர்வக்ஞ.

305. ஆதியின்சாது சித்தரென்போர் தூய்மையின் காவியுடுத்தி
மேதினியை வலம்வருவர் செவியுறவே பிறர்செய்தி
சாதியிலிவர் கீழோராம் சர்வக்ஞ.

306. ஆலம் விழுதன்ன திரிசடை வளர்த்து
ஞாலத்துள் பொய்யே உரைப்போன் - நாயின்
வாலாம் நாளும் சர்வக்ஞ.

307. பாழ்கோவிலின் கண்ணமர்ந்து வாழ்வியலைப் பேசியே
பாழ்சுவைதனை புறந்தள்ளா சிவயோகியும் - தெய்வமென
வாழ்வனோ சொல்வாய் சர்வக்ஞ.

ஐ. குணமிருப்பின் பிறவேண்டற்க

308. நிதமும் நியதிகளேன்? ஆசாரப் பூசையுமேன்?
பதமாய் மழிப்பதுமேன்? சடையேன்? மெய்யறிவில்
பதமானோர்க்கு நாளும் சர்வக்ஞ.

---

302. மெத்துதல் = அப்புதல்

308. பதமாய் = அடையாளமாக
பதமானோர் - கூர்மையுடையோர்
மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின் - குறள் 280

கூ. தெளிவு

309. ஆசைகள் விட்டொழியின் ஈண்டும் கைலாயமாம்!
ஆசைகள் விடாது மாயையுள் வீழின்
நாசநரகும் ஈண்டாம் சர்வக்ஞ.

11. அறம்

க. அறக்கோட்பாடு

310. கற்புடை இல்லாளழகு இசையெனும் கலையழகு
ஏற்புடை பட்டறிவாளர் நட்பழகு அனைத்தினும்
பொற்புடைஅறவோர் அழகாம் சர்வக்ஞ.

311. அறவோர்க்கும் இறைவர்க்கும் ஏதய்யா இடைவெளி?
மறப்பிலி மண்ணுக்கு ஈவதன்ன மனமுவந்து
அறமீவோனும் இறைவனாம் சர்வக்ஞ.

312. அறவோர்க்கும் வறியோர்க்கும் மானுட நேயர்க்கும்
அறிவிலிக்கும் உறவோர்க்கும் - அறிவர்க்கும் அரிமாநாய்
உறவின் இடைவெளியாம் சர்வக்ஞ.

உ. ஈவோர் இம்மண்ணுக்குச் சொந்தமில்லை

313. இரப்போர்க் கீயும் உயர் மாந்தர்க்கு
வரமாய்ப் பலவும் நல்கியே - இத்தரைக்கு
பரமனும் அனுப்புவன் சர்வக்ஞ.

ங. அறத்தின் பலன்

314. குடைநிழலில் வலம் வருவாரைக் கண்டு
எடைபோடற்க என்பயன் செய்தார் இவரென?
கொடையின் முன்பயனது சர்வக்ஞ.

315. அறத்தின் பயனால் ஆளுவர் மண்ணையே
அறம்வளர்த்து விண்புகினும் - ஆண்டும் எய்துப
அறத்தின் மேன்மை சர்வக்ஞ.

316. படைத்தோன் கொடுக்க கொடுத்திடுநீ மண்ணுயிர்க்கு
இடைவிடா இன்பமதை-மனைவி மக்கள்
தடையிலாது பெறுவர் சர்வக்ஞ.

317. பொருள் வந்தக்கால் அழைத்தீவாய் பிறர்க்குக்
அருளாய்ச் சுகமாய்ப் பதமடைவாய் - நிலையான
மருளிலா பேறடைவாய்மேல் சர்வக்ஞ.

---

311. மறப்பிலி = கடவுள்

318. வாய்க்குணவு கொடுக்காது வாய்மையை உரைக்காது
தாய்போல் கொடை நல்கா மன்னர்க்கு
நாய்க்குட்டியின் கேடுண்டாம் சர்வக்ஞ

சு. அறவாழியின் இலக்கணம்

319. பிறப்பில் பொருளெடுத்துப் புவிக்கு வந்தனரோ?
இறப்பில் விண்ணெடுத்துச் செல்வரோ? இஃதறிந்து
அறவோர் கொடுத்துண்பர் சர்வக்ஞ.

320. வெந்ததை விதைத்துப் பயிரிடுவோரைக் காண்பதரிதாயினும்
வெந்ததைப் பிறர்க்கீந்து வினைப்பயிரை மேம்படுத்துவோன்
எந்தைசிவனுக்கு நிகராம் சர்வக்ஞ.

ரு. அறவோரிடம் இரத்தல்

321. நாட்டினில் நோக்குங்கால் இரப்பது இழிவாம்
நாட்டினிலிரக்க ஈயாததும் இழிவாம் கொடுப்போரை
நாட்டில்தடுப்பதுவும் இழிவாம் சர்வக்ஞ.

322. இரப்போர் முகத்தில் கரிபூசுதல் நன்றாம்
இரப்போருக்கு ஈயார் முகமோ - கண்டதன்ன
நெருப்புத் துண்டம் சர்வக்ஞ.

323. யாதேனும் வேண்டின் ஈவோன்பால் இரந்திடுக
யாது ஈவன் பேன்பிடித்துண்ணும் புலையன்பால்
யாதும் வேண்டின் சர்வக்ஞ.

சா. அறம் செய்வதேன்?

324. மரணமே மெய்யாம் சிவனாணை பொய்யல்ல
பிறருண்பர் பெண்ணுக்குநீ தரும்பணம் என்பதனால்
அறமே நாடுக சர்வக்ஞ.

325. பிறர்க்கு ஈந்துண்போர் இன்புற்று விண்ணடைவர்
பிறர்க்கு ஈயாதுண்போர் நரகடைவர் - பாரில்
பிறர்க்கு ஈதல்வேண்டும் சர்வக்ஞ.

326. கொடுத்துநீ அணைக்கவுமில்லை எடுத்துநீ
வழிபடவுமில்லை
கொடுஞ்சினத்தில் சிவனைத் தூற்றின் - அவனுனக்கு
கொடுப்பனோ துறக்கம் சர்வக்ஞ.

ஏ. அறம் செய்வதெங்ஙனம்?

327. அறம் செய்வோர்க்கு முதலென்ன கடையென்ன?
அறமதில் அலைக் கழிப்போர்தம் ஈகையும்
புறமண்ணுக் நிகராம் சர்வக்ஞ.

328. இன்றுவா நாளைவா போய்வா என்னாது
அன்றழைத்து நல்கும் அறமது - மண்ணில்
பொன்னாம் காண் சர்வக்ஞ.

ஐ. பல்வகை அறங்கள்

329. உறவுக் குணவிடும் வேளையில் யோகிவர
உறவுக்குப் படைத்து யோகிக் கில்லென்ப
பிறப்பெடுப்பர் காகமாய் சர்வக்ஞ.

330. வேண்டுமுன் ஈவோன் உத்தமனே உலகில்
வேண்டியபின் ஈவோன் இடையினன் - கடையனே
வேண்டியும் ஈயான் சர்வக்ஞ.

331. திரிந்துநீ இரப்பினும் அழைத்துக்கொடு அடியார்க்கு
உரிமையாம் சுகமும் நல்பேறும் - கைலாயமும்
அருகிலாம் உனக்கு சர்வக்ஞ.

332. வன்மொழியறியா மருமகள்நன்று, உணவுக்கு
நெய்யும்நன்று,
இன்மொழியின் அடியாரொப்ப மகன்நன்று - ஈகைக்கு
இன்கரமே நன்றாம் சர்வக்ஞ.

333. இரந்தும் பரந்துமுழைத்துப் பெற்ற ஆக்கத்தை
நரவுலகில் அடியார்க்கு ஈயின் - ஈட்டுவர்
பரவுலகின் மேன்மை சர்வக்ஞ.

௯. அறிந்தாற்றும் அறம்

334. கரியேறி செல்வோர்க்கு அறம் ஈவது
பரிதிமண்டலம் புகுவது போலாம் - பசித்தோர்க்குப்
பரிவொடு படைப்பாயுணவு சர்வக்ஞ.

௧0. அறத்தின் உயர்வு

335. நன்மையுள் நிலைத்திட மேன்மையுள் வாழ்ந்திட
விண்ணுறைவோன் பதம் பற்றிட - பசித்தோர்க்கு
அன்னமிடுவாய் அகிலத்தில் சர்வக்ஞ.

336. குறைகள் நீங்கிட, பிறப்பழுக்கின் பாவமகன்றிட,
பிறைசூடியின் அருள் பெற்றிட, அயலார்க்கு
குறைவின்றி அமுதளிப்பாய் சர்வக்ஞ.

௧௧. அறத்தின் இரகசியம்

337. அன்ன மிட்டநீ! நொந்து கொள்ளலாகா
சின்னஞ்சிறு பேதங்கள் இன்றியே - சிவனுனை
தன்னுள்வைத்து காப்பான் சர்வக்ஞ.

338. அன்னம் படைப்போர்க்கு இன்சொல் உரைப்போர்க்கு
தன்போல் பிறரை பார்ப்போர்க்கு - கைலாயம்
கண்முன் காட்சியாம் சர்வக்ஞ.

௧௨. கருமி கேவலமானவன்

339. அன்னமிடுவோன் அன்னியப் பிள்ளையாயினும்
தன்பிள்ளையே
அன்னமிடா துண்போன் தன்பிள்ளை ஆயினும்
அன்னியனே காண் சர்வக்ஞ.

340. உண்ணாது பொருளீட்டி மண்ணில் புதைத்தே
மின்னும் கலவையால் தரைமெழுகிடுவர் வாய்க்கு
மண்ணே காண் சர்வக்ஞ.

341. பதவி கொண்டோர் பரிதவிக்கும் மாந்தர்க்கு
உதவிக் கரம்நீட்டி ஊட்டாது தானுண்டல்
குதறும் நாயுணவாம் சர்வக்ஞ.

342. இருந்தும் ஈயாதானைக் காலனும் விடுவனோ?
இருந்தது ஒழியின் - முன்னர் இரந்தவர்பால்
வருவர் பணிபுரியவே சர்வக்ஞ.

343. கோமடிவாழ் உண்ணியும் நுரைப் பாலருந்தா
தேமதுரமாம் அறமீயா துண்போன் வாழ்வும்
கோமடிவாழ் உண்ணியினும்கேடாம் சர்வக்ஞ.

கரு. கருமியின் பலன்

344. இரவென வந்தார்க்கு இனிதே ஓம்பின்
பரவுலகும் பரிசாம் - ஓம்பார் வாழ்வு
இரவுக் குரித்தாம் சர்வக்ஞ.

345. இரைகாணும் காகம் கரைந்துண்ணும் இனமொடு
கரையும் காகம்கோழிகளென இனம் சேர்ந்துண்ணா
புரையோர் காகத்தினும்கீழாம் சர்வக்ஞ.

346. மனைவி மக்களுக்கு உடல் வருத்திடவேண்டா
அனைத்தும் தனதென மறைத்திடவேண்டா புதைத்த
தனைத்தும் பிறர்க்காம் சர்வக்ஞ.

கசு. கருமியின் செயல்

347. கள்ளர் பொய்யர் கழைக்கூத்தாடி பொய்யடியார்க்கு
அள்ளியே கொடுப்பர் ஆயினும் - அறத்தின்பால்
எள்ளளவு மீயார் சர்வக்ஞ.

348. மாந்தரின்தீக் குணத்தை என்னென்று விளிப்பது?
பாந்தஅறமெனில் சினந்தெழுவர் - தண்டமதை மௌனமாய்
சொந்தமாக்குவர் பிறர்கையில் சர்வக்ஞ.

349. கறவாத பசுவோடு ஈயாக்கருமி செருப்புப்
பெறா கால்நடையென மூன்றும் - உலகில்
கறமிகு தற்கொலையாம் சர்வக்ஞ.

கரு. கருமிக்கு நற்கதியில்லை

350. பணமிருக்குங்கால் ஒருவர்க்குக் கொடுத் துண்பாய்
பணமிருந்தும் கொடுத்துண்ணா மூடனேகேளிது - பல்வகை
ஈனக்கேடுகள் சூழுமுனை சர்வக்ஞ.

351. கண்டவரை வருத்தி கொண்ட செல்வமதை
உண்டுறங்கி மடியின் - எமனுலகில் கருமிக்கு
தண்டனையும் தப்புமோ சர்வக்ஞ.

கசு. கருமி மறைத்தது பிறருக்காம்

352. உள்ளபோது உண்ணாது உள்ளபோது உடுத்தாது
உள்ளபோது ஈயாதான் செல்வம் - அரசுக்கும்
கள்ளர்க்கும் ஆகுமாம் சர்வக்ஞ.

353. மல்லெனப் பழுத்தவேம்பும் பயன்தரும் கொல்லோ?
புல்லறிவாளர் செல்வம் பூட்டி வைப்பினும்
நில்லாது செல்லும் சர்வக்ஞ.

354. கொடுத்துண்ணும் காலத்து கொடுத்துன்ப தறியாதான்
நெடுமரத்துக் கூட்டின் அடைத்தேனும் - பிறர்கை
விடுத்து சென்றன்ன சர்வக்ஞ.

355. யாருக்கும் அரைக்காசு நல்காத கருமி
யமன்வந்து கொல்லும் வேளையில் - ஈட்டியது
யாருக்காம் சொல்வாய் சர்வக்ஞ.

356. வாய்வயிறு கட்டியே அணிகள் சேர்த்தும்
ஈந்துண்ணும் வகையறியான் - இறப்பின் ஒருநாள்
மெய்யோடு புதைப்பரோ சர்வக்ஞ.

கஎ. அறமும் அருளுமின்றேல் வீடில்லை

357. தன்னுடல் பேணார் ஈசனை நினையார்
இன்மொழி பேசாதாரும் இன்புற்றிட - கைலாயம்
கணிகையின் வீடா சர்வக்ஞ.

---

348. பாந்தம் = இணக்கம், ஒழுக்கம்

349. கறம் = கொடுமையான

353. மல் = வளமை

358. பெருவின்பம் கண்காது தேகத்தைத் தண்டிக்காது
உருண்டுப்படுத்து உண்டுண்டுக்களித்து வானகமடைய - அஃது
பரத்தையின் மனையோ சர்வக்ஞ.

359. பிறருக்கீவது தனக்காம் மறைப்பது ஊருக்காம்
அறமீதல் தீதென்றெண்ணற்க - பின்னாளின் கட்டுச்
சோறுக்கு நிகராம் சர்வக்ஞ.

கஅ. விழிப்புணர்வு

360. சீரிருக்க பிறரை நினைப்பவன் அறிவாளி
சீரருக ஈவதற் கில்லையெனா - உள்ளம்
மருகுவர் மூடரே சவர்க்ஞ.

361. அன்ன தானம்போல் பிறதானம் உண்டோசொல்?
அன்னத்தினு முயர்ந்தது யாதுமில - உலகில்
அன்னமே உயிராம் சர்வக்ஞ.

12. அரச நீதி

க. அடிமை கேடுடைத்து

362. ஒற்றை வெற்றிலையும்கேடு போரில் அச்சமும்கேடு
பெற்றவனைத் தூற்றும் மகனும்கேடு - உலகில்
உற்றஅடிமை வாழ்வும்கேடாம் சர்வக்ஞ.

363. அழகுக்குப் புண்ணும்கேடு அறிவிலி மகனும்கேடு
பழகிச் செல்வதும்கேடு அச்சமுடையோர்பால் - அடிமையும்
வழக்கில் கேடுடைத்தாம் சர்வக்ஞ.

உ. விடுதலையே உயர்வாம்

364. பெரியோரில்லா வீடும் குருவில்லா மடமும்
அரசனில்லா நாடும் இம்மூன்றும் விளக்கில்
திரியற்ற நிலையாம் சர்வக்ஞ.

ங. மன்னன் இன்றேல் கேடு

365. நாடென்னும் உடலுக்கு வேந்தனே உயிராம்
நாடின்றேல் வேந்தனுக்குக் கேடாம் - வேந்தன்மடிய
நாட்டுக்குக் கேடாம் சர்வக்ஞ.

ச. மன்னனே கண்கண்ட தெய்வம்

366. நாடாள்வோரும் பசித்தோருக்குப் பண்டம்
படைப்போரும்
வீடாள்வோரை நினைப்போரும் மண்ணில் மாந்தரல்லர்
வீடாளும் இறைவராம் சர்வக்ஞ.

ரு. அமைச்சரின் பகை

367. அரசியின் நட்பும் அமைச்சரின் பகையும்
தரமிகு வேதமறியார்க் கேண்மையும் - தத்தம்
மரணத்தின் குறியாம் சர்வக்ஞ.

சு. குடிகளற்ற அரசு

368. குடிகளற்ற அரசு மழலையற்ற செல்வம்
நாடிட உறவுகளற்ற வாழ்க்கை - உலகில்
கூடிடாதார் இன்பமாம் சர்வக்ஞ.

எ. சிறந்த அரசனின் குணங்கள்

(வீரம்)

369. ஊருக்குச் சான்றோரழகு நாரிக்கு குணமழகு
கருங்குயிலுக்கு ஓசையழகு வேந்தனுக் கழகு
பெருவீர மாகும் சர்வக்ஞ.

370. புலையன் அஞ்சுவதேன்? வாய்மைக்கு நிந்தனையேன்
அலையும் துறவிக்கு பெண்ணுறவேன்? வீரனுக்கு
நிலையான துன்பமுமேன் சர்வக்ஞ.

371. அரனுக்கு நந்தியழகு பேய்க்கு இறப்பழகு
வீரனுக்கழகு களம் நோக்கல் - மன்னருக்கு
கரவலிமையே அழகாம் சர்வக்ஞ.

அ. மரண அச்சமறியான்

372. மரண அச்சத்துக் கஞ்சுவரோ மறவர்?
மரணம் தப்பா, பிறக்கின் என்ப,
மரணத்துக் கஞ்சுவரோ சர்வக்ஞ.

373. அறுந்தவலையும் தொங்கிய முலையும் வேண்டா
அறுந்தநாசியும் முகத்துக்கு வேண்டா - வீரரைப்
புறத்தே எள்ளுதலும்வேண்டா சர்வக்ஞ.

கூ. வில்லாற்றல் வல்லோன்

374. குறுவாளும் நெடுவாளும் வலிமையோடு இணைந்து
நெருங்கியே சமரில் பொருத - குறுவாளும்
நொறுங்கும் காண் சர்வக்ஞ.

375. வில்லும் வாளுமற்றவன் புல்லினும் கீழாம்
வில்லேந்திய இராம வருச்சுனர் - பாரில்
எல்லோரையும் வென்றனர் சர்வக்ஞ.

376. வாளேந்தி சமரிடுவோர் வலிமை உடையோராம்
சூலேந்தி பகைவர் சூழினும் - வாளால்
தலைச் சாய்த்திடுவர் சர்வக்ஞ.

கo. வேட்டையறிந்தவன்

377. அரசருக்கு வேட்டைநன்று, ஆநிரைக்குக் காவல்நன்று,
திரியா அழகின் பெண்நன்று, நல்லோருடன்
ஒருங்குறலும் நன்றாம் சர்வக்ஞ.

கக. தப்பிக்க வல்லோன்

378. ஓடித்தப்புதல் உடலுக்குக் கேடில்லையாயினும் - புறமுதுகிட்டு
ஓடுதல் இழுக்காம் புகழுக்கு - செருக்களத்துள்
மடிதலே பெருமை சர்வக்ஞ.

கஉ. பொதுமை விரும்பான்

379. பிள்ளைக்கு மடமைக்கேடு, மலவாய்க்கு மூலம்கேடு,
கோல்களைதல் குருடருக்குக் கேடு, - மன்னர்பால்
கோளுரைப்பதும் கேடாம் சர்வக்ஞ.

380. அறிவின்மை கேடு, கரிமிரண்டால் கேடு,
அறியா ஊரில் வாழ்தல்கேடு, - பொதுமையும்
அரசன்பால் கேடுடைத்தாம் சர்வக்ஞ.

கங. வாய்மையோன்

381. பணத்துக்குப் பகையும் பரத்தைக்குப் பொருளும்
கனவிருள் கள்வருக்கு வலிமை - வேந்தருக்கு
மனவாய்மை வலிமையாம் சர்வக்ஞ.

க ச . அரசர்பால் ஒழுகும் முறை
(மன்னனின் மனத்தடுமாற்றம்)

382. நம்பிய மன்னனின் மனமறிந்து ஒழுகுதல்வேண்டும்
தப்பியே மனமறிந்து ஒழுகாதிருப்ப - தீவெம்மையை
அப்பிக் கொண்டற்றாம் சர்வக்ஞ.

383. மணியின்நா அசைந்தாடுவது போலாம் மன்னன்மனம்
மன்னன்மகிழச் சிறக்கும் வாழ்வு - சினப்பின்
மண்ணில்சாயும் தலையே சர்வக்ஞ.

கரு. மன்னனைப் போற்றின் பாதியரசு

384. எஞ்ஞான்றும் விட்டகலாது மன்னருக்குப் பணியாற்றின்
எஞ்ஞான்றுமுனக்கு பரியொடு பணமுமுண்டு - பகைவரும்
எஞ்ஞான்றும் நலங்காப்பர் சர்வக்ஞ.

385. மன்னரொப்ப நடப்பின் கரிபரி கிரியாட்களோடு
பொன்னும் மணியும் உடைத்தாமுனக்கு - முனியின்
உன்னுயிர் மன்னருக்காம் சர்வக்ஞ.

கசு. கேடுகள்

386. பார்மன்னன் மடிவதும்கேடு தீச்சொல் வறியோருக்குக்கேடு
காரின்றேல் பயிருக்குக்கேடு தீநடத்தையும் கேடாம்
வார்குழல் அரசிக்கு சர்வக்ஞ.

கஎ. வாழற்க விழிப்பின்றேல்

387. விழிப்போடு இருப்பாயாக உனைப்போற்றும் மன்னர்பால்
விழிப்பற்று இருப்பின் உனைப்போற்றும் நிலைமாறி
அழிக்குமரசு தீயென சர்வக்ஞ.

கஅ. பெரியோரிடம் சண்டை வேண்டற்க

388. அரசவையில் சேராதிரு கடல்வனமென புகாதிரு
சரிநிகரென நில்லாதிரு யாரிடத்தும் - எக்காலும்
இரைந்து பேசாதிரு சர்வக்ஞ.

389. வல்லோரும் தடம் பதிப்பாரோ வழுக்குப்பாறையில்?
வல்லார்முன் வாதம் செய்வது, - பயக்கும்
அல்லன நாளும் சர்வக்ஞ.

390. எழுந்தெழுந்து நிற்காதிரு எழுந்துநின்றே பேசாதிரு
விழுமம் கொண்டவரை ஏளனம் செய்யாதிரு
பழுதிலா அரசவையில் சர்வக்ஞ.

கக. அரண்மனை

391. கணியன் நட்பும் வேண்டற்க, முதியவேசியும் வேண்டற்க,
கண்கட்டு வித்தையும் வேண்டற்க - அரண்மனையை
கண்காணிப்பதும் வேண்டற்க சர்வக்ஞ.

392. விட்டகலா சுற்றமும் பாத்திறமும் உலகில்
கேட்டது ஈயும் அறவோர் சேவையென்ப - முன்னர்
பட்டப் பயனாம் சர்வக்ஞ.

உ0. அந்தபுரம்

393. அப்பமில்லா ஊட்டமும் வயிற்றுக்கில்லாதார் கூட்டமும்
காப்போரற்றக் கோட்டமும் - சந்தனம் அரைத்து
கொப்பளித்தது போலாம் சர்வக்ஞ.

394. முதியவனற்ற மனையும் மோரற்ற உணவும்
மதியிலா அலிகளற்ற மாளிகை - இம்மூன்றும்
அதிநாண முடைத்தாம் சர்வக்ஞ.

உக. அரசுக்குக் கேடு

395. அருஞ்செயல் கோழைக்கும் அறிவுச்செயல் மூடருக்கும்
துரைத்தனம் நீசருக்கும் வாய்ப்பின் - நாட்டில்
ஊறு தப்பாது சர்வக்ஞ.

396. குதிரையேற்ற மறியான் சமரில் வெற்றியுமறியான்
சீதையன்ன மனையாள் அன்பறியா மன்னன்
சிதையின் பிணமாம் சர்வக்ஞ.

உஉ. ஆற்றலற்ற குதிரை

397. செருப்பறியாப் பாதமும் விரைந்தோடாப் பரியும்
செருகளத்துள் வெட்டிவீழ்த்தா வீரமும் - அகில்சுட்டு
நீறுபூசியதற் கொப்பாம் சர்வக்ஞ.

உ௩. போர்க்கருவி அறியாதார்

398. கத்தியைக் கைப்பிடிப்பதற்கும் வேண்டும் உத்தி
அத்துமீறிய துன்பத்தில் மட்டுமே - கையின்
கத்தியை வீசிடுக சர்வக்ஞ.

399. ஆற்றல்மிக்கோரும் ஆடியாடியே வெல்வரோ வட்டாட்டத்தில்?
ஆற்றலோடு உறைவாளெடுப்போர் வெல்வரோ களத்தில்?
ஆற்றும்வெற்றியை யாரறிவர் சர்வக்ஞ.

உ௪. வீரத்தில் கோழை

400. கெடுமதியும் ஓடுவ தறியா வீரனும்
கூடியே களிக்க நாணும் பெண்ணென்பர்
கேடும் பயப்பர்காண் சர்வக்ஞ.

401. வீடுதிரும்பா மருமகனும்கேடு, வளையா வில்லும்கேடு,
நாடுவோர்க்கீயா மன்னனும்கேடு, - சமரில் முன்னேறுதல்
கேடுடைத்தாம் காண் சர்வக்ஞ.

402. கொல்லாதவில்லும் வேண்டற்க உதவாமகனும் வேண்டற்க
அலைக்கழிக்கும் சொல்லும் வேண்டற்க - சமரில்
கொலைக்கஞ்சுவோரும் வேண்டற்க சர்வக்ஞ.

உரு. ஈகையற்றவன்

403. தகைமையற்ற கல்வி இன்பமற்ற உறக்கம்
ஈகையற்ற மன்னன் இம்மூன்றும் பாழூரின்
கூகைக் கொப்பாம் சர்வக்ஞ.

உசு. தகுதியற்ற அரசவை

404. நின்றாரை விளியார் வந்தாரை அழையார்
பன்றியும் களிறும் ஒன்றென்னும் அரசவையை
என்றுமே நாடற்க சர்வக்ஞ.

உஎ. கீழோர் சுற்றம்

405. பொன்னில்லா மாந்தனும் உண்பதற்கில்லா வீடும்
கண்முன்னே நகைப்போர் நட்பென மூன்றும்
தன்மான இழுக்காம் சர்வக்ஞ.

உஅ. இவ்வழி நில்லற்க

406. விரும்பாப் பெண்ணினும் வெல்லாச் சூதினும்
பெரும்புகழற்ற வாழ்வினும் பகைவர்முன்னர் உயிரைத்
தருவது மேலாம் சர்வக்ஞ.

உகூ. தீய மன்னனால் கேடாம்

407. குடிப்பிழை நோக்கும் மன்னரவை சேர்வோர்
அடிப்படையில் மூடராம் - பாம்பின் படநிழலில்
குடிப்புகும் நுணலொப்ப சர்வக்ஞ.

408. மொழிவது அமுதெனில் உலகம் செவியுறும்
மொழியுமுன் கனலெனச் சிவக்கும் மன்னன்முன்
மொழிவது யார் சர்வக்ஞ.

409. புல்லர்தம் நட்பும் ஒப்பா மனைவியும்
அல்லதை ஆமென்னும் மன்ன ரன்பும்
நில்லாதாம் நிலைத்து சர்வக்ஞ.

410. கூரறிவர் மூடராயின் களிறும் மதமாயின்
பார்மன்னன் பரத்தையாயின் - திருத்துவது மவரை
பார்மாந்தர்க் காகுமோ சர்வக்ஞ.

411. செருக்குடைய வண்ணான் பயனிலா மன்னன்
பெருக்கிலா பசுவென நாடிருப்பின் - மக்கள்தம்
பெருவாழ்வும் இருளாம் சர்வக்ஞ.

412. அச்சமுடையோன் வீரனாயின் மூடனும் ஆசானாயின்
நீச்சகுண முடையோனுக்கு அரசும் கிட்டின்
பொச்சாப்பாம் நாட்டுக்கு சர்வக்ஞ.

413. நாடாளும் மன்னன் பாராளும் பரமனென்ப
காடாளும் விலங்கெனஅவன் துன்ப மிழைப்பின்
காடாகாதோ நாடும் சர்வக்ஞ.

414. சாயும்வேசியை நாடாதார் குலப்பெண்டிர்க்கு வாழ்வுநீடாதார்
ஆயும் நோக்கில் ஆளாதார் நாட்டில்
பேயும் அரசாளும் சர்வக்ஞ.

415. மன்னனே கொல்ல மந்திரியும் இடரிழைக்க
வன்மமுடை தலையாரி பாடுபடுத்தின் - காப்பதும்யார்
இன்னுயிர்களைச் சொல்வாய் சர்வக்ஞ.

416. அரசனோ அரக்கன் அமைச்சரோ புலிபோன்றான்
அரசோலை எழுதுநர் நரியாயின் - குடிகள்
கூர்முதலை வாயாவார் சர்வக்ஞ.

ங.0. விழிப்புணர்வு

417. முன்நடப்பது வானுலகுக்காம் பின்னடைவு நரகுக்காம்
முன்நடப்பது பரிவேள்விப் பயனாம் - இறைப்பணிக்கு
இன்னுயிர் தருவாய் சர்வக்ஞ.

13. நட்பு

க. சான்றோர் வாழுமிடமே புனிதம்

418. தவளை, மீன்கள்உறையும் நீரும் புனிதமோ?
நவிலும் சான்றோர் வாழுமிடமே புனிதமாம்
கவளமுண்ணநெய் நன்றாதற்போல் சர்வக்ஞ.

419. வாய்மையோர் நட்பு சர்க்கைவிரவிய நெய்யாம்
வாய்மையிலார் நட்பு - வேலியின் ஓணானுக்கு
ஒப்பாம் காண் சர்வக்ஞ.

உ. மேலோர் நட்பு

420. வேகாத உணவினும் சுவைக்கூழே நன்றாம்
சாகா அறிவுடையோர் சண்டையேமேலாம் - அன்பிலார்தம்
தகாத நட்பினும் சர்வக்ஞ.

421. பகுத்தறிவற்றார் நட்பில் திளைத்துக் களிப்பதினும்
பகுத்தறிவாளர் நட்பில் இணைந்து - அவரொடு
பகுப்பதேநன்று வாட்டத்தில் சர்வக்ஞ.

422. அறிவிலிபால் உறவாடி பொன்பொருள் சேர்ப்பதினும்
அறிவரோடு உறவாடி வெஞ்சிறையில் வாடுவதே
அறிந்தோருக்கு நன்றாம் சர்வக்ஞ.

423. தோல்கறுக்கும் கனிகளில் வாழையும் ஒன்றாம்
மேலுக்குக் கறுப்பினும் உள்சுவைக்கும் - நல்லோர்தம்
நிலையும் அஃதாம் சர்வக்ஞ.

ங. உயர்ந்தோரை விட்டகல்க

424. பகடையாடுவோர் நட்பும்தீது முரட்டுக்காளை கொளல்தீது
தக்காரை விலகி இருப்பதும்தீது-தடுமம்
மூக்குக்குத் தீது சர்வக்ஞ.

425. முக்கரணத் தூயோர் மாதரை விலக்கியோர்
முக்திக்கு வழிகோலும் சித்தர் நட்பு
எக்காலும் நன்றாம் சர்வக்ஞ.

425. முக்கரணம் = மெய், மனம், வாக்கு.

426. கல்வி ஒடுக்குதல்கேடு தொங்கிய முலையும்கேடு
கல்தூண் சரிந்தவீடும் கேடு - கேடுடைத்தாம்
நல்லோரை விட்டகல்வதும் சர்வக்ஞ.

௪. கீழோர் நட்பு வேண்டற்க

427. மேன்மக்கள் நட்பு தேன்சுவைப்பது போலாம்
மேன்மையிலார் நட்பு - புதைக்குழியின் நாற்ற
வண்டலைப் போலாம் சர்வக்ஞ.

428. கல்வியுடையோர் நட்பு வெல்லமுண்டது போலாம்
இல்ஆமென உரைக்கும் அறிவிலி நட்பு
கல்பொறுக்கியது போலாம் சர்வக்ஞ.

௫. நல்லோர் தீயோர் கூட்டம்

429. கல்லுப்பு கற்பூரம் நிறமொன்று தன்மைவேறாம்
நல்லோர் தீயோர் உருவமொன்றினும் - குணமதில்
எல்லையிலா இடைவெளியாம் சர்வக்ஞ.

430. ஈனமுடையோர் நட்புக்கு மலைகொடுப்பினும் வேண்டற்க
மானமுடையோர் நட்பு - சுவைத்தது போலாம்
தேனோடுப் பாகும் சர்வக்ஞ.

431. மேலோர் இறப்பின் வருந்தும் உலகு
கீழோர் இறப்பு - தோல்கண்ட புண்ணும்
தொலைந்தது போலாம் சர்வக்ஞ.

432. வாய்மையாளர் சொல்லும் சிவனடியார் செயலும்
தூய்மையாளர் நட்பும் மேன்மையுடைத்து - இஃது
பாயும் நீருக்குண்டோ சர்வக்ஞ.

433. முட்டாளும் மழைக்கஞ்சி மரத்தடி நாடுவன்
சொட்டும் மரநீர் மழைவிட்டும் - மூடர்
நட்பும் அத்தகைத்தாம் சர்வக்ஞ

434. கணமாயினும் குணமுடையோர் நட்பே நட்பாம்
குணமிலார் நட்பு - உடலில் தீப்புண்
கண்டது போலாம் சர்வக்ஞ.

சா. கீழோரின் தன்மை

435. அரவுப் பல்லும் கத்திமுனையும் விடமாம்
இரக்கமிலார் சொல்லும் விடமாம் - கீழோர்
இருப்பதுவே விடமாம் சர்வக்ஞ.

436. சந்தனக் கல்லில் கொசுவொன்றும் காணேன்
சந்துசாக்கடையின் மலமூத்திரத்தில் - கொசுக் கூட்டமது
விந்தணுவென குழுமியதுகாண் சர்வக்ஞ.

437. நடுக்காட்டில் வீடும் தொழுநோயொடு காசமும்
நெடுந்துன்பமொடு புல்லர்நட்பு என்பன - நாளும்
படுநட்டமாம் காண் சர்வக்ஞ.

438. பற்களிடை மென்மை நாவும் இருப்பதன்ன
அற்பர் தீயோரிடை - தூய மாந்தரும்
சுற்றியிருப்பர் காண் சர்வக்ஞ.

எ. நட்பைப் பொருத்ததே அறிவு

439. நல்லோர்கண் உறவாடின் கள்வனும் நல்லவனே
நல்லவனோ கள்வர்பால் உறவாடின் - அவனும்
வல்லடியின் கள்வனாம் சர்வக்ஞ.

அ. துட்டனைக் கண்டால் தூரவிலகு

440. உண்டுகிடப்பதும் வேண்டற்க அறிவில் கேடும்வேண்டற்க,
கண்டும் கீழோர் பகைவேண்டற்க - நீசரைக்
வண்டரெனக் கொண்டாடுவதும்வேண்டற்க சர்வக்ஞ.

441. கக்கும் கனல் மூங்கிற்சாறும், மார்கழி குளிரும்கேடு
எக்காலும் சினப்போர் நட்பும்தீது - தீயோர்
போக்கும் தீதாம் சர்வக்ஞ.

442.* அருகியவறியோர்க்கு அகந்தையும் வேசிக்கு நாணும்
முருங்கைப்புகை மழைக்கு வேண்டற்க - கேடுடையோருக்கு
பரத்தன்மையும் வேண்டற்க சர்வக்ஞ.

---

439. வல்லடி = கொடுமை

440. வண்டர் = வீரர், கவிகற்றோர்.

* முருங்கை மரப்புகை மழைக்கு ஆகாதென்பது அந்நாளைய கருநாடக நம்பிக்கைகளுள் ஒன்று.

443. மனநோய் மனைவியும் நொய்யரிசியும் கேடு,தலை
கனமுடைய மகனும் கேடு - கீழோர்
ஈனத்தனமும் கேடாம் சர்வக்ஞ.

444. முற்றியபயிருக்கு புழுக்கள்கேடு, கழனிக்குக் களைகேடு,
பிறன்மனை விரும்புதல் கேடு, - கீழோர்
சுற்றமே கேடாம் சர்வக்ஞ.

445. மேன்மை மூடருக்குக்கேடு, பேன்கள் உறக்கத்துக்குக்கேடு
புண்ணுக்குத் தினவும் கேடு - கீழோரின்
இன்னலும் கேடுடைத்தாம் சர்வக்ஞ.

446. வியப்புடைய பழத்துள்ளொரு செம்பழ முண்டு
வியப்பாம் நஞ்சும் அதனிடத்து - மேலோரென
வியப்போரும் நஞ்சுடையர் சர்வக்ஞ.

கூ. தீயோர் நட்பு வேண்டற்க

447. வருவோரை அழையான் வந்தோரைப் பாரான்
பெருநோக்கும் அன்பும் அறியான் - சுகமுடையோனால்
வருமுறவும் வேண்டற்க சர்வக்ஞ.

448. வளையும் பிரம்பு மீண்டும் நிமிர்வதன்ன
வேளையறிந்து சொல்லும் புல்லர்நட்பு - மரண
வேளையிலும் வேண்டற்க சர்வக்ஞ.

கo. உணர்ந்தோர் நட்பே சிறப்பாம்

449. பாருக்குத் தளையில்லை மேருவுக் கிணையில்லை
அருட் செல்வராம் பெரியோரினும் - உயர்ந்தோர்
பாரில் இலர் சர்வக்ஞ.

450. உற்ற பணியாளர்நன்று சகுனப்புள்ளின் வலம்நன்று
பற்றறுத்தோர் நட்பும் நன்று - நெறியாளர்
பற்றுறவும் நன்றாம் சர்வக்ஞ.

451. தும்பிநாதம் கேட்பதினிது வண்ணப்புள் காண்பதினிது
தும்பையன்ன மொழியினிது - மேலோர் கேண்மை
இம்மண்ணில் இனிதாம் சர்வக்ஞ.

கக. உயர்ந்தோரின் பொலிவு

452. நிறைமொழி மாந்தர் மறைந்தாரென எண்ணற்க
குறையிலா அன்னை மகவை அணைப்பதன்ன
மறைமொழி உனையேந்தும் சர்வக்ஞ.

453. கயவர் கீழோர் தரணி வந்தே
கயமைமிகு சொல்லாடித் தூற்றின் - உயர்ந்தோரும்
தீங்குற் றழிவாரே சர்வக்ஞ.

454. இனியகமலச் செடிக்கு நீர்ப்பாய்ச்சின் - வளர்ந்தது
கனியும்சாறும் நல்குதற்போல் - உயர்ந்தோரின் அருட்
கனியும் பயனாம் சர்வக்ஞ.

455. இலையும் பழுப்பதுகேடு இடிந்த தூணும்கேடு
கொலையும் களவுமுள்ள ஊர்நடுவே - நல்லோர்
தலையெடுப்பதுவும் கேடாம் சர்வக்ஞ.

454. கமலச் செடி - ஆரஞ்சுச் செடி

14. ஊழ்

(அனைவரும் விதிக்குட்பட்டோரே)

க. முக்கடவுளர்கள்

456. அரியும் பன்றியென சிவனும் இரந்தானென
பிரம்மன் தலையைச் சிவன் கொய்தானென
முறையோடு எழுதியதார் சர்வக்ஞ.

457. அரியும் பித்தனாயினன் பிரம்மன் ஆடாயினன்
நரியே ஆயினன் சிவனென எழுதியதும்யார்?
கூரிய எழுத்தாணியால் சர்வக்ஞ.

458. ஆடையென தோலைக்கொண்டான் சிவனும் - விதியால்
ஆடென மாறினான் பிரம்மனும் - கோவிந்தனோ
ஆநிரைகள் காத்தான் சர்வக்ஞ.

459. மாலனும் கிறுக்கனாக பிரம்மனும் ஆடாக
ஆலமுண்டோன் நரியானபின் - பிறர் பாடென்ன
பூவுலகில் சொல் சர்வக்ஞ.

460. சாம்பலாம் காமனும் பிணையாம் அனுமனும்
ஓம்பும் சிவனும் உலகில் திரிந்துண்ண
இம்மண்ணின் நிலையென்னாம் சர்வக்ஞ.

உ. இராமன் - சீதை

461. சீதைசிறைப்பட்டது நாணுடைத்து சேதுகட்டியது
இருளுடைத்து
சீதையின் சொல்லே இழப்புடைத்து - இராவணனுக்கு
உபாதை எத்தகைத்தாம் சர்வக்ஞ.

462. அம்படிபட்ட மானும் கொம்புநிலம்பட வீழ்ந்ததுபோல்
அன்புடைப் பிராட்டி விட்டகல - இராமனின்
அம்பும் முறிந்ததோ சர்வக்ஞ.

(*) 463. எழுதிட எழுத்தும் தருக்கத்துக்கு ஏரணமும்
வழுவிலா பிழைப்புக்கு உயர்ஞானமன்ன - வீட்டுக்கு
எழுத்துக்கள் மூன்றாம் சர்வக்ஞ.

(*) 463. ஏரணம் - தருக்க நூல், மூன்றெழுத்து = பக்தி

464. அம்படியால் மானும் புகலிடம்நாடி அலைந்ததன்ன
நம்பிய சீதையை விட்டகன்ற இராமனும்
அம்பலமெங்கும் அலைந்தனன் சர்வக்ஞ.

465. அங்ஙனமிங்ஙனம் எங்ஙனம் இருந்தோமெனச் சொல்லற்க
செங்கையின் சீதையே சிறைப்பட - பிறருலகில்
எங்ஙன மிருப்பினென் சர்வக்ஞ.

466. அரனுக்கும் வலுவில்லை ஊழ்தனை ஒழித்திட
அரக்கன் சீதையைச் சிறையெடுக்க - துணைக்
கரமாக யாரிருந்தார் சர்வக்ஞ.

467. சேதுவைத் தாண்டியே சீதையைக் கடத்தினும்
மாதுவால் தோற்றனன் களங்கம் அவனுக்காம்
மாதுசீதையோ அறியாள்மாசு சர்வக்ஞ.

ரு. அனுமன்

468. கடல் தாண்டி இலங்கைப் பறந்த
முடிவுடல் இராம அடியானின் கச்சையும்
இடைவிட்டு வீழாததெவண் சர்வக்ஞ.

469. களங்கமிலா வாழ்வில் திங்களிருப்பினும் நன்றாம்
பளகிலா காமனெரிந்த காட்சி அனுமன்கண்டது
களங்கமிலை என்றாமோ சர்வக்ஞ.

சு. இராவணன்

470. பத்துத்தலை இலங்கைப்பதிக்கு எண்டிசையும் கடலரண்
அத்துமீறா வண்ணம் திரிகோண மலைக்கோட்டை
வித்தெனவந்த இடரெவ்வாறோ சர்வக்ஞ.

471. யாண்டுளது இலங்கை? யாண்டுளது அயோத்தி?
அண்டை நாடுகளோ? இராவணன் உயிர்
மாண்டதும் எத்தகைத்தாம் சர்வக்ஞ.

472. கேடுறும் வேளையில் கூடுமோ ஆறறிவும்?
கொடுஞ்சினத்தின் அனுமன் தீயிட - இராவணன்
ஆடுகாத் தனனோசொல் சர்வக்ஞ.

469. பளகு - குற்றம்

473. ஒன்றுடன்ஒன்பது தலைகள் தோள்களிரு பத்து
ஒன்றாகி நின்றும் பயத்ததுகேடு - விதியும்
ஒன்றுகூடிய வேளையில் சர்வக்ஞ.

ரு. ஊழின் செயல்

474. கேடுனைக் கூடுமெனக் காடுநீ செல்லற்க
கடுபயத்தால் அவம்நீ கொள்ளற்க - ஊழறியா
நெடுவனமு முண்டோ சர்வக்ஞ.

475. புண்ணிய இடமாயினும் வல்லோரை நாடினும்
வன்கல்லின் மனையில்நீ புகினும் விதியும்
உன்னைக் கொல்லும் சர்வக்ஞ.

476. நேர்நின்று யார்தடுப்பினும் தொடரும் ஊழ்
யாரிடத்தும் எங்கிருப்பினும் ஆங்கிருக்கும் ஊழ்
போரிட்டு நிறுத்துவார்யார் சர்வக்ஞ

477. பெற்ற ஊழ் எக்காலும் விட்டகலா
பெற்ற போகத்தை விட்டொழிப் பதுண்டோ?
உற்றபின் நொந்தென் சர்வக்ஞ.

478. ஆடும் பிள்ளைக்கு அமுதூட்டும் அன்னையென
ஓடும் போதும் உனைப்பற்றிய வினை
ஊட்டும் பலனை சர்வக்ஞ.

479. உடலின் ஊழ்தனை உடலே துய்ப்பதாம்
உடலுற்ற குணமும் ஊழும் - அரிபிரம்மனையும்
விடாது காண் சர்வக்ஞ.

480. அறிவும் விதியைத் திருத்துவது இயலா
அறிவு பலமுடைத் தென்றெண்ணற்க - விதியோ
அறிவைக் கொல்லும் சர்வக்ஞ.

கூ. பாண்டவர்

481. மந்திர மலையேந்திய கண்ணன் பாண்டவரென
இந்திர பலமுடையோரிருப்ப - பீமனும் மடிந்தனன்
விந்தையாம் காண்விதியும் சர்வக்ஞ.

482. தந்தையாம் அருச்சுனன் தாய்மாமன் கார்வண்ணன்
சொந்தமெனப்பிறரும் முன்னிருக்க - வீழ்ந்தனன் அபிமன்யு
விந்தையன்றோ ஊழ் சர்வக்ஞ.

483. அன்னவன் இன்னவன் என்னவனென வேண்டா
அன்னையாம் குந்தியின் புதல்வரே இரந்துண்ண
பின்னெவர் பாடென்ன சர்வக்ஞ.

484. ஐவரைப் பெற்றவளென குந்தியும் இறுமாந்திட
ஐவரோ விராடமன்னன் பாலேகி - சேவையாற்றி
ஐயமேற்றனரே காண் சர்வக்ஞ.

485. பெற்றவனாம் அருச்சுனன் பெருமையின் இந்திரன்
சுற்றியே தாய்மாமன் என்றிருக்க - அபிமன்யு
பெற்ற மரணமுமேன் சர்வக்ஞ.

எ. சூதகன்

486. வீரசூதகனைப் பாராய் திசைதப்பிய அவன்
பரியும் நின்றதே பகைவர்முன் - ஊழ்முன்
திரிந் தோடுவாருமுண்டோ சர்வக்ஞ.

487. இத்தேயம் அணைப்பதொப்ப அத்தேயம்
அணைக்குங்கொல்?
இத்தேயமகன்ற சூதகனும் - காஞ்சிமா நகரில்
செத்ததும் விதியாம் சர்வக்ஞ.

அ. தீயறிவு பயக்கும் கேடு

488. கெடுமதியும் வந்தணைக்கும் கேடுற்ற வேளையில்
சுடுவனம் கண்டும் தேவேந்திரன் - நெருப்பை
ஒடுக்கவு மில்லையே சர்வக்ஞ.

489. கேடு வரும்போதினில் உடன்வரும் தீயறிவு
காடு வேகுங்கால் - சூறைக் காற்றும்
பாடு படுத்தும் சர்வக்ஞ.

கூ. எங்குச் சென்றிடினும் ஊழ் விடாது

490. தவமிருப்பினும் தவறாது மணிமாலை உருட்டினும்
அவம்நீங்க அறமீந்து நோன்பிருப்பினும் - எமனோ
ஆவன் பகையே சர்வக்ஞ.

491. காசியில் உறையினும் கடலுள் மறையினும்
காசியப்பன் உறவாயினும் - விதியின் ஆட்ட.ம்
காசினியில் அரங்கேறும் சர்வக்ஞ.

கo. நற்பேறு யார்கண்ணிலும் படா

492. காட்டிடைப் பிறந்த கரியொரு நாள்
நாட்டிடைப் பட்டத்து யானையாம் - செல்வம்
கூ(ட்)டியேவரும் தானாகி சர்வக்ஞ.

கக. மேன்மையுறுங்கால் அனைத்தும் பயனாம்

493. வெள்ளியும் தங்கமாம் தும்பியும் சிவனாம்
எள்ளிய கிழிசலும் பட்டாம் வினையது
தள்ளியே நிற்குங்கால் சர்வக்ஞ.

494. மூன்றும் ஆறென ஆறும் ஈராறென்றாகும்
கன்று ஈனும் மலட்டுப்பசுவும் - வினையும்
அகன்ற வேளையில் சர்வக்ஞ.

495. இன்றும் நாளையும் பரிணாமம் வெவ்வேறாம்
பன்றிக் குட்டியும்பிடி விலைபோம் கோழியும்
அன்றிலுக்கு நிகராம் சர்வக்ஞ.

496. முன்னேறுங் கால் முந்நீரும் தடையன்று
பின்னடை வின்போது-கடவுளின் கடைக்கண்ணும்
உன்பக்கம் நோக்கா சர்வக்ஞ.

கஉ. கேடுற்றக்கால் உதவியில்லை

497. பலம் குன்றியக்கால் பாழ்மண்ணே புரட்டிவிடும்
குலம்செருக்கு சண்டைப்போர் செல்வம் என்பு
பலம் உள்ளவரை சர்வக்ஞ.

498. எட்டும் இரண்டாகும், உறவும் பகையாகும்,
கொட்டும் பாம்பாகும் கயிறும், தீவினை
எட்டும் வேளையில் சர்வக்ஞ.

கரு. விதியை நொந்து பயனில

499. முன்னர் நெய்யுண்ணுங்கால் நன்மை ஆற்றாதான்
பின்னர் நொடியுங்கால் தூற்றிடின் - சிவனென்ன
கன்னம் வைத்தனனோ சர்வக்ஞ.

500. கொடுத்து வாழாது சொல்லாடிப் பயனென்?
நெடுமுடியின் மன்னன் பிள்ளைக்கும் - விதியது
தொடுமே நெருங்கிநின்று சர்வக்ஞ.

க சு. தாமரை இலைத் தண்ணீராம் அடியார்

501. கண்டதே நிலை வாய்க்கொண்டதோ நிலையாமையென
அண்டமதில் எண்ணுகின்ற மாந்தர் - மரணமெனும்
கண்டம் வென்றவராம் சர்வக்ஞ.

502. அப்படியிப்படி வாழ்வம் என்று எண்ணற்க
தப்புச் சிந்தையில் மனம்நோகற்க - சிவன்
செப்பியதே நல்வாழ்வாம் சர்வக்ஞ.

15. அந்தணர்

க. வேதம்

503. வேதமும் பெரிதோ? கல்வி கேள்வியினும்
வேதத்தின் உட்பொருளறியா வேதியரும் - மண்ணில்
பேதமாவர் வெந்தசாம்பலாய் சர்வக்ஞ.

504. வேதத்தின் தாயென காயத்ரியைப் போற்றுவர்
வேதியரோ வேதங்களெனும் பல்கிளைகள் தாவி
மேதினியில் பறப்பதுமேன் சர்வக்ஞ.

505. வேதமே பெரிதென வாதமே செய்திடுவீர்
வேதமதில் யாதுள பிறரறிய - பட்டறிவாளர்தம்
மேதகுமொழியே வேதமாம் சர்வக்ஞ.

உ. மகாபாரதம்

506. வேசியர்கதையும் சோதரர்தம் வதையும் - புகழ்ந்து
பேசிடுவர் புண்ணியக் கதையென - சாதியலவர்
கூசிடும் இழிஞராம் சர்வக்ஞ.

ந. புறச்செயல்கள் - உணவு

507. இருகிழமைக்கொரு நோன்பு காசின்றியே துளசி
இருள்சேர்நகரெலாம் சிவப்பாராயணம் - சாகும் மனிதரிடம்
உருமாறிநாறியிவை சாகின்றனவே சர்வக்ஞ.

508. காலமறிந்து காலைக்கழுவியே களியுருண்டை செய்யாது
காலம் கழித்தே நூறும் செய்வோன்
பாழாம் காண் சர்வக்ஞ.

ச. நீராடல்

509.* விடியலில் நீராடியே கும்பகம் செய்து
மடியோகம் தியானமென நில்லாப் பார்ப்பனன்
மிடிபோகத்துள் நிலைப்பான் சர்வக்ஞ.

---

*. கும்பகம் : காற்றைச் சுவாசப் பையில் நிறுத்துதல்

510. நீராடியுண்ணும் பார்ப்பானுக்குச் சந்தியா வந்தனமுமேன்?
நீராடியபின் புன்சொலுமேன்? ஐயம் கொள்வதேன்
நீராட்டத்தில்? சொல் சர்வக்ஞ.

511. நீர்மூழ்கும் பார்ப்பனரும் பறப்பரோ விண்ணுக்கு
பார்ப்பனரினும் - நீருள் கிடக்கும் தவளைக்கே
உரித்தாம் விண்ணுலகு சர்வக்ஞ.

ரு. சந்தியாவந்தனம்

512. சந்தியா வந்தனத்தை அச்சமின்றியே ஆற்றிடுக
அந்தியிரவின் கொடுஞ் செயல்கள் அகன்றிடவே
சந்தியாவந்தனமே சிறப்பாம் சர்வக்ஞ.

சு. சந்தனம் சாற்றுதல்

513. சந்தனத்தைத் தொட்டே நெற்றியில் இட்டே
விந்தையுலகாம் துறக்கமெனில் - செய்த கேடென்ன
சந்தனக் கல்லும் சர்வக்ஞ.

514. கெட்டியாகப் பூசினால் மேலுக்குமேல் மண்ணையே
அட்டியின்றி செல்வர் மேலெனில் - மண்வெட்டியும்
பட்ட கேடென்ன சர்வக்ஞ.

515. சுட்ட சாம்பல் பட்டையாகத் தீட்டியே
அட்டமா சித்தியென சொர்க்கமடையின் - கழுதைப்
பட்டகேடு தானென் சர்வக்ஞ.

எ. புறவழிபாடு – கண்டித்தல்
பாவம் சக்தியல்ல

516. நீராடின் களைவதற்கு பாவமென்ன சகதியா?
நீராடின் களையும் மெய்யழுக்கு - பாவமோ
நீராடினும் களையாப்பசையாம் சர்வக்ஞ.

517. பாபம் களைந்ததென அறுதியிட்டு - பின்
கோபக் காமங்கள் விடாதிருப்பின் - பாவமது
சாபத்தால் பூசியபசையாம்காண் சர்வக்ஞ.

518. புற்பலத் தீவினையாற்றியே பாயும் நதிமூழ்க
அற்புதமாய் கரையும் முன்செய் வினையெனில்
புற்றின்மேடோ அஃது சர்வக்ஞ.

519. குளித்தக்கால் அகன்றுவிட பாவமும் சகதியன்று
குளிக்க அகலும் புறவழுக்கு - பாவமோ
களியாகி உள்ளிருக்கும் சர்வக்ஞ.

520. வேதியரும் வேதமோதி அவிசொரியின் - கீழ்ச்
சாதி வேசிபால் சென்றபவம் களையுமென்பார்க்கு
ஆதிவிதியும் விட்டொழியுமோ சர்வக்ஞ.

அ. வேள்வி மறுப்பு

521. யாகத்தின் பொருட்டு வெட்டித்தின்பர் ஆட்டை
யாகத்தில் பயனிருப்ப துண்மையெனில் - கொன்றதை
யாகத்தால் மீட்பரோ சர்வக்ஞ.

522.* ஆட்டைத் தினற்பொருட்டு செய்வர் வேள்வி
ஆட்டைக் குத்திக்கொல்லும் கீழோராம் பார்ப்பனரை
காட்டில் விடுவம் சர்வக்ஞ.

523. கன்னியாட்டை உண்பர் வானுலகு என்பர்
கன்னலென பிணம் தின்னும் நாயும்
இன்னலில் உழல்வதேன் சர்வக்ஞ.

524. ஆட்டுக் குட்டிக்கு இடரிழைத்தே கொன்று
வீட்டுப் பேறடையும் பார்ப்பனரினும் - வண்ணான்
வீட்டுக் கழுதையேமேலாம் சர்வக்ஞ.

525. பிறவிப்பயனெனக் கருதியே வேள்வி ஆடுண்போர்
துறக்கம் அடைவரேல் - நாளும் கொன்றுண்போர்
துறக்கத்துள் பின்னடைவேன் சர்வக்ஞ.

* சர்வக்ஞரின் காலத்திலும் வேள்வியின் பொருட்டு உயிர்களைக் கொன்றோர் பார்ப்பனர்களே என்பது வெள்ளிடை மலை.

கூ. குல மறுப்பு

புலையன் யார்

526. செத்த கழுதையை சுமப்போர் புலையரோ?
உத்தமரெனக் காட்டியே பிறசீர் பறிப்பவரே
நித்தமும் புலையராம் சர்வக்ஞ.

527. செத்ததை உண்போர் எத்தகைப் புலையோர்
குத்திக்குத்தியே உயிரின் கழுத்தறுத் துண்போர்
சத்தியமாய் கீழோராம் சர்வக்ஞ.

528. புலையன்தோட்டி உண்டு விட்டகலும் தோல்நன்றென
குலமுயர் அந்தணரும் கொள்வரதை எனில்
புலையனின் குலம்யாது சர்வக்ஞ.

529. ஞானியர் செருக்கறியார் யோகியர் குலமறியார்
வானமோ தாங்கும் தூண்களறியா - மேலுலகில்
மேன்மை புன்மையில்லை சர்வக்ஞ.

530. எலும்பில்லை நாவுக்கு பலமில்லை ஏழைக்கு
பலமிகு தூண்களில்லை வானுக்கு - இறைவனுக்கு
குலபேதங்கள் இல்லை சர்வக்ஞ.

கo. பார்ப்பனருக்குப் பெருமையேன்?

531. தீட்டாகும் மாசிடத்தே பிறக்கு முலகு
தீட்டென விலகுவர் தொட்டவுடன் - பார்ப்பனரும்
எடுத்தவுயிர் எவ்விடம் சர்வக்ஞ.

532. தீட்டானவளைத் தொடவும் ஒப்பார் காண்
தீட்டைத் தடுத்துப் பெற்ற குழவியை
ஆட்டுவிக்க தொட்டெடுப்பதுமேன் சர்வக்ஞ.

533. சிறுநீரும் நிணநீரும் மாசுடை ஊனும்நாற
பெருஉதிரம் கொட்டுகின்ற இடம்பிறக்கும் பார்ப்பனரும்
பொருளிலா குலம்பேசுவர் சர்வக்ஞ.

534. உத்தமரென்போர் பாற்கடலின் பிறந்தவரா என்ன?
உத்தமர் அல்லாதவரென வேண்டா - உதிரத்தினூடே
உதிக்காதவரும் உண்டோ சர்வக்ஞ.

கக. சாதி மறுப்பு

535. மெய்யுறுப்புகள் ஒத்தன மாந்தருக் கெனில்
உயர்ந்தோன் தாழ்ந்தோன் பக்த நாத்திகனெனும்
பொய்ப்பாடல்கள் வந்ததெங்கே சர்வக்ஞ.

536. சுழலும் உலகொன்றே பருகும் நீரொன்றே
சுடுகின்ற தீயொன்றே சாதியும் குலமும்
நடுவே புகுந்ததெவன் சர்வக்ஞ.

537. பருகுகின்ற பொதுநீரைக் கொண்டு சமைத்தே
அருகருகே அமர்ந்துண்ண மறுக்கும் மாந்தரின்
நெருங்கிய உறவுமேன் சர்வக்ஞ.

கஉ. உயர்சாதியினர் யார் யார்?

538. விண்ணுலகப் பாதையைப் பார்ப்பனரே அறிவரோ?
மண்ணில் - மேன்மைச் செயலாற்றும் பெண்ணும்
விண்ணுலகைக் காட்டுவள் சர்வக்ஞ.

539. சாதியில் கீழெனில் அவ்வீட்டொளியும் கீழாமோ?
சாதி பறைசாதி எனவேண்டா இறையுணர்ந்தார்
சாதியில் உயர்வாம் சர்வக்ஞ.

540. சிவனில் பற்றுள்ளோர் சாதியில் புலையரல்லர்
சிவனில் பற்றிலார் உயர் சாதியாயினும்
அவத்தின் புலையரேஆம் சர்வக்ஞ.

541. மணம் நிறைந்திருக்க எம்மலர் இருந்தென்ன?
மண்சாதியில் மேல்கீழென வேண்டற்க - இறையருளுள்
மணந்தவனே மேலாம் சர்வக்ஞ.

கங. பிராமணர் குணம் - உத்தமர்

542. *ஓர்ந்த மகன் ஒழுக்கத்து மனைவி
ஆர்நீதியின் அந்தணர் இருப்பின் உலகில்
ஈர்மைமிகு ஒளிபோல்வர் சர்வக்ஞ.

* ஓர்தல் - ஆராய்தல், ஆர் - கூர்மை, ஈர்மை - நுண்மை, பெருமை

543. இழை இருப்பின் முத்தும் ஆரமாம்
நிலையறிந் தொழுகும் அந்தணர் நட்பும்
அலைகடலினும் பெரிதாம் சர்வக்ஞ.

544. உத்தமரென்ப வாய்மையுள் நிற்பர் நாளும்
உத்தமரை நீசரெனச் சொல்லற்க - மண்ணிலவர்
முத்துக்கு நிகராம் சர்வக்ஞ.

545. சாதியில் உயர்ந்தோன் உத்தமன் என்றெண்ணற்க
மேதினி வாழ் மாந்தர் சமமென்பார்
மேதினியில் உத்தமராம் சர்வக்ஞ.

கசு. பிராமணர் இலக்கணம்

546. அந்தணராற் பெறுவது கல்வியறிவாம் - வாய்மையின்
அந்தணர் இன்றேல் - கடிதில் கெடும்
இத்தரையும் காண் சர்வக்ஞ.

547. கற்றார் பெறுவர்கோடி அற்றார் அஃதிலார்
கற்றார் நாடாள்வர் நாளும் - பார்ப்பனர்
கற்றறிவின்றிக் கெட்டனரே சர்வக்ஞ.

548. பிறப்பில் பிரம்மனெனப் பறப்பான் பார்ப்பனன்
பிறரொப்ப பார்ப்பனும் காமச்சினத்துள் மூழ்கின்
பிறரினும் கீழாம் சர்வக்ஞ.

கரு. குணமிலான்

549. உள்ளொன்று நினைப்பான் புறமொன்றாய் இருப்பான்
பள்ளத்தில் யாண்டும்விழான் நச்சுடைப் பார்ப்பனனின்
கள்ளப்பாதையே வேண்டற்க சர்வக்ஞ.

550. வேடருக்குக் குடைக்கேடு ஆடுநர்க்கு மழைக்கேடு
கேட்டுண்போருக்கு வற்கடம் கேடு - புன்சொல்
கேடாம் அந்தணருக்கு சர்வக்ஞ.

கச. தன்னலவாதிகள்

551. கிடைப்பது சிறிதெனினும் விடார் பயனுறு பணியாற்றார்
இடைவிடாப் பணியில் தள்ளுவர் பிறரை - அந்தணர்
உடையர் தன்னலமே சர்வக்ஞ.

552. கொடுப்பின் தலைமுதுகுத் தட்டுவர் பார்ப்பனர்
கொடுக்காக்கால் அடித்தே வீழ்த்துவர் - பார்ப்பனர்தம்
கொடும்நட்பே வேண்டற்க சர்வக்ஞ.

553. அழகில்லா மனைவியும் விளக்கில்லா வீடும்
ஒழுக்கமில்லா அந்தணரும் - பிச்சைப் பாத்திரம்
நழுவி உடைந்ததன்ன சர்வக்ஞ.

554. பார்ப்பனரை நம்பியே பாரில் எஞ்சியவர்யார்?
பார்ப்பனரை நம்பியே பார்வேந்தரும் கெட
பார்ப்பனரை நம்புவரெவர் சர்வக்ஞ.

555. கெடின் அந்தணரைப்போல் கெடுவர் யாருமிலர்
கெட்டதை விட்டொழிப்பின் - அவரொப்ப நல்லோர்
நாட்டினில் இலர் சர்வக்ஞ.

556. சீறும்நாகத்துக்கு ஓய்வும் பார்ப்பனருக்குச் சினமும்
வீறுகொண்ட வேழத்துக்கு மதமும் எனில்
பேறுடையோரும் வாழ்வரோ சர்வக்ஞ.

557. ஏழைப்புலையர் கள்ளுக்கும் வன்கண்ணர் ஊனுக்கும்
உழவரோ தண்டத்துக்கெனில் - பார்ப்பனரோ
உழைத்திடுவர் பிண்டத்துக்கு சர்வக்ஞ.

16. சமணம்

க. சமணம் புகழுடைத்ததா?

558. கேடுடை இவ்வுலகு தலையிலா உடலென்ப
படைப்பில் உயர்வு சமணமே என்னும்
அடைமொழியு மேனோ சர்வக்ஞ.

559. கொல்லும் (அ)தர்மத்தைக் களைந்தே நெருப்பிலிடு
கொல்வது கூடாதெனும் சமண வேதமே
நல்லெனப் போற்றிடு சர்வக்ஞ.

உ. சமணத்தின் பிறப்பு

560. ஆதியில் சமணமில்லை வேதத்தில் பொய்யில்லையெனும்
வாதத்தில் பொருளில்லை கீழோர் என்பவரும்
மேதகு விண்ணிலில்லை சர்வக்ஞ.

ங. சமணர் மேன்மை

561. தப்பு உரைப்பர் சமணர் என்பதுவும்
உப்புச் சப்பாம் கற்பூரம் கறுப்பென்பதுவும்
ஒப்பு உடைத்தாம் சர்வக்ஞ.

562. ஒழுக்கமென்றே தண்டு கமண்டலமேந்தி - அப்
பழுக்கிலா செத்த மயிலிறகை கையேந்துதல்
இழுக்கன்றோ சொல் சர்வக்ஞ.

ச. கொல்லாமை

563. கொல்லாமையெனும் அறம் ஒப்பா முலகுக்கு
கொல்லாமையை மீறின் - நில்லாமை இன்றி
செல்வர் நரகம் சர்வக்ஞ.

564. பேன்பூச்சிகளைத் தானாகிக் கொல்லாச் சமணர்
மண்மீ தவற்றை இடமாற்றுவர் - ஆயிற்றுஎன்
பின்னென அறியார் சர்வக்ஞ.

565. உயிர்கள் உயிர்களைத்தின்று உயிர்ப்பிக்கும் பிறவுயிரெனில்
உயிர்களுக்கு இறப்புமேது - சுயநலமே இறப்பாம்
உயிர்களுக்கு மண்ணில் சர்வக்ஞ.

566. அசைவ ஊனுண்டு உயிர்த்திருக்கும் பாதியுலகு
அசைவ மற்றதையுண்டு உயிர்த்திருக்கும் மீதியுலகு
திசையெலாம் இஃதுண்மை சர்வக்ஞ.

567. தாவரம் உண்பர் தவமுனிவரைப் போலாம்
தாவரமும் உயிரற்றதென சமணரும் - உண்டமீதியை
செவ்விய சந்தையிலிடுவர் சர்வக்ஞ.

568. உயிரொன்றைப் பிறவுயிர் உண்டுவாழு முலகில்
உயிரொன்றைக் கொல்லலாகா எனும் சமணம்
உயிர்ப்ப தெவண் சர்வக்ஞ.

17. மூடர்

க. புல்லர் நிலை

569. வான் மழை பொழியினும் கற்பாறையது
வான் மழையை உட்கொள்ளுமோ - மூடருக்கும்
வீணாம் உரைப்பதுபல சர்வக்ஞ.

உ. கீழோரோடு வாதம் செய்யற்க

570. வானும் மண்ணும் இணைத்துத் தைப்பரெனில்
வான்மண் தைப்பர் தையல்காரர் என்றிடுக
வீண்வாதமேன் மூடரொடு சர்வக்ஞ.

571. ஒன்றை இரண்டென்பர் பன்றியைப் பாயும்புலியென்பர்
முன்னிருப்பது கோயிலன்று மரமென்பர் - மூடர்
எண்ணியதை எண்ணிடுவாய் சர்வக்ஞ.

572. அளந்திட இயலும் ஆற்றுநீரை ஒருவனேயெனில்
அளந்திட ஏலுமென்க - மூடர் நட்பு
பளிங்கல்ல உணர்வாய் சர்வக்ஞ.

573. மலையை எடுத்தொருவன் வைத்துளான் எனில்
தலையாட்டியே ஆமென் றுரைப்பாய் - மூடரோடு
வேலையே வேண்டற்க சர்வக்ஞ.

574. மலையும் ஆறும் தாண்டவும் முடியுமெனில்
தலையசைப்பீர் ஆமென்றே! மூடரோடு வாதம்
தலைமுறைக்கும் வேண்டாம் சர்வக்ஞ.

575. அடுப்புக் கல்லை விழுங்க முடியுமெனில்
அடிவயிற்றைக் காட்டியே ஆமென்ப - அறிவிலி
தடியரை வெல்வதரிது சர்வக்ஞ.

576. நாய்மேல் பாய்ந்து முயல் வெல்லுமெனில்
தொய்வின்றி பகர்க ஆமென - மூடரோடு
எய்தற்க கலகம் சர்வக்ஞ.

ரு. கீழோர் நட்பு வேண்டற்க

577. ஆட்டருகே இருப்பதும்கேடு கிறுக்கனின் நட்பும்கேடு
ஒட்டியுறவாடும் காதலர்க்கு சினமழுகைக் கேடு
மூடரின் நட்பும்கேடு சர்வக்ஞ.

18. கால அறிவு

க. பசவண்ணர் துதிப்பா

578. கால அறிவை ஊட்டினன் பசவனெனக்கு
ஞாலமதிலதை நானுரைப்பேன் உம்மகனாகி - திருநீறு
கோலமேந்தி நாளும் சர்வக்ஞ.

579. நெற்றியில்நீறிட்டே கற்பூரமொடு வெற்றிலை தந்தே
நெற்றிக் கண்ணனருளால் உரைப்பேன் கண்டதுயான்
ஒற்றிக்கொள்வீர் மனத்துள் சர்வக்ஞ.

உ. வீரபசவண்ணர் வருகை

580: *மன்னன் பிச்சளனினும் வீரபசவன் உயர்ந்தே
மண்ணில் வலம்வந்தார் கலியுகக் கடவுளென
அண்ணலுக்கு இணையார் சர்வக்ஞ.

581. அன்றுவந்தனன் இராமன் பன்னூறு யுகமுன்னர்
பின்னர் வந்தனன் வீரபசவன் ஈண்டு
மண்ணும் துலங்க சர்வக்ஞ.

ங. உலக நிலை

582. மலையும் நடுங்கும் உருளும் உலகுடன்
அலைகடலும் வற்றும் - சிவனின் பக்தியும்தன்
நிலையில் குன்றுங்கால் சர்வக்ஞ.

ச. தீயகாலத்தின் குறிகள்

583. மறவனின் இளவல் துட்டனின் மருமகனிடை
புறஞ்சொல்லிக் கலக மூட்டினால் - நாட்டில்
அறத்துக்கும் கேடாம் சர்வக்ஞ.

584. பட்டத்தானை மடிய முத்துக்கள் சிதறிஉடைய
மேட்டுப் புற்றேறி நரியுமழுதால் கேடாம்
நாட்டுக் கென்றுணர் சர்வக்ஞ.

---

*பிச்சளன் அரசனாக இருந்தபோது நிதியமைச்சராக இருந்தவர் பசவண்ணர்.

585. மதியும் பரிதியும் திங்களொன்றில் மறையினும்
மதிப்பின் தந்தையைமகன் கொன்றநாளிலும் - உலகின்
விதியே முடிவாம் சர்வக்ஞ.

ரு. காலத்தால் அழியும் பட்டணம்

586. *தென்றலுடை ஊருமன்று சென்னப் பட்டணம்
முன்னேறி மறையும் கிட்டிக்கோலென - தூளாகும்
சென்னப் பட்டணமே சர்வக்ஞ.

சா. காலத்தின் கண்டுபிடிப்பு (தொடர்வண்டி)

587. **விரைந்து ஓட்டுவர் எருதுகளற்ற வண்டியை
பரந்துள்ள தேயம் ஆளுவர் - முடிவில்
மரணமே எய்துவர் சர்வக்ஞ.

எ. காலந்தோறும் சிறப்புடையன

588. சுக்குநன்று, கோடைக்குப் பருத்தி நன்று,
தக்கபொய்யுரைத்தல் வஞ்சகிக்குநன்று, - மாலை வெய்யில்
மிக்கநன்று உடலுக்கு சர்வக்ஞ.

589. உணவில் கஞ்சிநன்றாம் கோடையில் குடைநன்றாம்
உண்டான மருமகளும் நன்றாம் - அவைக்கு
நன்றாம் நவரசிகன் சர்வக்ஞ.

590. அளவில் குள்ளப்பெண்ணும் குதிரைக்குக் கொள்ளும்
அளவோடுபெற்ற கடனடைப்பது நன்றன்ன - பெரியோர்க்கு
அளவில்பெருந் தாடியும்நன்றாம் சர்வக்ஞ.

591. உடல்பேண அரிசிநன்று பிரண்டைத் துவையலும்நன்று
அடலொப்ப மக்களினும் தாய்நன்று - உலகில்
கடலென செல்வம்நன்றாம் சர்வக்ஞ.

585. மதி, பரிதி மறைதல் = கிரகணம்

* கிட்டிக்கோல் : 'கிட்டிப்புள்' என்னும் பெயரிலும் நாட்டுப்புற நகர்ப்புற சிறுவர்களால் விளையாடும் ஆட்டம் - (கில்லித்தாண்டல் என்றும் கொச்சையாக அழைப்பதுண்டு)

** ஆங்கிலேயரை மனத்துள் கொண்டு எழுந்துள்ள பாடல் (இப்பாடலால் சர்வக்ஞர் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் காலகட்டம் முரண்படுகிறது. இப்பாடல் இடைச்செருகல் எனலாம்.)

592. பளிங்கும் பார்வைக்கழகு மாயவித்தையும் இருளிலழகு
களித்தரும் பட்டாடை உடுப்பதழகு - உணவில்
புளிப்போடு பல்சுவையும்நன்றாம் சர்வக்ஞ.

593. உருக்கிய நெய்யுணவும் மாடிமனையும் நன்றாம்
பெருமைமிகு மறம்நிறை மகன்நன்று - தையற்காரன்
ஊருக்கு நன்றாம் சர்வக்ஞ.

594. மின்னல் முகிலுக்குநன்று; முக்கனி சுவைக்குநன்று
மின்னலிடையாள் மனைக்கு நன்றன்ன - ஊருக்கு
மின்னும்நகை செய்வோரும்நன்றாம் சர்வக்ஞ.

595. வீட்டுக்கு நல்லிடமழகு; வில்லுக்குக் கணையழகு
கூட்டுக்குக் கறியழகொப்ப - குயவரும் அழகாம்
நாட்டுக்கு நாளும் சர்வக்ஞ.

596. உறுதிமிகு மனைநன்று; சிவனருள் நன்று
உறுதிதரும் மன்னன்நன்று - கிணறு குளங்கள்
நிரம்புவதும் நன்றாம் சர்வக்ஞ.

597. வாழைத்தோட்டம் நன்று; வானுயர் மாளிகைநன்றுசெவ்
வாழையன்ன பெண்நன்று - நாச்சுவைக்க நன்றாம்
குழைத்துச்சுட்ட இனிப்புருண்டை சர்வக்ஞ.

598. விஞ்சிய பெண்மொழிநன்று வீணையின் இசைநன்று
எஞ்ஞான்றும் ஒளிமுகம் நன்று - பதிமுகம்
எஞ்ஞான்றும் காண்பதுவும்நன்றாம் சர்வக்ஞ.

599. மருக்கொழுந்து நன்றாம் பரிதிதேர் நன்றாம்
பெருமையின் அரண்மனைவாழ்வும் நன்றன்ன - குற்றமதை
மறப்பதுவும் நன்றாம் சர்வக்ஞ.

600. தயவில்பெறும் பாலினும் நீர்க்கஞ்சியே நன்றாம்
நாயென இழிந்துணும் சுடுசோறினும் - இரப்போரின்
நயமிகு சுற்றம்நன்றாம் சர்வக்ஞ.

601. சுட்டதினையும் நன்றாம் சமைத்தசோறும் நன்றாம்
*கட்டாணிமுத்தனைய இல்லாள் நன்றாம் - இடையில்
உடுக்கையும் நன்றாம் சர்வக்ஞ.

602. அறிவர்க்குப் பண்பும் பெண்டிர்க்குப் பதியும்ஆய்ந்த
அறிவர்க்கு மொழியும் நன்றன்ன - பொறுமையும்
அறிவர்க்கு நன்றாம் சர்வக்ஞ.

603. அறிவர்க்கு அறிவர்நன்றாம் எருதுக்கெருது நன்றாம்
அறிவினும் பண்பே நன்றன்ன - உருக்கு
அறிந்தவணிகனும் நன்றாம் சர்வக்ஞ.

604. கணையாழிக்குப் பரலும் பரிக்குக் கொள்ளும்
சுனையின்மணல் தென்னைக்கும் நன்றன்ன - சுருள்மயிரும்
புனைவுக்கு நன்றாம் சர்வக்ஞ.

605. கழுத்துக்கு முத்தும்நன்று, பாம்புக்குப் புற்றும்நன்று,
கழுதையும் சுமைக்கு நன்றன்ன - நெய்ச்சோறு
செழுமை உடைத்தாம் சர்வக்ஞ.

606. பசுமையின் ஏரியும்நன்று பாய்ந்துவரும் நதியும்நன்று
பசும்பொன் வணிகர்நட்பும் நன்றன்ன-தரைக்கு
அசுகையின்கடல் நன்றாம் சர்வக்ஞ.

607. எளியமோரும் உணவுக்குநன்று, நீராட மடியும்நன்று,
போளியோடு நெய்யுண்ணல் நன்றன்ன - வீட்டுக்கு
எளியவளாம் அவ்வைநன்று சர்வக்ஞ.

608. பெண்ணுக்கு நளினமும் குதிரைக்குப் புல்லும்
மண்ணில் அறிவுடையார் கேண்மையன்ன - பருகிட
தண்ணீரும் நன்றாம் சர்வக்ஞ.

609. அறிவுரையும் இனிதாம் உளுந்துவடையும் இனிதாம்
பறிபோனது கிடைப்பதும் இனிதாம் - மழலையரை
பரிந்தேத்தல் இனிதாம் சர்வக்ஞ.

* கட்டாணிமுத்து - வட்டார வழக்குச் சொல்
606. அசுகை = எழில்

610. மழையும்சிறப்பாம் கள்வருக்கு, தயிரும்சிறப்பாம் ஆயருக்கு,
வலையும்சிறப்பாம் மீனவருக்கு, குருடருக்கு நாளும்
அலைவதில் சிறப்பாம் சர்வக்ஞ.

611. காசுநன்று செலவுக்கு, பாலும்நன்று அப்பத்துக்கு,
சேய்க்கு தாய்நன்று, விடலையர்க்கு முகத்தில்
மீசையும் நன்றாம் சர்வக்ஞ.

612. மல்லிகைப் பூநன்று, வல்லோர்நட்பும் நன்றாம்,
இல்லையெனாது கறக்கும் பசுநன்று, - நிறைமகளிர்ச்
சொல்லும் நன்றாம் சர்வக்ஞ.

19. கேடாவன கேடுடைத்து

613. நனைந்த பயிரும்கேடு அறுந்த வலையும்கேடு
புனையும் வித்தையும்கேடு - அறிவர்முன் விண்மீன்கள்
அனைத்தும் கூட்டுவதுகேடாம் சர்வக்ஞ.

614. கடும்புதரின் வயலும்கேடு வேசிக்கு விவேகம்கேடு
கடுமிருளில் வாசம்கேடு - உறக்கத்தில் குறட்டை
விடுவதும் கேடாம் சர்வக்ஞ.

615. கொல்விலங்கும் காட்டுக்குக்கேடு மாந்தருக்குச்
சிறையும்கேடு
செல்வந்தர் பகையும் கேடு - கூகைக்கு
தொல்லைதரும் பகலும்கேடு சர்வக்ஞ.

616. எச்சிற் பண்டமும்கேடு மாலையுணவும் பயக்கும்கேடு
நச்சும்கேடு - மனையில் எந்நாளும் சண்டையும்
சச்சரவும் கேடாம் சர்வக்ஞ.

617. கூர்கற்கள் காலுக்குக்கேடு கழுதைக்குக் கொள்ளும்கேடு
காரிருளில் பயணமும் கேடுபணிப் பெண்ணுக்குச்
சுருள்கூந்தலும் கேடாம் சர்வக்ஞ.

20. நடுவு நிலைமை

க. அறமும் குற்றமும்

618. அறியாமற்செய்த பிழைதனை அறிந்துணர்தல் நன்று
அறிந்தேசெய்து மறப்பது - தன்னிரு நயனங்களை
அரிந்து கொண்டன்ன சர்வக்ஞ.

619. தேங்கியநீரும் தோண்டிய கிணற்றுக்குச் சாட்சி
தாங்கியசெயலுக்கு மனமே சாட்சி - அனைத்துக்கும்
செங்கண்ணனே சாட்சியாம் சர்வக்ஞ.

620. நல்வினை தீவினையெனும் பெரிய வேற்றுமையான்
மெல்லென இயங்கும் இவ்வுலகு இன்றேல்
சில்லெனச் சிதறும்காண் சர்வக்ஞ.

621. இளமைப் பிழைகள் முதுமையில் மறையுங்கொல்?
இளமைமுதுமையெனப் பாரான் இறைவன் - பாரீர்
அளந்தறிவீர் இஃது சர்வக்ஞ.

622. அதிகாலையின் குற்றம் இரவினில் மறையுமோ?
விதியென்ப உரைக் கல்லாம் - இஃதறிந்து
நீதியில்நீ நின்றிடுவாய் சர்வக்ஞ.

623. அறிந் தாற்றிய பிழையும் மறந்திடுமோ?
மறப்பினும் நிற்கும் நினைவில் - குற்ற
மறிந்து பாராய் சர்வக்ஞ.

624. மேன்மையும் உண்டாம் செயலும் பயனாம்
மண்ணும் பொன்னாம் - நல்வினை ஒன்று
மண்ணில் உள்ளவரை சர்வக்ஞ.

625. முன்செய் பிழையும் பொன்னீயின் போகுங்கொல்?
பொன்னீந்து பெறுகின்ற பேறுவேறாம் - மண்ணில்
முன்செய் பிழையகலா சர்வக்ஞ.

626. முன்னையாற்றிய தீவினையும் பின்னை நல்வினையாமோ?
முன்னும் பின்னுமறிந்து செயலாற்றாக்கால் - நரகமாம்
கனல்வீழ்வது தப்பா சர்வக்ஞ.

உ. வாய்மை

627. வாய்மையில் நின்று இடருற்றும் மகவிழந்தும்
வாய்மை தவறா அரிச்சந்திரன் - ஞாலத்தில்
ஏய்தினன் புகழ் சர்வக்ஞ.

628. திரிசேர்ந்த எண்ணெயால் விரியும் ஒளிச்சுடர்
நெறிசேர்ந்த மெய்யால் அகலும் இருமையிருள்
விரிகடல்சூழ் வையத்தில் சர்வக்ஞ.

629. வாய்மையென்ப எஞ்ஞான்றும் தெரியா கண்ணில்
வாய்மையோடு பொய்ம்மை கலப்பினும் - மண்ணில்
வாய்மையே வெல்லும் சர்வக்ஞ.

630. சத்திய சீலருக்குத் தலைசாய்க்கு முலகு
உத்தமியாம் பெற்றவள் அணைக்கும் சேயன்ன
பித்தனவன் (சிவன்) அரவணைப்பான் சர்வக்ஞ.

631. உறவுகளைவர் அறிவர், குறைகளைவர் அறிவர்,
பிறரை நோகார் தான்நொந்தும் - பொய்யுரையார்
இறவாத தேவராம் சர்வக்ஞ.

ந. பொய்ம்மை

632. பொய்யுரைப்பதினும் பசுக்கள்நூறு கொல்லுதல் நன்றே
பொய்யறியா சிசுவதையும் நன்றாம் - பின்னின்று
எய்தும் வேலினும் சர்வக்ஞ.

633. கார்பசு நன்று நன்னடத்தையின் மகன்நன்று
தாரென மணக்கும் கற்புடையாள் நன்று
பாரில்பொய்யறியா நாவும்நன்றாம் சர்வக்ஞ.

634. முடமும்கேடு, சிறுமிக்கு முதியோன் கேடு,
இடமறியாதுரைப்பது நாவுக்குக் கேடு, - தோற்பதும்
கேடாம் சமரில் சர்வக்ஞ.

635. பொய்யுரைத்து வாழ்தலினும் மிடியில் மடிவதுமேலாம்
பொய்யுரைத்து மேன்மையில் வாழ்தலினும் - சேற்றை
உய்த்திடும் பன்றியே மேலாம் சர்வக்ஞ.

௪. களவு

636. நல்லவனில்லா ஊரும் கள்ளர்தம் நட்பும்
பொல்லாப் பொய்யென மூன்றும்முள் தைத்ததுவாம்
அல்லிச் சேற்றில் சர்வக்ஞ.

637. செந்நிறமுடையினும் மணமறியா ஆம்பல் - புறத்தில்
செந்திறம் பூண்டோர்க்கில்லை குணம் - அகத்தில்
செந்நெறியுண்டோ கள்வருக்கும் சர்வக்ஞ.

638. அடிமுடியெனத் துன்பம்தொடர அச்சப் படுவதோ?
அடியாரும் குழறுவரே அச்சத்துள் - கள்வரும்மென்
அடிநடப்பரோ அச்சத்துள் சர்வக்ஞ.

ரு. இருளின் உயிர்கள்

639. கள்ளப்பூனை, கூகை,யெலி, மூட்டை, அரக்கர்,
கள்ளர், கணிகையொடு கொசுவும் - இருளின்
பிள்ளைகள் என்றறிவாய் சர்வக்ஞ.

சு. மனிதக் கொலை

640. நரரைக் கொல்வோர் நரகம் அடைவர்
கர்ப்பம்குரு பெண்கொலை செய்வோர் - வாழ்வேகொடும்
நரகமாம் காண் சர்வக்ஞ.

எ. போர்

641. வலிமை மிக்கார் கெடுவரே குலமுமழிய
வலிமை பூதமும் துரியோதனாதிகளும் அழிந்தனரே
வலிமைச் செருக்கால் சர்வக்ஞ.

அ. காமம்

642. ஒன்றுடனொன்பது தலைகளுடையான் வீரத்தோள்கள் இருபதுடையான்
தன்னுறவுகளும் கெட்டொழிய கரணியமே - சீதையைத்
தன்பிணை ஆக்கியதாம் சர்வக்ஞ.

643. பரத்தையர் நட்பும் பாலோடு தேனாம்
பிரிதொருவர் அஃதறியின் - வேம்பின் சாறு
பருகியது போலாம் சர்வக்ஞ.

644. பிறரறியா பரத்தையர்நட்பு காய்ச்சிய பாலன்ன
அறியின் அடுத்தவர் - காய்ச்சிய இரும்பை
எறிந்ததுபோலாம் உடலில் சர்வக்ஞ.

645. பிறன்மனை விரும்பின் ஒறுக்கும் அரசு
உறவும் பிறரும் சினப்பர் - நரகே
உ(றை)றவிடமாம் காண் சர்வக்ஞ.

646. பொருள்பல இழப்பினும் சாகுமிடர் நெருங்கினும்
திருகியுன் என்புகள் முறியினும் - வேசியாகிப்
பொருளீட்டல் வேண்டா சர்வக்ஞ.

647. காமனை அன்று சிவனெரித்தகதை பொய்யே
கோமள நங்கையர் நிலவுக்கண்களில் - இன்றும்
காமனேகொண் டுள்ளான்குடி சர்வக்ஞ.

648. பிறன் மனையாளைப் பெற்ற தாயென
அறிந்து நடப்பாருக்கு இருமையுள்ளும் அச்சமில்லை
அறிவாய் உலகில் சர்வக்ஞ.

649. முகமதியர் சுற்றம்கேடு, வணிகன் நட்பும்கேடு,
முகம்வாட இரந்துண்பதும் கேடு, பிறபெண்டிரோடு
அகமகிழ்ந் தாடுவதும்கேடு சர்வக்ஞ.

650. தொடுவது யாரை? விடுவது யாரை? யெனின்
தொடுவது நன்றே மனையாளை - பிறன்மனை
தொடாததும் நன்றாம் சர்வக்ஞ.

651. * ஈரைந்து தலையுடை இராவணன் இறந்தான்
வீரனாம் கீசகன் இறந்தான் - பிறன்மனை
இரவுதல் வேண்டாம் சர்வக்ஞ.

* இராவணன் சீதை; கீசகன் திரௌபதி

652. **விட்டுப்பிடிப்பதுவும் கொடுத்து மருகுதலும் வேண்டற்க
கெட்டவன் கேண்மை வேண்டற்க - அடுத்தவர்
வீட்டுப்பெண்ணும் வேண்டற்க சர்வக்ஞ.

கூ. கற்புடையோள்

653. பிறராம் ஆடவரைப் பெற்றவனென எண்ணி
அறவழி நாடும் நங்கை - விண்ணில்
பெறுவள் பொன்வீடு சர்வக்ஞ.

க௦. பெற்றோர்

654. பெற்றோரைப் பரிவுடன் பேணிக் காப்பின்
உற்ற துன்பங்கள் மறைய - விண்ணுலகப்
பெற்றியும் தானேவரும் சர்வக்ஞ.

கக. சான்றோர்க்குப் பரிசு

655. நரரும் செல்வமீய கைலாயமே தருவர்
சுரரும் வரமென - பெரியோர் குருவை
பரமனென தொழுவோர்க்கு சர்வக்ஞ.

656. இறைத்துவம் இன்றியே இறைவன் என்பதுவோ?
இறைவன் யானிறைவனென வேண்டா - உலகில்
இறைத்துவமே இறைவனாம் சர்வக்ஞ.

கஉ. பிறரைக் கடிதல்

657. எண்ணியேசினத்தல் யோகிக்குக்கேடு, புணர்ச்சி நோயாளிக்குக்கேடு,
எண்ணெய்ச்சோறு உண்பதுகேடு, பிறரைக் கடிதல்
பண்டுமின்றும் கேடுடைத்தாம் சர்வக்ஞ.

கங. பேராசை

658. அழிக்கும் வாய்மையை, கெடுக்கும் அறத்தை,
ஒழிக்கும் நல்லுடலை, - பேராசையின் எண்ணம்
இழிவென ஒதுக்கிடுவாய் சர்வக்ஞ.

** பிறன்மனை நோக்காப் பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு. - திருக்குறள்

656. இறைத்துவம் = பக்தி

659. துரியோதனன் கண்ட பலனென்ன பேராசையால்
துரியோதனன் உடலும் அரிந்து இரண்டானக்கால்
உரியபலன் கொண்டனனோ சர்வக்ஞ.

660. உடன் பிறந்தாரும் தம்பங்கின் சீர்கேட்ப
உடன்படார் கொடுப்பதற்கே - மடியின் சமரில்
உடன் புதைப்பரோ சர்வக்ஞ.

கசு. அகந்தை

661. கண்ணிலான் காணான் தன்னெதிர் வருவாரை
கண்முன் கண்டும் வாவென்றழையா செருக்குடையார்
கேண்மைத் தவிர் சர்வக்ஞ.

662. உச்சிக் கொம்பேறி தலை குப்புறவே
அச்சு சாய்த்தழிவதன்ன-வீண் சொல்லாடும்
இச்செகத்து அகந்தையோர் சர்வக்ஞ.

கரு. பகை

663. சாதிக்குச் சாதிப்பகை மூடருக்கு நீதிப்பகை
ஓதியமேதகைக்கு பாபமே பகையாம் - அறிவர்க்கு
யாதில் உண்டோபகை சர்வக்ஞ.

கசா. நீதியின் நிலை

664. மனமடக்கிய உடலிடையே நீதியெனும் வீடுண்டு
மனம் திரிந்தார்க்கு சிறையாமஃது - மேன்வீடும்
மனம் அடக்கியார்க்காம் சர்வக்ஞ.

கஎ. தொழில் நீதி

பணமே பெரிது

665. பொருள் உடனுள்ளவரை மனைவிமக்கள் அன்பு
பொருள் அகன்ற மறுநாள் - விட்டகல்வர்
இருளில் அவரும் சர்வக்ஞ.

666. பொன்னும்பொருளும் உள்ளவரை ஞாயிறன்ன ஒளிர்வர்
பொன்னும்பொருளும் அழிந்த பிறநாள் - பாழூரின்
புண்கண்ட நாயாவர் சர்வக்ஞ.

667. பொருள் உள்ளவரை பெரியோனெனப் போற்றி
பொருள் அகன்ற மறுபோதில் - நரியெனப்
பொருள் கொள்ளுமுலகு சர்வக்ஞ.

668. எட்டுக்காசு உள்ளவரை வீராதி வீரனென்ப
எட்டுக்காசும் போன பின்னர் - புழுவரித்த
கட்டுக் கீரையாவர் சர்வக்ஞ.

669. பணமிரண்டு கைவரின் பறப்பர் வான்பருந்தென
பணமிரண்டு இழந்த நொடியில் - முதுநாயின்
குணமாவர் காண் சர்வக்ஞ.

670. நாலுகாசு உள்ளவரை பல்லக்கில் பவனி
நாலுகாசு போன மறுநாளில் - சேற்றில்
காலூன்றியது போலாவர் சர்வக்ஞ.

கஅ. செய்நன்றி கொன்றார்க்கும் உதவி

671. கண்டதை உரைப்பின் வெகுளும் உலகு
கொண்டாடியே உவப்ப மொழியின் - இவ்வுலகு
கொண்டாடி மகிழும் சர்வக்ஞ.

672. சினங்காக்க சினப்போரிடம், அமைதிகா போரிடத்து,
மனத்தின் கடமை மறவாதிரு - சிவனருளால்
கனம் அடைவாய் சர்வக்ஞ.

673. சினப்போரை நினைமின் பணிவில் நடமின்
அணங்கு வலையில் வீழாதிருமின் - பொருட்சுகம்
மனத்துள் நிறையும்காண் சர்வக்ஞ.

674. கண்ட துரைப்ப கண்சிவக்கு முலகு
கண்ட துரைப்பவரை மண்ணில் நாளும்
காண்ப தரிதாம் சர்வக்ஞ.

675. *அடுக்கும் கேடுனக்கு பிறர்க்குக் கேடுசெய்யின்
சுடும் தணலெடுத்து எறியும் வேளையில்
சுடுமே தன்கையும் சர்வக்ஞ.

* பிறர்க்கு இன்னா முற்பகல்செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும் - திருக்குறள்

கக௯. நம்பற்க யாரையும்

676. பிறரையும் கைம்பெண்டிரையும் யாதாயினும் நம்பற்க
பிறனல்லன் தன்மகனையே கொன்றனள் குந்தவி
பிறரை நம்புவதெவன் சர்வக்ஞ.

உ௦. மாற்றார் பிழையும் மலைபோன்றதாம்

677. தம்பிழைகள் நூறுநூறு தாமே மறைப்பர்
தமதல்லாப் பிழைக்குப் புலியாவர் - மண்ணில்
ஞமலியன்றோ இவர் சர்வக்ஞ.

உக. மாந்தரிடம் பயம் வேண்டற்க

678. பிறரை அறியும்வரை பிறரிடம் பேசாதிரு
பிறரை நம்பியே ஊரொன்றில் தங்காதிரு - சிவனும்
மறவாதுஇருப்பானுன் மனமறிந்து சர்வக்ஞ.

உஉ. செவிமடுப்பது அறிவாம்

679. அறிவுரையும் நன்றாம் செவிமடுப்போர் இருப்பின்
அறிவுரை பகன்றென்? மடமை உழலும்
அறிவிலா மாந்தருக்கு சர்வக்ஞ.

உ௩. நல்லோர் கெடுவது துன்பமாம்

680. தத்துவம் பொய்த்து உத்தமர் வீழ்ந்து
தத்துவப் பெரியார் கேடடையின் - வாய்மையை
எத்திக்கில் தேடுவது சர்வக்ஞ.

உ௪. ஒருதலை நோக்கு

681. மெலியோன் உரைக்க மெய்யும் பொய்யென்ப
வலியோன் பதரன்ன உரைப்பினும் - போற்றியே
வழுத்துவர் பாரில் சர்வக்ஞ.

682. உடுத்துவது பட்டெனில் பணிவாய் மொழிவர்
உடுத்துவது கிழிசலெனில் உடன் பிறப்பாயினும்
கடுகடுப்பர் சொல்லில் சர்வக்ஞ.

உரு. வினையின் முடிச்சு

683. பிழை செய்யார்க்குப் பிணை தேவையன்று
பிழை செய்வோர்க்குப் பிணையும் சிறையும்
இழைப்பதே சரியாம் சர்வக்ஞ.

684. பிழை செய்தார்க்குத் தப்பாது விலங்கு
பிழையொன்றும் செய்யா அடியார்க்குக் - கைவிலங்கு
இழைத் தலுமேன் சர்வக்ஞ.

21. பல்வேறு தலைப்புகள்

க. பெண்

685. பெண்ணும் பொன்னும் கனிமரமும் இன்னவற்றைக்
கண்ணில் கண்டும் மகிழாத அண்ணன்மார்
மண்ணில் யாருளரோ சர்வக்ஞ.

686. சாதுவீரர் தூய்மை என்பர் சொல்லில்
மாதுதனமொடு பொன்னும் வாளும் பற்றின்
ஏதுசொல்லும் செயலும் சர்வக்ஞ.

687. உற்றவனின் அன்பும் உயர்யோகியின் தவமும்
கற்றவன்பண்பும் கெட்டொழியும் இரதிசொல் - செவி
உற்றபின் உலகில் சர்வக்ஞ.

688. பாரில் பலரிருப்பர் பெரியோர் சான்றோரென
நாரியொருத்தி நளின நடைபயின்றால்-அவளைச்
சாராதார் யாருளரோ? சர்வக்ஞ.

உ. பொன்

689. புனிதையின் பண்பும்கெடும் புலன்வென்றார் மதியும்கெடும்
மனித நேயத்தோர் மயலுறுவர் - பொன்னும்
புனிதமெனும் சொல்கேட்டு சர்வக்ஞ.

690. வலிமையென் செய்யும்? அழகென்செய்யும்? உயர்வெனும்
குலமென் செய்யும்? திருமகளும் உன்னை
மெ(ல்)லவே விட்டகன்றபின் சர்வக்ஞ.

691. உலகுக்குத் தேவையாம் தீயோர்க்கும் மூலமாம்
மேலுலகுக்கும் மூலமாம் - நயன்படா செல்வமது
கீழ்மைக்கும் மூலமாம் சர்வக்ஞ.

ங. மண்

692. மண்ணும் பெண்ணும் ஆள்வேன் எனவேண்டா
பெண்ணால் கெட்டவன் இலங்கைபதி - துரியன்
மண்ணால் கெட்டனன் சர்வக்ஞ.

---

692. துரியன் - துரியோதனன்

ச. கண்

693. *நன்றும் கண்களால் தீதும் கண்களால்
மண்ணும் விண்ணும் கண்களால் - உலகில்
கண்களே முதன்மையாம் சர்வக்ஞ.

694. அன்னியன் உன்னைக் கொன்றான் எனவேண்டா
கண்ணும் மனமும் நாமூன்றும் உனதாயினும்
உன்னையே கொல்வன சர்வக்ஞ.

ரு. நா

695. **கத்தியின் காயம் தோன்றினும் மறையும்
கத்தியினும் - சுழலும் நாவின் சொல்வடு
நித்தியமாம் காண் சர்வக்ஞ.

சா. பெயரிடுதல்

696. நட்புறவுக் கூடியே தாலாட்டுப் பாடியே
நெருநல் இறந்தார் நாமம் சூ(ட்)டியே - இனிப்புண்டு
தொட்டி லாட்டுவர் சர்வக்ஞ.

எ. பிள்ளை

697. ***மன்னருக்குச் சேவைநன்று தேவைக்குப் பணம்நன்று
சினம்வெல்ல மனையாள் நன்று - மழலையர்மேல்
மனக்கருத்தும் நன்றாம் சர்வக்ஞ.

அ. மாந்த நிலை

698. ஆட்டத்தில் மழலை ஓட்டத்தில் இளமை
திடச் சிந்தையில் முதுமையாகி - இடுகாட்டை
அடைவர் காண் சர்வக்ஞ.

---

* கண்ணிற்கு அணிகலன் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும் - குறள்

** தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு - குறள்

*** பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற - குறள்

கூ. உறக்கம்

699. வனிதை யோகிக்குக்கேடு, கத்தரிக்காய் நோயாளிக்குக் கேடு
மனிதசுற்றத்துள் சண்டையும் கேடு - துயில
நுனிப்பலகை கேடாம் சர்வக்ஞ.

கo. அபின்

700. போதை மருந்துண்போர் கற்றோர் என்றெண்ணற்க
போதையும் சிரமேற கத்தியால் தனைக்குத்தியே
வாதைக் குள்ளாவர் சர்வக்ஞ.

கக. மது

701. கள்குடிப்போர் கத்தி எடுப்போர் - மன்னர்தம்
உள்ளன்புக்கு வாடுவோர் - மடிவர் நாளும்
உள்ளும்புறமும் ஒடுங்க சர்வக்ஞ.

702. எரிவீட்டில் பொருள்தேடுவோர் உயர்வென மதுவுண்போர்
ஊரும் நாகமொடு பிறன்மனையை கைப்பிடிப்போர்
துர்மரணம் தப்பார் சர்வக்ஞ.

703. பன்றியைப் போல்வனாம் மதுஉண்போன் கீழாம்
பன்றியோ பயனுடைத்து-நாளும் மதுஉண்போன்
பன்றியினும் கடையனாம் சர்வக்ஞ.

704. *கண்டோரை நிந்திப்பார் கண்டபோது கள்ளுண்பார்
புன்மொழிக்கும் நாணமடையார் காணின் இவரை
மண்ணில் ஒதுங்கிவிடு சர்வக்ஞ.

கஉ. நீர்ப்பானம்

705. கயவர் உறவும் ஈச்சமரமும் கேடாம்
பயனிலா கைம்பெண்டிர்கேடு - வீட்டில் நாளும்
பயமும் கேடாம் சர்வக்ஞ.

---

704. *உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார் - குறள்

706. கள்ளுண்டு கடிதில் பொருளுமுண்டு - அவலச்
சொல்லுண்டு தள்ளாடியே மடியின் - சந்ததி
பல்லூழிப் பாழாகும் சர்வக்ஞ.

707. நீசரின் உறவினும் ஈச்சமரமே நன்றாம்
ஈச்சமரமோ நன்மை பயக்கும் - நீசரவர்
ஈச்சமரத்தினும் தாழ்ந்தவராம் சர்வக்ஞ.

கரு. புகைப்பிடித்தல்

708. மேலாடை, உள்ளாடை விற்றே அருந்தியபின்
ஆலெனும் புகையை ஆடுவான்கிறுக்கனென - வாழ்வில்
மேலான மானமறியான் சர்வக்ஞ.

709. புகையிழுப்போர் அவலம் என்னென்ப உலகில்
புகைத்தாக்கம் தலையேறி ஆடுவான் பாடுவான்
தகையிலா பித்தனென சர்வக்ஞ.

க சு. தாம்பூலம்

710. வெற்றிலையில்லா வாயும் கூழில்லா நாயும்
சுற்றிலும் பொற்புடை வாழையில்லாத் தோட்டமும் - கூத்தில்
இற்றுப்போன மத்தளமாம் சர்வக்ஞ.

711. வெய்யில் மழைக் காற்றுக்கொதுங்க மாடவீடும்
நெய் விரவிய போளியும் நன்றாம்
வாய்மணக்கும் வெற்றிலையொடு சர்வக்ஞ.

712. வெற்றிலை அற்றவாயும் முண்டத்துக்கு நிகராம்
வெற்றிலை மென்று வீதிநடப்பது - ஐம்முகத்தோனுக்கு
உற்றசமமே காண் சர்வக்ஞ.

கரு. சூதாட்டம் (பகடை)

713. *பகடையும் சிறப்பென்றே நிதமும் ஆடற்க
பகடையால் முக்தியும் பிறவும் கெடவே
பகலும் இருளாகும் சர்வக்ஞ.

---

* பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின் - குறள்

714. ஆடுவோரும் கெடுவர் களிப்போரும் கெடுவர்
ஆடுவேன் பகடையென விரும்புவோர் அவரொடு
ஆடுகளத் தவர்கெடுவர் சர்வக்ஞ.

715. நோயும் பகடையும் தொற்றும் தன்மையாம்
நோயால் உடல்சுருங்கும் பகடையால் உலகில்
மாய்ந்திடு மனைத்தும் சர்வக்ஞ.

கச. ஒழுகுகின்ற வீடு

716. பாக்குசுவைக்கா வாயும் காதணியற்ற காதும்
தாக்குங்கால் கேடயமற்ற கரமும் ஒழுகும்வீடும்வில்
தாக்கியிறந்த நரிபோல்வ சர்வக்ஞ.

717. மண்வாழ்வும் சின்னாட்களாம் தன்மானமொடு வாழ்க
மன்னன் இராவணனும் தசரத மைந்தனும்
தன்மானத்துள் வாழ்ந்தவரே சர்வக்ஞ.

718. வலியோனெனும் செருக்கில் சமர்வீணே செய்யற்க
வலிமையின் வாலியும் இராமனொடு போரிட்டே
வலிமையால் கெட்டான் சர்வக்ஞ.

கஎ. கல்வி

719. கற்ற கல்வியும் சுற்றுமிடம் வந்திடுமே
உற்றார் உறவோர் கள்ளர்மன்னர் கைப்பற்றார்
கற்ற அறிவை சர்வக்ஞ.

720. கல்வியே தாய்தந்தை கல்வியே சோதரர்
கல்வியே இடர்களையும் உறவாம் - யாதுமூராம்
கல்வியால் நித்தம் சர்வக்ஞ.

721. இருக்குமிடமும் சிறப்பான் சென்றவிடமும் சிறப்பான்
தருமியன்ன வறியோன் மலைமீதிருப்பினும் கற்றகல்வியால்
பெருமையில் சிறப்பான் சர்வக்ஞ.

722. ஆறறிவுக்கு விலையில்லை கல்விக்கு எல்லையில்லை
புறம் பேசுவோர்க்கு இல்லைகதி - மருந்தில்லை
சிறப்புக்கு மண்ணில் சர்வக்ஞ.

723. கற்றாரின் முகமோ வொளிரும் - கல்வி
அற்றாரின் வெற்றுமுகமோ - பாழுரில் அலைந்து
சுற்றும்பருந்துக்கு நிகராம் சர்வக்ஞ.

724. சொலல் வல்லார்க்கு சொல்லும் மாணிக்கமாம்
சொல்லறியா பேதையருக்கு சொல்லெனும் மாணிக்கமே
சில்லாய் உடைத்தற்றாம் சர்வக்ஞ.

கரு. அறிவினும் பட்டறிவே உயர்

725. வனத்திற்குக் குயிலும் மனத்திற்கு மகிழ்வும்
மனகுணமிகு செல்வர்க்கு நட்பும் நன்றொப்ப
கனக்கல்வியினும்மேல் பட்டறிவாம் சர்வக்ஞ.

726. இன்பம் மாந்தருக்குநன்று பூங்காவுக்கு மலர்நன்று
தன்னறிவே நன்றாம் பொருளினும் - அறிவினும்
உன்னதப் பட்டறிவேநன்றாம் சர்வக்ஞ.

கசுு. பணி

727. படுத்தவிடம் படுத்திடார் பணிபுரிவோர் - புற்றில்
படுத்தபாம்பை குறியால் கவ்வும் கருடனைப்போல்
எடுத்தசெயல் முடித்திடுவர் சர்வக்ஞ.

728. பணியிருப்பின் பத்துப் பணம்கை வந்தடையும்
பணியற்று இருப்பின் வந்தடைந்த பணமும்
மனிதரிடம் அற்றுவிடும் சர்வக்ஞ.

729. கடுகடுப்பின் மனையாள் நீரொழுகும் ஒட்டைவீடு
எடுத்தசெயல் முடிக்காதான் வாழ்வினும் - மாய்க்கும்
கடுநோயே மேலாம் சர்வக்ஞ.

உ०. சாதனை

730. கூடிக்களிப்போர் போகமறிவர் பாடகர் பண்ணறிவர்
தேடிப்பல எழுதுவோர் படிப்பறிவர் - எடுத்தசெயல்
முடிப்போர் அறியவல்லோர் சர்வக்ஞ.

உக. பாடல் - பாடகன்

731. பொருளற்ற பாடல் பல்லாயிரமும் வீணாம்
பொருளறியா கழுதையும் பெருமையுடன் கனைக்க - அதில்
பொருளுண்டோ சொல்வாய் சர்வக்ஞ.

732. சந்தமில்லாப் பாடல் நாழிகைநூறு பாடியென்?
வெந்த கடுகெண்ணெயைக் கண்ணில் ஊற்றியே
நொந்தது போலாம் சர்வக்ஞ.

733. *சாய்ந்தழும் குழந்தைக்கு தாலாட்டுப் பாடின்
தாய்ச்சிந்தை மறந்துறங்கும் குழவியும் - தாலாட்டின்
ஆய்மையைக் கேளாய் சர்வக்ஞ.

734. நொண்டியின் நடையும்கோணல் நாயின் வாலும்கோணல்
சண்டிச்சினமுடை பெண்டிரின் மனமும்கோணல் - பாடகனின்
நொண்டிப்பாடலும் கோணலாம் சர்வக்ஞ.

உஉ. படித்தலும் கற்றலும்

735. படித்தநூற்கள் கரும்பின் சக்கையால் நெய்தபாயாம்
படித்துக் கற்ற நூற்கள் - செங்கரும்பின்
அடிச்சுவையைப் போலாம் சர்வக்ஞ.

உ௩. வெற்றுச் சொற்கள்

736. **பழுதிலாப்பொழிவுக்குப் பயன்தரா சொற்களாயிரமும் வீணே
கழுதை கத்தினால் பலனுண்டு - பயனிலசொலல்
கழுதைக்கும் கேடுடைத்தாம் சர்வக்ஞ.

உ௪. சொல்வன்மை

737. சொல்லில் வல்லோன் நீர்ப்பாய்ச்சும் ஏற்றமாம்
சொல்லறியான் நிலையோ நீரற்ற ஏற்றம்
அல்லாடியதன்ன காற்றில் சர்வக்ஞ.

---

* ஆய்மை - நுண்ணிய பொருள்.

** சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் - குறள்

738. பயனறிந் தாற்றியசொல் இறந்தோர் உயிர்ப்பதைப்போல்
பயனறியா தாற்றியசொல் - கையினின்று நழுவிய
உயர்ந்த முத்தன்ன சர்வக்ஞ.

739. சொல்லுக்குச் சொல்லெடுத்து சாதிப்பர் கல்வியால்
சொல்லெடுத்தோர் சொற்படி நடப்பின் - அமர்ந்தவிடத்து
தொல் உலகாள்வர் சர்வக்ஞ.

740. பழுத்த இரும்புகள் அழுத்த இணையும்
செழித்த அவையில் பேசமறப்பின் - இரும்பும்
பழுத்து குளிர்ந்தற்றாம் சர்வக்ஞ.

741. சொல்லே முத்துமாணிக்கமாம் சொல்லே எளிமையுமாம்
சொல்லிய வண்ணம் ஒழுகின் - கைலாயமும்
இல்லமாம் ஒருவருக்கு சர்வக்ஞ.

742. சொல்லினால் வருவதே ஆக்கமும் கேடும்
சொல்வன்மையே ஒருவருக்கு செல்வ மாதலின்
சொல்லே மாணிக்கமாம் சர்வக்ஞ.

743. சொல்லில் வல்லார் தோற்பதும் நன்றாம்
சொல்லுக்குச் சொல்லாடின் கொல்லும் நிலையாம்
சொல்லில்விதி வந்தமரும்காண் சர்வக்ஞ.

உரு. நகைப்பு

744. கழுதை கத்துமிடத்தில் கணிகை பாடுமிடத்தில்
குழுமிய சுவைஞரிடம் கலகலவென நகைப்போர்
பழுதுடை புற்றுக்குநேர் சர்வக்ஞ.

உசா. உழவு

745. *பல்கோடிக் கல்வியினும் உழுகல்வியே தலையாம்
உலகுருண்டை உழவால் சுழலும் - அஃதின்றேல்
உலகாட்டமே தலைகீழாம் சர்வக்ஞ.

---

742. ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு - குறள்

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை - குறள்

746. உழுங்கால் உழாமற் விதைக்குங்கால் விதைக்காமற்
பொழுது சாயுங்கால் வயல்செல்வோர் - தணலாக்குவர்
அழுத்தும் குருதியைத்தாமே சர்வக்ஞ.

747. அகத்துக்குப் பூனையழகு கைப்பிடி கல்லுக்கழகு
அகமகிழ்ந்தும் புறமகிழ்விக்கும் மொழியழகு - உழவோர்
இகத்துக்கு அழகாம் சர்வக்ஞ.

748. எருதுகள் ஏருழா ஆநிரைகள் கறவா
அரும்புதல்வன் குறும்பன் என்றிருப்ப - கழனியில்
சருகே நிலைக்கும் சர்வக்ஞ.

749. படைகளற்ற அரசு தீயில்லா வேள்வி
குடைவண்டியற்ற உழவு இம்மூன்றும் - தலையற்ற
சடலத்தின் நிலையாம் சர்வக்ஞ.

உஎ. பசுக்கன்று

750. பசுக்கன்றும் எருதுகளற்ற நாடும் நரகாம்
பசுக்கன்று களிருப்பின் வளமாம் - உலகில்
பசுக்கன்றே தெய்வமாம் சர்வக்ஞ.

உஅ. கோடை

751. காலங்களில் மழைக்காலமாம் மலர்களில் மல்லிகையாம்
கோலங்களில் கோடையும் சிறப்புடைத்தாம் காண்
ஆலவாய் அழகனானை சர்வக்ஞ.

752. அன்புப்பண்பின் மனையாள் படுக்கையறை மெத்தை
தென்றலொடு பால்நிலவுசேர் இளவேனில் - யாண்டும்
என்னோ டுறையட்டும் சர்வக்ஞ.

உகூ. வறுமை

753. தொங்கிய தனமும்கேடு உள்ளூர்ப் பகையும்கேடு
தாங்கியே நடக்குமெருது உழவுக்குக்கேடு - வறியோருக்கு
வீங்கிய(கூன்) முதுகும்கேடு சர்வக்ஞ.

754. கூதலில் பனியும்கேடு புரையோடிய புண்ணும்கேடு
பாதகர் நட்பும்கேடு கல்லென அமர்தல்
பாதகமாம் வறியோர்க்கு சர்வக்ஞ.

755. சிதைந்த பானைகேடு வறியோரின் சினமும்கேடு
சிதைந்தகூரை ஒழுகல்கேடு கள்ளுண்போர் நட்பும்
கதையும் நாளும்கேடு சர்வக்ஞ.

756. புளியால் பாலும்கெடும் பரத்தையால் மேன்மைகெடும்
மிளகால் வாழைக்கெடுமன்ன - வறியோர் கெடுவர்
அளப்பரிய சினத்தால் சர்வக்ஞ.

757. இருக்குங்கொல்லோ குளங்கிணறு நிரம்பிய நீரும்?
திருமகளை எஞ்ஞான்றும் நம்பற்க - வறுமையது
திரும்பியே வரும் சர்வக்ஞ.

758. ஆட்டுக்கு மாளிகையேன் கிறுக்கனுக்கு கைவளையுமேன்
பாட்டனுக்குக் கரும்புமேன்? பரிதவிக்கும் ஏழைக்கு
நாட்டின் பேச்சுமேன் சர்வக்ஞ.

759. ஆடியே அழுவதும்கேடு கூடியே களைவதும்கேடு
நாடிவரும் பண்பிலார் உறவும்கேடு - சொல்
ஆடுவதும்கேடாம் வறியோர் சர்வக்ஞ.

760. கள்வன் பெண்ணுக்குக்கேடு முள்ளும் காலுக்குக்கேடு
கொள்ளியொளியில் உண்பதும் கேடு - ஏழையர்
கள்ளமுரைப்பதும் கேடாம் சர்வக்ஞ.

761. ஏழைக்குக் கடனும்கேடு சூதில் தோற்பதும்கேடு
தாழைமழலையர் கண்பின் இருப்பதும்கேடு - அரசவையும்
ஏழைக்குக் கேடாம் சர்வக்ஞ.

762. கட்டைக்கரியும் கடும்ஏழையும் இருக்குமிடம் துன்பமாம்
கட்டைக்கரியும் ஒருகால் பயனாம் - ஏழை
கட்டைக்கரியினும் கீழாம் சர்வக்ஞ.

763. தெருநடக்கும் வறியோருடன் உடன்வாரார் யாரும்
உருக்கொண்டே வறுமையெனும் புலியும் இருக்க
அருகிலுரை யாடவும்வாரார் சர்வக்ஞ.

764. நடுவீதிநட்ட நற்பயிரைக் கண்டோரும் - கையில்
எடுத்ததைப் போலாம் - வறியோனின் கிழத்தி
வடித்தெடுத்த பதுமையெனில் சர்வக்ஞ.

௩௦. பணிப்பெண்

765. முத்து மாணிக்கமேன்? அலை கூந்தலுமேன்?
சத்தான மேனிக்கு பட்டுடையுமேன் வார்கூந்தல்
இத்தரையிலேன் பணிப்பெண்ணுக்கு சர்வக்ஞ.

766. முத்து மூக்குத்தியும் வண்ணக் கற்களுமேன்?
நித்தம் பணிப்பெண்டிர்க்கு தகுதிகளேன் - மடியேன்
கத்தும் கழுதைக்காலுக்கு சர்வக்ஞ.

767. உருள்கற்கள் காலுக்குக்கேடு கொள்ளு கழுதைக்குக்கேடு
இருள் பயணத்துக்குக்கேடு பணிப் பெண்டிர்க்கு
சுருள்முடியும் கேடாம் சர்வக்ஞ.

௩௧. கடன்காரர்

768. பணம்நூறு பெறும்வரை பணிவோடு இருப்பர்
பணம்நூறில் பாதி கேட்பினும் - கடனாளி
மண்வாரித் தூற்றுவர் சர்வக்ஞ.

769. கடன்பெறுவது பால்சோறு உண்டது போலாம்
கடன் கொடுத்தோர்கேட்பின் புட்டத்தில் தேள்
கொட்டியது போலாம் சர்வக்ஞ.

770. *தாடியற்றவன் முகமும் பணமற்ற பையும்
நாடியே வட்டிக்குப் பணம்தருவோன் வாழ்வும்
பொடிக்காசும் பெறாது சர்வக்ஞ.

---

* கன்னட மூலத்தில் 'பொடிக்காசு' என்பது 'அட்ட' என உள்ளது. இதற்கு பொருள் கூறும் உத்தங்கி சென்னப்ப அவர்கள் இரண்டணா நாலுகாசு என்று கூறுகிறார். இன்றைய பதினெட்டுக் காசுகளுக்கு ஒப்பானது.

771. உண்டிக்குப்பாலும் கழுத்துக்கு மாலையும் - கடன்
கண்டிராத வீடும் நன்றொப்ப - மழலையர்
சண்டித்தனம் பொலிவாம் சர்வக்ஞ.

772. வட்டிக்குத் தருவோர் பாம்பெனப் பருந்தென
எட்டியெட்டியே வந்து கடிக்கும் நாயென
கட்டெறும்பென ஒப்பர் சர்வக்ஞ.

773. பால்பழம் உண்டன்ன கடன் பெறுங்கால்
கால் என்பு உடைந்தன்ன - கொடுத்தோன்
ஆலென கேட்குங்கால் சர்வக்ஞ.

774. நாளும் கடன்பெற்று உண்பான் அறுசுவை
நாளையே கடன்கொடுத்தோர் கேட்பின் - கோயில்
காளையென தூணெனநிற்பான் சர்வக்ஞ.

775. கரும்புச்சக்கை மூழ்கலாம் பாறையும் மிதக்கலாம்
கருங்கட்டையும் துளிர்க்கலாம் - கடனாளி
தருவதறியான் வாங்கியதை சர்வக்ஞ.

776. எந்தநிலை வந்தபோதும் கொள்ளற்ககடன் உள்ளூரில்
தந்தைப் பெறவே - கடன் கொடுத்தாருணை
பந்தாடுவர் குத்தியுதைத்தே சர்வக்ஞ.

777. நம்பிக்கை உள்ளவரையாம் கடன் பெறுவதுவும்
நம்பிக்கை அற்றுப்போயின் - மடிந்தது போலாம்
வெம்மையுள் வெந்து சர்வக்ஞ.

778. பெற்றகடன் கொடுக்காதவனை எமனும் விட்டகலான்
உற்ற திருமகளும் பிரிவாள் - ஏவலனாய்
மற்றொரு பிறப்பபெடுப்பார் சர்வக்ஞ.

779. இல்லாத காலத்தில் பொல்லாதவரே அனைவருக்கும்
அல்லாத குணமுடையோராம் மன்னருக்கும் - கடனிவர்பெற
கல்லிதயம் வேண்டும் சர்வக்ஞ.

780. கடன்நூறு பெறினும் வேற்றூரில் பெற்றிடுக
கடன்தந்தோர் மூவிரண்டு ஆண்டுக்கொரு நாள்வந்து
கடன்கேட் டகல்வர் சர்வக்ஞ.

௩௨. பொற்கொல்லன்

781. பிறரன்ன குடியிருப்போர் எனவேண்டா பொற்கொல்லனை
அரமன்ன பற்களுடை பூனையெலி பிடிப்பதுபோல்
அரக்கரே ஆவரவர் சர்வக்ஞ.

782. சிறுவன் என்றெண்ணற்க பொற்கொல்லன் பிள்ளையை
சிறுவடிவின் கொசுவும் கடிப்பதன்ன - கற்பான்களவு
குறடுதனைக் கைப்பிடிக்க சர்வக்ஞ.

783. புடமெனக் காட்டியே சாம்பலுள் மறைப்பான்
படர்தீயில் சுட்டுச் சேர்ப்பான்பிற - தங்கம்
தீட்டுகையில் திருடுவான் சர்வக்ஞ.

௩௩. தச்சன்

784. வட்டிக்கு வட்டிக்கேடு குறுவாசலும் கேடுவடி
கட்டிய மூடனொடு நட்பும்கேடு - தச்சனின்
இடக்கைப் பணியும்கேடு சர்வக்ஞ.

௩௪. தையற்காரன்

785. எள்ளறிவான் வாணிகன் பொய்யறிவான் தையற்காரன்
கள்ளமறிவான் காவலன் - வணிகன் அறிவான்
உள்ள தனைத்தும் சர்வக்ஞ.

௩௫. வணிகன்

786. கிணற்றுக்கு நீராசை வேசிக்கு உடலாசை
உணவிலா ஏழைக்கு வயிற்றாசை - பட்டணத்தாசை
வணிகனுக்கு நாளும் சர்வக்ஞ.

787. ஏரிக்கு நீர்நன்று காளைக்குக் கொம்புநன்று
ஊருக்குக் குயவர்நன்று - வணிகருக்கு நம்பிக்கையே
பெருமையாம் காண் சர்வக்ஞ.

---

783. தீட்டுகையில் = அராவும்பேது

788. பெரிதென எண்ணி நம்பற்க வணிகன்சொல்
இரம்பப் பல்லிடைப்பட்ட மரமும் - தன்னையே
அரிந்து கொண்டன்ன சர்வக்ஞ.

ருசா. பாதகர்

789. கள்ளனும் பொய்யனும் பல்சாதியிலு முண்டு
கள்ளன் ஒருகால் பயனுடையன் - பஞ்சமா பாதகர்
கள்வரினும் கேடுபயப்பர் சர்வக்ஞ.

790. *பஞ்சமாப் பாதகர் வஞ்சனைக்குத் தலைவராம்
கிஞ்சித்தும் நம்பியே கெடற்க - மூட்டைவாழ்
பஞ்சணைக் கொப்பர் சர்வக்ஞ.

ருஎ. மாயக்காரன்

791. கடனாளி தட்டான் நெய்வோனை நம்பலாம்
உடனிருக்கும் மாயக் காரன்பால் கருணையறம்
உடனிருக்காது எக்காலும் சர்வக்ஞ.

ருஅ. அடம் பிடிப்போர்

792. மடாதிபதி வாட்டமறியார் வன்கண்ணர் அருளறியார்
ப(ட்)டமது நிழலறியா - அடம்பிடிப்போர் நாளும்க
படமுடைய வராம் சர்வக்ஞ.

ருகூ. அச்சமுடையோர்

793. தன்மனையாளுக் கஞ்சும் கணவனை என்னென்ப
பண்ணைக் கோழியுண்ணும் நரியும் - நாய்க்கஞ்சி
பன்னூறுகல் ஓடியதன்ன சர்வக்ஞ.

சு ௦. கண்ணாடி

794. கண்கவர்மட்குடம் பாத்திரமாகாது தட்டான் உழவனாகான்
கண்ணாடி கனிப்பொருளாகா - கஞ்சியும் அறுசுவையின்
உண்ணும்உணவாகா எந்நாளும் சர்வக்ஞ.

* மூட்டை - மூட்டைப் பூச்சி

சு க. வாணிகன்

795. எண்ணெயாட்டுவோன் தொழிலும் எருமையின் உழவும்
என்புருக்கு நோயும் - சமரோடு வறட்கடமும்
துன்பமாம் உயிருக்கு சர்வக்ஞ.

796. இறைவனைக் காணான் வாணியனென்ப துண்மையே
இறைவனும் ஒருகால் தரைவரின் - செக்காட்ட
இறைவனையே பணிப்பான் சர்வக்ஞ.

சு உ. நெசவு

797. வேடனுக்குத் தூய்மையில்லை பொக்கைக்குச் சுவையில்லை
கூடாதவருக்குப் பிள்ளையில்லை - நெய்வோன் உலகில்
மூடனு மல்லன் சர்வக்ஞ.

798. அழகு ஏழைக்குவலிமை அழகு வண்ணானுக்(கு) ஊற்று
அழகு மடுவின்வயல் உழவுக்கு - நெய்வோனுக்கு
அழகு சுழலும்தறியாம் சர்வக்ஞ.

சு ௩. வேடன்

799. வேட்டைக்காரனுக்கு வனஎண்ணம் ஆட்டுக்கு
மழையெண்ணம்
தோட்டத்தில் கண்களுக் கெண்ணம் - முடவனுக்கு
ஆட்டத்தில் எண்ணமாம் சர்வக்ஞ.

800. ஆடிமருகுதல் வேண்டற்க வேடனுறவு வேண்டற்க
கூடிவிலகுதல் வேண்டற்க வேடன் பேசுகின்ற
கடிசொல்லும் வேண்டற்க சர்வக்ஞ.

801. வேடனொரு உத்தமனென அவையில் சொல்லற்க
வேடன் வேண்டியதுமறுப்பின் - அன்றிரவே உடைப்பான்
கடப்பாறையால் சுவர் சர்வக்ஞ.

802. கயவர் கண்ணியரென எவ்விடத்து மிருப்பர்
கயவரின் கயமையை சொல்லற்க - வேடர்
கயவரே யாண்டிருப்பினும் சர்வக்ஞ.

803. வளர்த்தவனையும் இடர் அகற்றியவனையும் உண்பான்
இளக்காரமாய் உமிழின் கொன்றுண்பான் - வேடனோடு
உ(ள்)ளநட்பே வேண்டற்க சர்வக்ஞ.

804. இறுக்கமற்ற வில்லும் வேடனுக்காற்றிய தொண்டும்
ஏறுகரையற்ற தேக்கமும் - பயக்கும் கேடு
இறுதியில் காண் சர்வக்ஞ.

௬௬. வன்கண்ணர்

805. ஆழ்வுதனில் கூட்டமாய்வளர்த்த கோழிப் பன்றிகளை
பாழ்வயிற்றுக்கு கொன்றுண்பான் தினமொன்று - பாவிகள்
வாழ்வே நரகாம் சர்வக்ஞ.

௬௫. கழைக் கூத்தாடி

806. வேசிக்குப் பண்பில்லை கழுதைக்குக் கொம்பில்லை
காசினியில் நிலையில்லை கழைக்கூத்தாடிக்கு - பருத்திக்காட்டில்
வாசமில்லை கிளிக்கும் சர்வக்ஞ.

௬௬. வரித்தண்டுவோர்

807. வரித் தண்டுநர் செருக்கினை என்னென்ப
வரித்தண்ட பொய்யு முரைப்பர் - முடிவில்
முறிப்பர் இடுப்பையே சர்வக்ஞ.

808. எரிதழலுக்கு இரக்கமில்லை மூடருக்கு அறிவில்லை
வரிச் சங்கொலிக்கு இணையில்லை - வானுலகில்
வரியே இல்லை சர்வக்ஞ.

௬எ. இழிந்தோர்

809. பெண்ணில்லை சீதையினும், ஆளில்லை சேவகனினும்,
வீண்சொல்லில் தோற்போருக்கு இணையில்லை - இழிந்தோனுக்கு
மேனிலை இல்லையாம் சர்வக்ஞ.

---

805. ஆழ்வு = கிடங்கு

சு அ. புறங்கூறல்

810. வண்டி கடையாணிக்குச்சுமை வேசி முதியோனுக்குச்சுமை
குண்டுக் கல்லும் படகுக்குச்சுமை-புறங்கூறுவோர்
மண்ணுக்குச் சுமையாம் சர்வக்ஞ.

811. வேசிக்கு மொழியழகு நாணமற்றவனுக்கு நடையழகு
கூசாமற் கோளுரைப்போர் மன்னருக்கழகு - கணிகைக்கு
மாசுடைக்காதலனே அழகாம் சர்வக்ஞ.

812. பொல்லாவேசி இருப்பதும்கேடு இடையன் நட்பும்கேடு
நல்லுணவு துறப்பதும்கேடு - புறங்கூறுவோன் மூச்சே
நல்லோர்க்குக் கேடுடைத்தாம் சர்வக்ஞ.

813. கழுதைக்குக் கொம்பில்லை, சேவகிக்குப் பண்பில்லை,
செழிப்புடை நெல்லுடையோருக்கு அச்சமில்லை -
புறங்கூறுவோருள்
அழுக்காறு அற்றவருமில் சர்வக்ஞ.

சுகூ. பரத்தையின் தாய்

814. கண்சிவந்தஅனுமனால் இலங்கையும் அருச்சுனனால்
காண்டவவனமும்முக்
கண்ணனால் திரிபுரமும் எரிந்தன்ன - அழியும்
மண்ணும் வேசியின்தாயால் சர்வக்ஞ.

ருO. மாந்தர் பல்வகை

815. சொல்லாமற் செய்வோர் பெரியர் - செய்திடுவர்
சொல்லியபின் இடைநிலையர் - செய்யாதார் கடையரே
சொல்லுக்குச் சொல்லாடியும் சர்வக்ஞ.

816. அறியேன் அரசுப்பணிகள் என்பதும் நன்றேகாண்
அறிவேனென வறியவர் முன்வரின் - அதிகாரிக்கு
கறிவேப்பிலை ஆவர் சர்வக்ஞ.

817. உப்பில்லாதுணவு வேண்டற்க வறியோருக்கு
மூப்புவேண்டற்க
தப்பில்சிக்கி உழல்வதும் வேண்டற்க - அதுபோல்
அப்பழுக்குடை வேசிநட்பும் சர்வக்ஞ.

818. அறிவரை அறிவிலியென கீழோர் பழித்தென்?
வெறிநாயும் கரிநோக்கிக் குரைப்பின் - களிறும்
பெறுமோ துன்பம் சர்வக்ஞ.

819. பல்வகைப் பயனிருப்ப மகிழ்வர் மனைவிமக்கள்
பல்வகைப் பயன்மறைந்து துயர்வரின் - தலைவனை
தொல்காட்டுக்கு விரட்டுவர் சர்வக்ஞ.

820. கேடுடையோர் மனமும்கோணல் நாயின் வாலும்கோணல்
காடுபாயும் நதியும் கோணல் - கருமியின்
பாடும் கோணல் சர்வக்ஞ.

821. எத்திக்கும் அலைந்தெடுத்த மாணிக்கத்தைக் - கல்லென
இத்தரையில் எறிவர் - பித்தர் நட்பு
உத்தமவாழ்வுக்கு கேடாம் சர்வக்ஞ.

822. கட்டுடல் கொண்டவருக்கு பாதையில் பயமுமேன்?
செட்டியாரும் பிறருக்கஞ்சிப் பேசுவனோ? சான்றோருக்கு
கெட்ட தும்இல் சர்வக்ஞ.

823. இறைவனுக்கு அந்தமில்லை கங்கைக்கு மாசில்லை
குறைக்கண் உடையோருக்கு ஒளியில்லை - இரப்போர்க்கு
நிறை நண்பரிலர் சர்வக்ஞ.

824. *ஆசைப் படப்பட அண்டிவரு மிடர்கள்
ஆசைமிக மதியும்கெடும் மனையும்கெடும் - பெண்ணின்
ஆசையால் நாளும் சர்வக்ஞ.

825. அத்தை செய்பிழை பிறரறியா தடங்கும்
அத்தப்பை பணியாள் செய்யின் - பரவும்நொடியில்
எத்திக்கும் கேளாய் சர்வக்ஞ.

---

824. *ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்
ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தமாமே.

826. துயர்வரின் உடலும் காணும் சுடுகாடு
துயரறுத் துழைப்பின் - உணவுமுடையும் எய்துபவ
அயர்வின்றி மண்ணில் சர்வக்ஞ.

827. நாகப்பார்வை தன்மீ திருக்க தவளையின்
தாகமோ பறக்குமீ மீதாம் - வாழ்வின்
சோகமே இஃதாம் சர்வக்ஞ.

828. சான்றோருக் கறிவும் சித்தருக்கு யோகமும்
கான்பற்றிய கனலுக்கு வெப்பமும் - முள்கூர்மையும்
தான் வைத்தவர்யார் சர்வக்ஞ.

829. அன்பற்றவள் வீடும் அகழியற்ற கோட்டையும்
ஆன்மஒழுக்கமற்ற சீரென்ப மூன்றும் - மரணத்தின்
துன்பம் போன்றதாம் சர்வக்ஞ.

830. நடுக்காட்டின் மழையும் பொல்லார் நட்பும்
படுவன் இடர் தலைவலியென இம்மூன்றும்
விடுப்படுவதே நன்றாம் சர்வக்ஞ.

831. அன்பில்லா மன்னன் அச்சாணியற்ற வண்டி,
இன்சொல்லாடும் கீழோர் என - இம்மூன்றும்
என்றும் நம்பற்க சர்வக்ஞ.

832. நட்பில்லா கூட்டம் போளியில்லாப் பண்டிகை
ஆட்படை இல்லாதான் அதிகாரம் - சிறைக்
கோட்டம் புகுந்தன்ன சர்வக்ஞ.

833. கூழற்ற வாழ்வும் வேளைக்குதவா பணியாளும்
பாழ்பட்ட அரசாட்சி என - இம்மூன்றும்
பாழாம் காண் சர்வக்ஞ.

834. அடித்துப் பழுத்தப்பழமும் சுமந்துபெற்ற பணமும்
மடிந்தவருக்கு அழுதுபெற்றக் கண்நோயும்என - மூன்றும்
கடிதில் வீணாம் சர்வக்ஞ.

835. மக்களற்ற மனையும் உழவரற்ற ஊரும்
தக்கபடி கணக்கெழுதா வணிகமும் - இம்மூன்றும்
எக்காலும் துன்பமாம் சர்வக்ஞ.

836. பூனை புலியாகா உழவு கல்வியாகா
இணை மரமிரண்டு வனமாகா - இம்மூன்றும்
எண்ணில் கொள்ளலாகா சர்வக்ஞ.

837. கழுதைமீ தமர்தல்கேடு, கணிகையின் நட்பும்கேடு,
கழனியில் வெள்ளம் புகுவது என்பதுவோ
அழிவுக்கு ஒப்பாம் சர்வக்ஞ.

838. உப்பில்லா உணவு, கண்ணுக்கொவ்வாக் கன்னி,
குப்பையின் நீர் நுனிக்கரும்பென நான்கும்
சப்பையே காண் சர்வக்ஞ.

839. அடுப்பிலிட்ட பால், அணங்கின் அன்பு,
கடுமைமிகு போட்டி, காட்டுப்பாதையென நான்கும்
நடுவில்விட்டுவிலகின் கிடைக்கா சர்வக்ஞ.

840. ஓட்டைச் சட்டியும் வெட்டிப் பேச்சும்
அட்டைப் புழுவும் புல்லின் கயிறும்
ஏட்டுக்கும் பயன்தரா சர்வக்ஞ.

841. பரியும்படகும் வண்டிப்பசுங் கொடியும் ஓடும்நீரும்
அரசனின் மனமென வேசியோடு ஏழும்
திருப்புவர் கைத்திரும்பும் சர்வக்ஞ.

842. புல்லோர்க்குத் தந்தகடன் அடுப்பின்மீ திட்டபால்
புல்லின்தீ பெண்ணின் அன்பு நான்கும்
நில்லாது காண் சர்வக்ஞ.

843. தீர்வையோன் பகையும் ஒழுக்கமில்லாள் நட்பும்
கூர்ஐயமும் நட்பும் நாயுருவிச்செடியென ஐந்தும்
யார்மீது படினும்விடாது சர்வக்ஞ.

844. முட்டாளுக்கு அறிவில்லை சான்றோர்க்குச் சினமில்லை
பட்டப்பகலும் அந்தகர்க்கில்லை - காட்டுச் சிம்மத்துக்கு
கெட்டபொறாமை இல்லை சர்வக்ஞ.

845. அப்பன் நட்டமரம் அழகுடைத்து என்பதனால்
தப்பில்லையென மகனும் அதிலேறி - சுருக்கை
அப்பிக் கொள்ளுவனோ சர்வக்ஞ.

846. வீரம் கருணை மானின் வேகம்
கூரறிவு பேரழகென தான் பெறுவரோ
போராடுங் கால் சர்வக்ஞ.

847. மருமகன் இரந்துண்ணும் வேசி தீபம்துடைப்போர்
திருடியுண்போர் நாய் அரசனின் ஆட்களெண்போர்
வறுமையைக் காணார் சர்வக்ஞ.

848. பன்றியினும் கடையர் வறியர் பரதேசி
குன்றிய உறவோர் சிறையின் தளையர்
என்று மடிந்தாலென் சர்வக்ஞ.

849. வருவார் அழைப்பின்றி, கற்பார் எழுத்தின்றி,
வருவார்போவார் வெறுங்காலில்-அழைத்தே இவரை
செருப்பால் அடிப்பாய் சர்வக்ஞ.

850. யானைக்குப் பல்லக்கேன்? ஞமலிக்குப் பொலிவுமேன்?
வாணியனுக்கு மடியுமேன்? புத்தியற்றப் பித்தனுக்கு
இன்பமுமேன் சொல் சர்வக்ஞ.

851. மலர்களற்ற வழிபாடு, பரிகளற்ற அரசு,
மலரனைய மனைவியற்ற இன்மொழிகள் - மூன்றும்
பல்சுவை அற்றதாம்காண் சர்வக்ஞ.

852. முதியெருதின் உழவும் மூத்தவேசியின் உடலுறவும்
அதிசுமையின் பாரமும் அச்சமுடைய பயணமும்
குத்திக்கொண்டன்ன தன்னையே சர்வக்ஞ.

853. *குழந்தைபெறா மலடியும் கக்கேபிக்கே காயும்
உழவனின் கல்வியும் ஆட்டுப்பால் வெண்ணெயும்
வழக்கில் (கணக்கில்) வாரா சர்வக்ஞ.

854. மொழியறியான் நட்பும் படுக்கையற்ற உறக்கமும்
கழிவகற்றும் சவுக்காரமில்லா குளியலும் - முடவன்
அழைத்ததுபோலாம் கைவீசியே சர்வக்ஞ.

855. கல்விதராத் தந்தை அறிவுதராக் குரு
அல்லலுற்ற மகனை நேசிக்கா அன்னை
நல்லுலகில் பகைவரே சர்வக்ஞ.

856. நட்டத்தின் தலையாரி நாட்டத்தின் வேசி
பட்டணத்தில் வரித்தண்டுவோன் - பழகியநாய் யாசகன்
விட்டகலா(ர்) யாண்டும் சர்வக்ஞ.

857. கரிக்கரிமாப் பகை கேட்டிற்குச் சிவன்பகை
பெரிதாய் வளர்ந்த குடும்பத் துயருக்கு
பேரின்பமே பகையாம் சர்வக்ஞ.

858. பெருங்காயமொடு தேனகில் முத்தரக்கு என்பன
பெருமிடரில் பிறப்பெடுப்பினும் - உலகில் அவை
பெரியோருக்கு நிகர் சர்வக்ஞ.

ருக. உயர்வு

859. தூய்மையில்லை நீரினும், உயர்வில்லை இலிங்கத்தினும்,
தூய உறவில்லை கண்களினும் - உலகில்
மெய்யடியார்க்கு நிகரிலர் சர்வக்ஞ.

860. உண்மைக்கு நிகரில்லை பொய்மையிங்கு
கால்கொண்டதில்லை
அன்னையினும் அன்புடையோர் இலர் - மாந்தர்
மண்ணில் நிலைத்ததில்லை சர்வக்ஞ.

* 'கக்கே பிக்கே' 853. 'கன்னடச் சொல்' மஞ்சள் நிறப் பூக்களையுடைய மரம்.

ருஉ. பட்டறிவு

861. ஏற்றத்தின் குதிரை பொதிசுமக்கும் எருது
வேற்றூர் தங்கிய மனையாள் மீதெல்லாம்
வேற்றவர் கைப்படுமாம் சர்வக்ஞ.

862. அமைந்த நிலம் ஆண்மையின் பிள்ளை
சமைந்த பெதும்பையைப் பிறர்பால் விடுவோர்
குமைந்த அறிவிலிகளாம் சர்வக்ஞ.

863. செல்வர் நிலையறியார் ஞாயிறு நிகரறியா
கல்வியாளர் மதமறியார் - புலவரும் உலகில்
பல்வகைப் பகைவரையறியார் சர்வக்ஞ.

864. காயம் உள்ளவரை நாயகன் என்றிடுவோம்
காயம் வீழ்ந்த இமைப்போதில் - இடுகாட்டு
*நாயகன் என்றிடுவோம் சர்வக்ஞ.

865. செத்தவருக் கழுதால் செத்தவரும் வருவரோ?
பத்தெட்டு ஆண்டுகளில் பின்னொரு நாள்வர
செத்தவர்பின் செல்வரே சர்வக்ஞ.

866. உணவின் ஆசைக்கு மதத்தைக் கைவிட்டோர்
பணத்தாசைக்கு மனைவி விற்றோருறவு வேண்டற்க
மண்ணுக்குப் போகையிலும் சர்வக்ஞ.

867. கண்டவரைத் தூற்றியும் வன்கையொடு நட்பாடியும்
புண்மொழிகள் பேசியும் வீண்சண்டை செய்வோரைக்
கண்டுநீ ஒதுங்கிடுவாய் சர்வக்ஞ.

868. ஆளுமையில் வல்லோர் ஆளுவர் அரசு
ஆளுமையில் வாழ்வ தறியார் முடிவில்
ஆளாமற் பாழாவர் சர்வக்ஞ.

---

864. * ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கி பிணமென்று பேரிட்டு
சூரையாம் காட்டிடை கொண்டுபோய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே (சித்தர் பாடல்....103)

869. இருவர்தம் பகையும் உள்ளிருக்கும் அறியாதுபிறர்
இருவருள் ஒருவர் மடியின் - முடிவில்
ஒருவருக் கின்பமாம் சர்வக்ஞ.

870. சொன்னதை மறைப்பதும்கேடு கூடிக் களைவதும்கேடு
பண்பிலா உறவினர் வருகையும்கேடு - பொய்யுரைப்பதும்
மண்ணில் கேடுடைத்தாம் சர்வக்ஞ.

871. பரத்தையின் நட்பும் வீரருள் பகையும்
இரவில் கொள்ளையும் மிகின் - ஊரில்
மாரியே காண் சர்வக்ஞ.

872. ஒருவரறியின் மனவசம் இருவரறியின் தனிவசம்
இருவர் இருவரிருவருக் குரைப்பின் - உலகெலாம்
அரும்பும் செய்தியாம் சர்வக்ஞ.

873. கவுண்டர் பகையும் செவிடரிடம் மர்மமும்
செவ்விய அறிவர்க்கு மூடனுமுரைத்தல் - பசிக்குத்
தவிடு தின்றதன்ன சர்வக்ஞ.

874. அனைத்து மறிதல் அறிவார் தொழில்
அனைத்து நற்பண்புள்ள சீலரை அறிதல்
அனைவருக்கும் எளிதாம் சர்வக்ஞ.

875. நல்லோரைக் கெடுக்க எண்ணும் மனத்துள்
பொல்லாப் போர்வெறியும் விரவின் - மண்ணும்
அல்லறபடும் அழிவால் சர்வக்ஞ.

876. தான்பெற்ற ஞானம் மானம் மரியாதை
தான்பெற்ற பெண்ணின்பம் என்ப துரைப்
பான்பிறரிடம் மூடனாம் சர்வக்ஞ.

877. சாவும்நோவும் கேடு, நாகவிடமும் கேடு,
நாவாய் பகைக்கேடு - மகவைக்
காவாததும் கேடாம் சர்வக்ஞ.

878. இல்லாள்கண் கடும் பகையும் கொள்ளற்க
இல்லத்து அகப்பையால் பிடரிமுறிப்பள் - கத்தியின்றியே
இல்லவள் திடமானவளே சர்வக்ஞ.

879. பிறரைப் போற்றுவோர் உயருடைய வரெனினும்
அறமடக்கம் உடையோர் இடத்து - திருமகளும்
திறனறிந்து தங்குவள் சர்வக்ஞ.

880. மக்களைப் புரக்குமறிவு குருவுக்கு இன்றேல்
மக்களும் இருப்பரோ மண்ணில் - அவர்
மக்களல்லர் நரிப்போலாவர் சர்வக்ஞ.

881. புகைக்கும்கனலில் நுழையாதிரு, செவிடரோடு பேசாதிரு,
பகைவரை நம்பிக் கெடாதிரு - பயணம்
போகாதிரு நள்ளிரவில் சர்வக்ஞ.

882. பிறன்மனைப் புகழாதிரு கீழோருடன் உறவாடாதிரு
பிறர் இச்சைக்குக் கீழ்ப்படியாதிரு - நாளுமுடல்
உறவில் ஒழுகாதிரு சர்வக்ஞ.

883. வீதிவரும் கரிகண்டு குரைக்கும் ஞமலி
வீதிவரும் கரியும் பிளிற்றின் - கரிக்கு
மீதியாம் இழுக்கு சர்வக்ஞ.

884. உடல் கெட்ட பெண்ணையும் முட்செடியையும்
உடல்கொட்டும் குளவிக் கூட்டையையும் - கைப்
படத்தொடுதல் வேண்டா சர்வக்ஞ.

885. தலைக்கு வருமுன் குனிதல் நன்று
தலைத் தாக்கிப் புண்ணும் கொண்டபின்
தலையின் பயனென் சர்வக்ஞ.

886. சந்தையில் கூடும் மாந்தர் அனைவரும்
அந்தியில் களைவது போலாம் - செல்வம்
சொந்தமென்றோர் வாழ்வும் சர்வக்ஞ.

887. கணக்கன் பகையும் கொள்ளற்க கொள்ளின்
கனமர உச்சியேறி நுனிக்கொம்பு வெட்டமண்
கண்டதன்ன உடலும் சர்வக்ஞ.

888. மனம் பேதலித்தக்கால் ஆழ்உறக்கம் ஒழிந்தக்கால்
மனைவி மக்கள் சினந்தக்கால் - மரணமுனை
அணைத்தது போலாம் சர்வக்ஞ.

889. செடியும் நிலைக்க மரம்சாயும் புயலில்
கொடிப் பல்லக்கில் வலம்வந்தோர் அழிய
அடிமட்ட மாந்தர்வாழ்வர் சர்வக்ஞ.

890. சந்தனம்நீறு தரிப்போர்க்கு உயர்வாழ்வே குறியாம்
நிந்தனை பிழையென விட்டொழிப்போர் - மண்ணில்
இந்திரரே காண் சர்வக்ஞ.

891. கருடன்வழி மந்திரமும் வெற்றிலையால் தந்திரமும்
திருட்டுச் சோதிடன்வழி எந்திரமுமென்ப - இம்மூன்றும்
பெரும் பொய்யாம் சர்வக்ஞ.

22. நாடு

க. கிழக்கு

892. வழிநெடுக கொடிய கருவேல முட்கள்
வழிவந்தவரோ அகன்ற வாயினர் என்பதனால்
கிழக்குத்திசை வேண்டற்க சர்வக்ஞ.

உ. வடக்கு

893. ஊர்தோறும் இடைவெளி நீர்நிலையோ பல்காதம்
சேர்ந்து ஒதுங்கிடவோ நிழலில்லை - வடதிசை
சேராதிரு யாண்டும் சர்வக்ஞ.

ங. தென்திசை

894. மனைதோறும் சங்கரன் வழிபாடு - விலையில்
இணையிலா சங்கோ கடல்தோறும் எனத்திகழ்
இணையிலா தென்னாடுபுகழ் சர்வக்ஞ.

895. சினமுடைத்து கீழ்ப்புலம் சித்தருடைத்து வடபுலம்
ஊனமிகு நோயுடைத்தாம் மேற்கும் - தென்புலமோ
இன்பத்தின் உறைவிடமாம் சர்வக்ஞ.

896. இழிமொழியோர் வடவர் இழிஉடையினர் மேற்றிசையினர்
இழிகுணச் சினமுடையோர் கீழ்த்திசையோர் -
பேருவகையில்
அழியாதோர் தென்னவராம் சர்வக்ஞ.

897. சுட்டுண்போர் வடவர் வெந்ததுண்போர் மேற்கோர்
வட்டிலிலுண்போர் கிழக்கினர் - உள்ளங் கையில்
உருட்டியுண்போர் தென்னவராம் சர்வக்ஞ.

ச. மேற்கு

898. சோள உணவு பருப்புத் துவையல்
விளாம் பழமொடு - கரு எருமைப்பாலின்
அளவிலா சுவையறிவாய் சர்வக்ஞ.

899. கவணைக் கல்லளவு வெண்ணெய் விரவியே
கவளமாம் தினையரிசிச் சோறு உண்பதின்
சுவையறிவாய் மேற்கில் சர்வக்ஞ.

900. கடலையொடு கோதுமையுளுந்து தினை செழிக்க
''சுடவேண்டும் நாட்டை'' - என்றுரைக்கும் வாய்க்கு
இடவேண்டும் மண்ணும் சர்வக்ஞ.

901. இன்சுவை மாவைப்பிசைந்து அளவிலா எருமைப்பாலை
இன்முகமொடு கடைந்தெடுக்கும் மேற்றிசை மங்கையின்
வனப்பினைப் பாராய் சர்வக்ஞ.

ரு. மலைநாடு

902. காடெலாம் காய்கள் நாடெலாம் நெடுந்தருக்கள்
ஆடும் சொல்லெலாம் பொய்யுரைகள் - மலைநாட்டுப்
பாடு வேண்டற்க சர்வக்ஞ.

903. பாதிப்பின் குடல்கள் குளிர்ச்சியின் பொருட்கள்
ஆதிப்பாவத்தால் இரந்துண்போர் வாழ்மலை நாட்டுக்கு
சாதிப்பதற்கோ வருகின்றனை சர்வக்ஞ.

904. இஞ்சியோடு மஞ்சளும் கரும்பொடு வெற்றிலையும்
பஞ்சும் பலாவும் விளை குறிஞ்சியை
கொஞ்சும் வனப்பென்போம் சர்வக்ஞ.

905. சகதிநீருண்டு நெருப்புண்டு கனகனப்பில் வீடுண்டு
சுகம்தரு மனைவி உண்டு - மலைநாட்டைப்
புகழ்ந் தேத்து சர்வக்ஞ.

906. செங்கரும்பும் கிழங்குமுண்டு அங்குமிங்கும் சுனையுண்டு
செந்நெல்லின் சோறுண்டு நிழலுண்டு குளம்குட்டையுண்டு
எங்கெங்கும் காண் சர்வக்ஞ.

சு. கன்னடம்

907. தன்னழகைத் தானே காணுமோ உருக்காட்டியும்?
தன்பெருமை அறியாக் கன்னடமும் கண்ணாடியும்
ஒன்றெனக் காண் சர்வக்ஞ.

907. * உருக்காட்டி = கண்ணாடி

23. பெண்ணின் பிரிவுகள்

க. திசைகளுக்குரியோர்

908. அங்கயற்கன்னியாம் அசுவினிமேற்கிலும் சித்தினி
வடக்கிலும்
சங்கிணிப் பெண்டிர் கிழக்கிலும் - பத்மினியர்
அங்கு தெற்கில் வாழ்வர் சர்வக்ஞ.

909. மேற்கது காமவெறியர்க்கு வடக்கது கோமாளிக்கு
கிழக்குப் பண்புடை மாந்தர்க்கு - தெற்கு
மேன்மை உடையோர்க்காம் சர்வக்ஞ.

உ. ஆண்கள் பார்வை

910. காமுகர்க்கு சிறுநோக்கு பண்புடையோருக்கு நயநோக்கு
கோமுகனுக்கு அரைநோக்கு - பெரு நோக்காம்
ஆகுலன் பார்வையில் சர்வக்ஞ.

ங. பெண்களின் தன்மைகள்

911. காமினியின் ஆடுசதையும் சித்தினியின் விரிபாதமும்
சங்கினியின் பெருவுடலும் - பத்மினிப் பெண்ணின்
தலையும் பாராய் சர்வக்ஞ.

912. காதலில் காமினியும் கர்வத்தில் சித்தினியும்
தலைசாய்ந்து நடப்பதில் சங்கினியிருக்க - பத்மினியோ
எளிமையினள் காண் சர்வக்ஞ.

913. நால்விரல் அசுவினி மூவிரல் சித்தினி
நால்பாதி சங்கிணி விரலிடைவெளியாம் முலையிடையே
பால்நிறப் பத்மினிக்கே சர்வக்ஞ.

914. வட்டப் புட்டமுடையாள் வேம்பின் மணமுடையாள்
எட்டியதனமுடையாள் காமம் மிக்குடையாள் - சித்தினி
வட்டமிட நாட்டமுடையாள் சர்வக்ஞ.

---

913. கோமுகன்-கோமாளி

சூ. பெண்களுக்கேற்ற ஆடவர்

915. ஆலம்போல் இடுப்பு ஆனையன்ன உடம்பு
உலைபோல் பெருமூச்சு கேள்வி அறியாதவனே
பல்சுவையின் அசுவினிக்குநட்பாம் சர்வக்ஞ.

916. ஒட்டிய வயிறு பூனைக்கண் முகம்
கடுஞ்சினமும் பயமும் மிக்குடை ஆடவனே
நட்பாம் சித்தினிக்கு சர்வக்ஞ.

917. வளமையின் உடல் இளமையின் ஊக்கம்
களவில் திளைத்த நடுவயதின் நாயகனே
இளமையின் சங்கிணிக்கீடாம் சர்வக்ஞ.

918. மதமுடைக் கரிபோலும் காமம் கொண்டோன்
விதம்பல பேசுவதில் வல்லோன் - பத்மினியெனும்
சாதிக் குரியோன் சர்வக்ஞ.

ரு. வசியம்

919. பற்பலச் சுவைகளின் வகையறிந்து - நற்சுவையின்
சிறப்பை நாடும் நாயகனை - நொடியில்
அறிந்துவிரும்புவள் அசுவினியே சர்வக்ஞ.

920. நோக்கும் விழிகளில் எல்லையிலா நோய்ப்போக்கும்
தாக்கும் கூடலில் முரடுமிருப்பின் - சங்கினியாள்
ஒக்க அணைப்பாள் சர்வக்ஞ.

921. சுருள் கூந்தல்கோதி நோயுற அணைத்து
பொருளுணர அதரம் கடிப்பின் - பத்மினியுமுடல்
உறவை விடுவளோ சர்வக்ஞ.

922. மொட்டவிழ் நயனமுடை சித்தினியின் மனமறிந்து
கட்டவிழ் காமத் தையவள் செவிமொழியின்
விட்டகலாள் இறுதிவரை சர்வக்ஞ.

24. பெண்ணைப் போற்றுதல்

க. பெண்ணால் ஆடவர்

923. ஒல்லிடையாள் நல்லாள் எனும்நா கிழெனை
ஒல்லும் வகை சொல்லும் சமணமுனிவரும்
நல்லுலகம் வந்ததெவன் சர்வக்ஞ.

924. பல்லக்கில் ஏறியோர் வந்தது எவ்விடம்?
நல்லோராம் மேன்மைப் பெரியோரும் வந்ததெவ்விடம்?
எல்லாரும் பெண்ணிடமாம் சர்வக்ஞ.

உ. பெண்மனம் அறிய இயலாது

925. மடந்தை மனம், மாசிலா சுனைநீர்,
நடனமிடும் குதிரையென மூன்றின் தன்மை
உடனுரைப்பார் யார் சர்வக்ஞ.

926. கார்மேக முழக்கம், கடலிசை, பெண்மனம்,
கூர்சூல முக்கண்ணன் பெருமை என்ப
யார் காண்பர்சொல் சர்வக்ஞ.

ங. பெண்களை விரும்பாதாரிலர்

927. தவத்தோன் சித்தன் யோகிமுனிவர் என்பாரும்
நவரசப் பெண்ணெனும் மாயைபடின் - பிறமாந்தர்
அவநிலை என்னாம் சர்வக்ஞ.

928. பூனை நோன்பறியா கணக்கு துன்பமறியா
பிணை சுகமறியாதாயினும் - பெண்ணெனும் தளையை
அணையாதார் யாருமிலர் சர்வக்ஞ.

929. கூரறிவினள் மிசைமொழியினள் சினமறுத்த முகத்தினள்
இரதிக் கலையினளைக் கண்டார் - மண்ணில்
பேரழகில் மயங்குவர் சர்வக்ஞ.

930. அழகு மிக்குடையோள் விம்மிய முலையுடையோள்
அழைப்பாள் பற்பல செயலால் - காமினியை
விழையா தாருளரோ சர்வக்ஞ.

931. தன்னார்வ உணர்ச்சி நவரச எழுச்சி
இன்மொழி வனப்புடைய பருவப் பெண்ணுக்கு
கனியாதார் யார் சர்வக்ஞ.

932. அறிவில் வல்லவள் (இரதி)யாட்டத்தில் நின்றவள்
முறிவிலா காமத்தவள் கனிமுகத்தவளைக் காணின்
புறந்தள்ளு வருண்டோ சர்வக்ஞ.

௪. மும்மூர்த்திகளும் பெண்ணுக்கடிமையே

933. உருத்திரனும் மங்கையொரு பாகன் ஆயினன்
இருப்போருள் மனைவி மனதை - வென்றவர்
யாருளார் மண்ணில் சர்வக்ஞ.

934. அரியின் நெஞ்சம்மிதித்து அரனின் தலைமீதேறி
பிரம்மனின் முகம் சிதைத்து உயர்ந்தவளாம்
அரிவையினும் விஞ்சியவர்யார் சர்வக்ஞ.

935. சிறுநீர் கழிப்பிடமென எண்ணற்க காமத்தை
திருமாலும் நான்முகனும் இந்திரனும் - ஆங்கு
உருகிப் பணிந்தனர்காண் சர்வக்ஞ.

936. மாயையாம் பெண்ணை வென்றோமென்பது வாய்ப்பேச்சாம்
மாயையினின்றே காயமெனும் மாயை வந்ததால்
மாயையை வெல்வதெவன் சர்வக்ஞ.

ரு. பெண்ணின் பெருமை

937. பழச்சோலை கண்டும் கண் காணார்
அழகிய அணங்கை ஏறெடுத்து நோக்கார்
ஆழ்கடல்சூழ் உலகிலுண்டோ சர்வக்ஞ.

938. பேதையில் எச்சிற் பண்டமெனக் காண்பாள்
போதையின் மங்கைப் பருவத்தில் - அப்பெண்ணே
போதைதரும் சுவைமதுவாம் சர்வக்ஞ.

939. கணைக்காம(ன்)ம் மறைந்தே குடியிருக்கும் வீடாம்
கன்னியவள் தொடையிரண்டு கூடுமிடம் தேன்கூடாம்
மண்ணும் உழலுமாங்கு சர்வக்ஞ.

940. வெண்தாடி நீள, புலித்தோலும் உடல்மூட,
உண்பதுவும் மறந்தே கல்மீதமர் துறவியும்
கண்மனம்நாடுவர் கன்னியை சர்வக்ஞ.

941. ஆடிக்கூடுவதில் உவந்து காமக்கணை தொடுக்குமுலகு
ஆடிய சிவனும் அரியும் பிரம்மனும்
தேடியடைந்தனர் போகம் சர்வக்ஞ.

942. யோனிவழி பிறப்பெடுத்தார் யோனியைப் பழிப்பதுமேன்?
யோனியே பிறப்பின் மூலமென்ப - தூய்மைபேணின்
யோனிதரும் மிக்காமம் சர்வக்ஞ.

943. சிறுநீரின் கிணற்றுள் கருமயிரும் வளரும்
சிறுநீரும் பிறமாசும் உள்ளிருக்கும் கிணற்றுக்கு
இறுகி அஞ்சுவாருண்டோ சர்வக்ஞ.

944. காமனுறை கன்னியின் அல்குலெனும் கடலில்
காமமுடை முக்கடவுளரும் மூழ்கியெழ - பிறரின்
காமதாபம் என்னாம் சர்வக்ஞ.

சா. நன்மனைவி கிடைப்பதும் இறைவனின் பேறு

945. மாசறு பொன்னடைதல் பாசமிகு பெண்ணடைதல்
நாசமிகு போரில் வெற்றியென்ப - இறைவனின்
நேசயருளே காண் சர்வக்ஞ.

946. கூலம் மணியாகத் தாழம் தோடெனப்புனைந்து
காலம் அறிந்தொழுகும் கன்னியின் கரம்பிடித்தல்
காலதேவன் அருளாம் சர்வக்ஞ.

947. சினமின்றி கள்ளமின்றி நேர்நின்ற பார்வையின்றி
மனவொழுக்க மங்கையும் மண்ணில் மனைவியாதல்எண்
குணத்தான் பேறாம் சர்வக்ஞ.

948. பிறஆடவரும் பெருமைமிகு தந்தையர் என்றெண்ணும்
அறமொடு திடமுடைப் பெண்ணை - கூவியழைக்கும்
சிறுமதியோரு முண்டோ சர்வக்ஞ.

949. ஆபத்துக்குப் பணமும் அரசனுக்குக் குணமும்நன்று
கோபம் களைதலும் நன்றன்ன-பெண்
தாபத்துக்குக் கூடுதல்நன்றாம் சர்வக்ஞ.

௭. பெண்ணில்லா வாழ்க்கை

950. வண்ணப்புனைவற்ற திருமணமும், சுண்ணமற்ற
வெற்றிலையும்,
பெண்ணற்ற வாழ்க்கையென்ப - கொட்டிய எண்ணெயாம்
மண்ணில் நாளும் சர்வக்ஞ.

அ. கணவனற்ற வாழ்க்கையும் தொல்லையாம்

951. ஆளனற்ற மனைவியும் முதலற்ற வணிகமும்
ஆள்வோரற்ற கணிகை வாழ்வும் - முதுநாயின்
மூலவாய்ப் போன்றதாம் சர்வக்ஞ.

952. அரசனற்ற நாடும் சுகமற்ற உறக்கமும்
புருசனற்ற வாழ்க்கை - சித்திரம் வரைந்தற்றாம்
நீரின்மேல் காண் சர்வக்ஞ.

கூ. மழலையர் இருப்பதே நல்மனையாம்

953. தயிரிலாவுணவும் சேறிலா வயலும் கருவில்
உயிர் சுமக்காதவள் வாழ்வும் - கோடை
வெய்யில் கண்டதொப்ப சர்வக்ஞ.

954. குழவியற்ற வீடும் பறவைகளற்ற காடும்
வழுவிய வாழ்வும் - கள்ளன் புகுந்த
பழம்வீடொப்ப காண் சர்வக்ஞ.

955. காசுபணமற்ற வாழ்வும் ஆசைமக்களற்ற மனையும்
பாசமற்ற புக்ககம் இம்மூன்றும் - உலகில்
மாசுமிகு துன்பமாம் சர்வக்ஞ.

956. நாடற்ற அரசன் நற்பொருளற்ற வணிகன்
பாடாற்றி மக்கள்பெறா பெண்வாழ்க்கையென்ப - சாம்பல்
உடல் கொண்டன்ன சர்வக்ஞ.

957. அறுசுவையற்ற உணவு பூப்பந்தலற்ற திருமணம்
குறுநடை பயிலும் மக்களற்ற மனை
குறையே காண் சர்வக்ஞ.

கο. நிறைபெண்டிரை ஐயம் கொள்ளற்க

958. நிறைகாக்கும் பெண்டிர்க்கு சிறை காப்புமேன்?
நிறைமனத்துள் தெளிவெனும் தூய்மையிருக்க - முக்காட்டுக்
கூறையு மேன் சர்வக்ஞ.

959. மனத்துள் குழப்பம்கேடு யோகிக்குப் பொருள்கேடு
மனமறிந்து பொய்யுரைக்கும் சேவகர்கேடு - நெருக்குதலும்
மனைவிக்குக் கேடாம் சர்வக்ஞ.

960. இல்லாளைக் குறை காண்போனும் மூடனாம்
பல்நோய் தருமீயும் பால்மீதமர - வடிகட்டியே
இல்லம் வைப்பரோ சர்வக்ஞ.

961. குடைவிரித்தார்க்கும் தலைமேல் பாரம் சுமந்தோர்க்கும்
அடைக்காற்று கேடாதற் போல் - நிறைமகளிரை
அடைத்தலும் கேடாம் சர்வக்ஞ.

கக. அன்பே வாழ்க்கை

962. மனமொப்பிய மனைவியைப் பண்போடு விளித்து
மனம்விரும்பி இல்லறம் ஆற்றின் - அமுதக்
கன்னல் சுவைத்தன்ன சர்வக்ஞ.

963. அடை தேனினும் தோட்டக் கரும்பினும்
மடையெனச் சுரக்கும் பாலினும் - நிறைபெண்டிர்தம்
இடைவிடா துணைநன்றாம் சர்வக்ஞ.

---

958. சிறைகாக்குங் காப்புவென் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை - குறள்

959. நெருக்குதல் - கட்டாயப்படுத்துதல்

கஉ. அன்பின்றேல் வாழ்வில்லை

964. கழுவிய பிணம் போலாம் - கோவேறு
கழுதைமுன் கதறியதும் போலாம் - விரும்பாதான்
குழுமிய வாழ்வும் சர்வக்ஞ.

965. பழுக்கா மரம்நாடிய புள்ளும் - கானகத்தில்
விழுந்து இறந்ததொப்ப - குணநலமற்ற பெண்ணுக்கு
அழுதேங்குவோன் மூடனாம் சர்வக்ஞ.

966. இறந்த பிணவாய் ஊறும் நீர்போலாம்
இறந்த பிணமுண்ணும் நாயின் நிலைபோலாம்
அறமன்பு இல்லாவாழ்வும் சர்வக்ஞ.

967. பூத்த மல்லிகை வனத்துள் கூந்தலற்றவள்
நித்தமும் திரிந்தது போலாம் - பலகற்றவன்முன்
வித்தகமாடுவோன் மூடனாம் சர்வக்ஞ.

968. விரும்பாப் பெண்ணுக்கு போராடுவோன் படுமூடனாம்
தூரத்துப் பிணத்துக்கு ஆர்த்தெழும்நரி - வாயூறி
மரித்தது போலாம் சர்வக்ஞ.

கஉ. விரும்பியது வெல்லத்தினும் இனிது

969. உழவுக் கிருமாடுகள் தேவைக்கொரு கறவைப்பசு
மழலையர் ஐவரொடு மனையறத்துக் கொருத்தியென
வாழ்வதின்பம் நாளும் சர்வக்ஞ.

970. பள்ளங்களே விளைநிலமாயின் குள்ள எருதிரண்டோடு
கள்ளமிலா உள்ளமுடையோள் மருமகளாயின் - அவ்வீடும்
அள்ளக்குறையா செல்வமுடைத்தாம் சர்வக்ஞ.

971. பெருமழையற்ற பயிரும் மோரற்ற உணவும்
பெருமையிலா கைம்பெண்டிர் உறவும் -
கழைக்கூத்தாடியின்
மெருகற்ற நட்புக்கீடாம் சர்வக்ஞ.

972. மிததட்ப வெப்பமுடைவீடும் செலவுக்குப் பணமும்
இதமறிந் தொழுகும் மனையாளுமிருப்பின் - தீயிடுவாய்
உதவா வானுலகுக்கு சர்வக்ஞ.

26. இருண்ட வீடு

க. கேடு பயப்பன

973. பிறர்சொல் கேளாள் தீயதும் கற்பாள்
அறம்பிறழ் வேசியொப்ப வாழ் இல்லாளினுமுயிர்
பறிக்கும் குளமேநன்றுடைத்து சர்வக்ஞ.

974. இணைபொருந்தா எருதுகளும் மேட்டு வயலும்
கணைக்கண்களுக்கு மைதீட்டும் மருமகள் இருப்பின்
இணையும் கேடு சர்வக்ஞ.

975. வெறுக்கும் மகன் அழைத்தும்வாரா மருமகள்
கறவை பசுக்களில்லா வீடு - நின்றதுபோலாம்
எரிதீயில் நாளும் சர்வக்ஞ.

976. சுற்றிச்சுற்றிவரும் எருதுகளும் பொருதும் மகனும்
வற்றாக் கண்ணீரின் மருமகளுடைவீடு - மண்ணெடுத்து
தூற்றியது போலாம் சர்வக்ஞ.

977. உரைமன்னரில்லா தேயம் விசும்பின்துளி இல்லாதுழவு
நரைத்த கிழத்தியுறவுஎன்ப நாய் சுவைத்தன்ன
தரையில் செருப்பைநாளும் சர்வக்ஞ.

978. தரிசு நிலமும் தந்திடுமோ விளைச்சல்?
பரிசாம் மலம்விரவிய சோறும் மண்ணில்
எரிகுஞ்சி மூதாட்டியுறவு சர்வக்ஞ.

979. ஈச்சமரமும் இழிவு கைம்பெண் நிலையுமிழிவு
நீசரின் வீடுமிழிவு-வீட்டின் வறுமையும்
இச்சகத்தில் இழிவாம் சர்வக்ஞ.

980. இருக்குமூர்ப் பகையும்கேடு தொங்கிய முலையும்கேடு
ஏருழாக் காளையின் நிலையும்கேடு-வீட்டில்
தருக்கின் சண்டையும்கேடாம் சர்வக்ஞ.

---

974. கணைக்கண்-அம்பு போன்ற கண்

977. உரை - புகழ்

978. எரிகுஞ்சி - செம்மயிர்

981. கண்கவர் வேசியெச்சில்கேடு புழுவரித்த பல்லும்கேடு
புண்படுத்தும் சொல்லும்கேடு நம்பிக்கையைப் பாழாக்குதல்
மண்ணில் கேடுடைத்தாம் சர்வக்ஞ.

982. பாட்டையில் வசிப்பதும்கேடு பொய்யுரைக்கும் பெண்ணும்கேடு
கொட்டைப் பாக்குக் கடிப்பதும்கேடு - புவியில்
நட்பைமுறிக்கும் இல்லாள்கேடு சர்வக்ஞ.

983. முருகிலாப் பெண்ணினும் மேவுதலற்ற திருமணத்தினும்
தருவதை உண்டுறங்கா மனைவியினும் - இறப்பதுமேல்
நெருப்பில் வீழ்ந்து சர்வக்ஞ.

984. சாலைவளர் மரம்நன்று ஒழுகும் மனையினும்
மாலையிருளுள் பேயுறவும் நன்று சண்டையிடும்
சேலைகட்டிய மனைவியினும் சர்வக்ஞ.

985. பணியாற்றா கரத்தினும் மரக்கிளையே மேலாம்
தணிந்தஅமைதி இல்லா வீட்டினும் -காலமெலாம்
துணிந்தபட்டினியே மேலாம் சர்வக்ஞ.

986. கடிக்கும் செருப்பினும் நாய்க்கடியே மேலாம்
தடித்துப் பேசும் மனைவியினும் - தீயில்
மடிதலே நன்றாம் சர்வக்ஞ.

987. நீரொழுகும் வீடும் இருமனப் பெண்டிருறவும்
ஊர்க் காவலன் பகையும் - இல்லத்தில்
போர்க்குணமும் கேடாம் சர்வக்ஞ.

988. கண்ணின் நோயும் புண்ணின்முகமும் கேடுடைத்து
வண்ண ஒப்பனையின் மனையாளொடு - கீழோரில்
பெண்ணெடுப்பதும் கேடாம் சர்வக்ஞ.

989. ஒருமுறையுரைப்பக் கேளாள் மறுமுறையுரைப்பச் சினப்பாள்
செருக்குடை இல்லாளினும் - உயிர் பறிக்கும்
பெருநோயே நன்றாம் சர்வக்ஞ.

990. காசில்லா வாழ்வு தோசையில்லா வுணவு
கூசியே சலிப்புற்றோளில்லமென்ப - தாயில்லாப் பிள்ளை
காசினியில் படுத்துயரொப்ப சர்வக்ஞ.

991. விழிப்பாற்றல் அற்றபரியும் வீரமற்ற வேந்தனும்
இழிகுணத்தன்மையால் மறுதலிக்கும் பெண்வாழ்வும் -
வாளால்
அழித்துக் கொண்டன்ன சர்வக்ஞ.

992. வாயாடும் மருமகள் வாய்மையற்ற மனையாள்
தூய்மையற்றுத் திரியும் மகளிருக்கும்வீடு - தண்டமெனும்
நோயினின்று தப்பாது சர்வக்ஞ.

993. கெட்டிப்பாக்கு சேராவெற்றிலை, சாஉரமற்ற கொட்டகை,
வெட்டிவெட்டிப் பேசும் மனையாள் - எண்ணெய்
புட்டி உடைந்ததொப்ப சர்வக்ஞ.

994. மீசையற்ற முகமும் மேன்மையற்ற வீடும்
ஆசைமனம் நொந்தவன்பால் வாழ்வும் - காசற்ற
வேசிக் கொப்பாம் சர்வக்ஞ.

995. பயன்தாராக் கொடையும் பெருமைதாரா வாழ்வும்
நயனிலா பெண்ணோடு வாழ்வென்ப - கருகித்
தீய்ந்தசோறு சுவைத்தன்ன சர்வக்ஞ.

996. அறவே சுவையற்றஉணவு பரியற்ற பார்வேந்தன்
திறமற்றவள்கண் இல்லறம் - முதியோன் நடுங்கி
இறந்தது போலாம் சர்வக்ஞ.

997. செருக்களத்துள் வளையாவில்லும் இணையா வீரனும்
இருப்பதறிந்து வினையாற்றா மனைவியும் - உலகில்
இருந்தும் இறந்ததற்கொப்பாம் சர்வக்ஞ.

998. சம்புமடியின் பசுவும் குளியலறை அற்றவீடும்
நம்பிக்கையற்றவளோடு மனை வாழ்க்கையும் - கோடையில்
தீம்பின்கனல் காத்ததொப்ப சர்வக்ஞ.

998. சம்பு = தட்டையான

999. எண்ணெயின்றி நீராடல் சுண்ணமற்ற வெற்றிலை
கண் இல்லாதவள்கண் மனையறம் - மணலுள்கொட்டிய
எண்ணெய் என்றறிவாய் சர்வக்ஞ.

1000. துவையலற்ற உணவும் மலர்வாழையற்ற தோட்டமும்
சுவை புன்னகையிலாள் மனையும் - சாணவரட்டியின்
உவப்பிலா புகைபோன்றாம் சர்வக்ஞ.

1001. பஞ்சணையற்ற உறக்கமும் வெற்றிலையற்ற பையும்
வஞ்சனையாள் இல்லறமும் உலகில் துருப்பிடித்த
பஞ்சிரும்புக்கு நிகராம் சர்வக்ஞ.

1002. மொழியறியா மாந்தன் பொருளறியா வாழ்க்கை
கழிவிரக்கம் கொண்டோள் வாழ்வு - கழுதையின்
கழிவு முகர்ந்தன்ன சர்வக்ஞ.

1003. இல்லாளற்ற உறக்கமும் இஞ்சியற்ற உணவும்
பல்விழுந்த முதியவளோடு காமமும் - சமரில்
வில்லொடிந்த நிலைக்கொப்பாம் சர்வக்ஞ.

உ. தூற்றலும் போற்றலும்

1004. நடத்தையிலும் நிகரில்லை ஆலத்தில் பூவில்லை
திடமனதும் மங்கையர்க் கில்லை - நாவில்
திடஎன்பு மில்லை சர்வக்ஞ.

1005. உன்மத்த நாயும்கேடு பொறாமையின் மகளும்கேடு
புன்சொல்லின் உறவும்கேடு - பெண்ணை நம்புதல்
என்றுமே கேடுடைத்தாம் சர்வக்ஞ.

1006. தெங்கின் சுவையறியுமோ நீருள்ளிருக்கும் பாறை
மங்கையன்பு தன்பால் என்றெண்ணும் மூடரின்
தொங்கிய முகம்பாராய் சர்வக்ஞ.

1007. நீர்உறை கல்லும் செழிப்புறையும் மரமறியுமோ?
தார்மணப் பெண்ணன்பு தனக்குடைத் தென்போர்
நிர்மலமற்றவரே மனத்துள் சர்வக்ஞ.

1001. பஞ்சிரும்பு : Soft Iron, - Sponge Iron

1008. உளமொடு ஒருத்தி காதலித்தாள் என்பர்
உளமும் பித்தாம் - நீரில் எரியுமோ
களமேட்டுப் பஞ்சும் சர்வக்ஞ.

1009. ஆற்றுமணலில் நட்டகம்பம் கால் கொள்ளுமோ?
ஆற்றலோடு அசைப்பின் சாயும் - பெண்மனம்
ஊற்றுமணலாம் யாரறிவர் சர்வக்ஞ.

1010. மண்ணில் பிறப்பினும் குணம்மாறும் கூரைவோடு
மனமொன்றிருக்க புறமொன்றிருக்கும் பெண்ணெனும்
மண்ணோட்டினை நம்புவரோ சர்வக்ஞ.

1011. நாய்வால் நம்பியே பள்ளமும் தாண்டுவரோ?
நாய்வாலினும் திரியும் மனமுடையாள் - பெண்ணெனும்
நாயை நம்புவரோ சர்வக்ஞ.

1012. திறமையில் ஒன்றாம் பரியும் பெண்ணும்
அறிந்தோன் ஏறக் குனியும் - குனிந்தோனேற
பறிக்கும்குழியும் தள்ளியே சர்வக்ஞ.

1013. காட்டில் காய்ப்ப தொருநாள் கனியாகலாம்
நாட்டில் ஆடொரு புலியைத்தாக்கலாம் - பெண்மொழிய
வீட்டில் நம்புவதோ சர்வக்ஞ.

1014. தண்ணீர் வாழும் சிறுமீன் தடத்தை
கண்டவர் யார்? கன்னியர் உணர்வை
கண்டறிந்த ஆடவர்யார் சர்வக்ஞ.

ங. முடிவான கருத்து

1015. பெண்ணவள் உதவுவள்பிறர்க்கு விண்ணுக்கும் பாதையவள்
பெண்ணவள் இதமானவள் அனைவருக்கும் - சினப்பின்
பெண்ணவள் மாரியாம் சர்வக்ஞ.

1016. நம்பியது போலிருப்பாய் நம்பாமலு மிருப்பாய்
நம்பின் மனமறிந்து விழிப்போடிரு - பெண்ணை
நம்பியோர் கெடுவர் சர்வக்ஞ.

1017. வெகுளும் பெண்ணைத் திருத்துவார் காணேன்
தகுஅமுதும் தகாநஞ்சும் அவள்பாலுண்டு -
பெரியோரும்யார்
பகுத்துண்ண உலகில் சர்வக்ஞ.

1018. பெண்ணின் குணமறிய கண்ணுக்கது காண்பதுவோ?
சுண்ணக் கல்லுள் முடங்கிய வெப்பம்
தண்ணெனக் காண்பதன்ன சர்வக்ஞ.

17. இருமனப் பெண்டிர்

க. பரத்தையர் தன்மை

1019. அளவையில் வணிகனுக்கும் பட்டாடையில் வேசிக்கும்
நீளசடையினில் முனிவருக்கும் பொருளில் கணிகைக்கும்
அளவிலா நாட்டமாம் சர்வக்ஞ.

1020. கோட்டைக்கு அரணாசை வணிகர்க்கு பட்டணத்தாசை
பாட்டைக்கடக்கும் காலுக்குச் செருப்பாசை - கட்டியணைக்கும்
வேட்டையிலாசைப் பரத்தைக்கு சர்வக்ஞ.

1021. பிரைமோருக்கு புளியாசை மாந்தருக்கு மழையிலாசை
கரைமீனவர்க்கு வலையில் ஆசை - வேசியர்க்கு
ஊரைச்சுற்றுவதில் ஆசை சர்வக்ஞ.

1022. உண்டபின் ஓடியாடல்தீது புறங்கூறுவோன் நட்பும்தீது
மண்டியில் சுமந்தெடுத்தல் தீதன்ன - கணிகையுடன்
உண்டுறங்கல் தீதாம் சர்வக்ஞ.

உ. பரத்தன்மையின் கூறுகள்

1023. நாரும்வேரும் காட்ட நாரியர் வசப்படுவரோ?
நாரியரும் நல்லுலகும் வசமாம் - பொன்னெனும்
வேரினைக் காட்டிடின் சர்வக்ஞ.

1024. இல்லாளை மறப்பரோ பரத்தையைக் கண்டு?
இழையறுந்த தக்களியன்ன - இல்லாள் சினம்
இல்லத்துக்குக் கேடாம் சர்வக்ஞ.

1025. பசுமையற்ற தோட்டமும் துய்யலற்ற உணவும்
காசற்றவனின் வெற்றுநோக்கும் - கோலின்றியே கைகள்
வீசியது போலாம் சர்வக்ஞ.

1022. மண்டி - கன்னடச்சொல், முழங்கால் - மண்டியிடுதல் (தமிழ்ச்சொல்)
1025. துய்யல் - பாயாசம்.

1026. வீடில்லா ஆணும் அரணில்லாக் கோனும்
உடலுறவிலா ஆண்வேசியென்பர் - முடவ னெறிந்த
ஈட்டிக்கு நிகராம் சர்வக்ஞ.

1027. யார்வீட்டு இல்லாளோ பேரழகில் ஒத்திருக்க
யாருமறி - யாரென நெருங்குதல் - கண்களில்
காரப்பொடியை தூவியதன்ன சர்வக்ஞ.

1028. பெண்நோய்க்கு மருந்து பொன்னே ஆகும்
மண்ண கழ்ந்து வேரெடுப்பார் தலையில்களி
மண்ணே காண் சர்வக்ஞ.

1029. வனச்செடிகளை அழித்து வீழ்த்திட வேண்டா
தனமின்றேல் விரும்பாள் பெண்ணும் - வீணில்
வனமழிப்பின் பயனென் சர்வக்ஞ.

1030. ப்றபலப்பொருளும் ஒழிய பெற்றகடன் அழிய
பிறபெண்டிரே அழகென நாடின் - கேடும்
பிறப்பெடுக்கும் முலகில் சர்வக்ஞ.

1031. நோட்டத்தின் வேட்கையினும் மரம்தழுவுதல் நன்றாம்
களியாட்டச் சுவையினும் - எமனுலகின் உணவே
ஊட்டமாம் காண் சர்வக்ஞ.

1032. கணிகையை நாடுவான், கணிகையோ பொய்யுரைத்து
வணிகனை நாடுவாள், பேதையவன் பேதலித்து
பணியாளனென மருகுவன் சர்வக்ஞ.

1033. பருவமெய்தாப் பெண்புணர்வும் சுவையற்ற உணவுமென்ப
எருமையது பசும்புல் மேயாது - மலம்
உருசித்தது போலாம் சர்வக்ஞ.

1034. பழம்நட்பை மனம்பதித்து விரும்பிநாடுவோன் மூடனாம்
பழுத்தவுடலின் பிணத்துக்கு - வாயூறிய நரியும்
வழுக்கியே விழுந்தன்ன சர்வக்ஞ.

1035. நோட்டமே இன்பமெனில் கோடிப்பொன்னும் நிகரன்று
நோட்டமே கூடவும் துணையாம் - துன்பத்துக்கும்
நோட்டமே முதலாம் சர்வக்ஞ.

1036. முதியோள் உறவினும் முட்புதரே மேலாம்
உதிர்ந்த நாரின் பையென - நைந்த
முதியோள் துன்பமாம் சர்வக்ஞ.

1037. பாசிநீர் நாடியோனும் முதலைவாய்ப் பட்டோனும்
வேசி பண்பறியாது நாடிக் கூடியோனும்
காசினியில் கெடுவர் சர்வக்ஞ.

1038. மொட்டுச் சூடுவதும்கேடு காரிருளில் காண்பதும்கேடு
கட்டுக்குலைந்த முதியோள் உறவும்கேடு - சிறுமியர்
கெட்டசெயலும் கேடுடைத்தாம் சர்வக்ஞ.

1039. சுத்தமிகு உறைவிடமெனச் சொக்கிப் போவர்
அத்துமீறியே துர்நீர்ப் பிரியும் அல்குல்நாடி
செத்துமடிவர் கெட்டுநிதம் சர்வக்ஞ.

1040. போட்டியெனச் செல்வோர்க்கு எட்டுக்காசும் தங்காது
வெட்கியோடுவள் மறமகளும் - வாழ் நாளும்
பட்டுப்போகு முலகில் சர்வக்ஞ.

1041. அவ்விடம் பரத்தை இவ்விடம் கணிகை
அவ்விவ்விடம் பசுவைப் புணர்வோன் - பிறப்பான்
இவ்வுலகில் கழுதையாய் சர்வக்ஞ.

1042. கந்தையுடுத்தி ஒடுங்கியவளினும் பித்தானவளே மேலாம்
விந்தையின் வகிடெடுத்த செருக்கின் வேசியுறவு
வெந்தணல் வீழ்ந்ததொப்ப சர்வக்ஞ.

1043. தகையோகிக்குக் குலம்கேடு உடலுக்குப் பனிக்கேடு
ஈகையறியார்க்குப் பொருள் கேடு - புணர்ச்சி
மிகையாதலும் கேடாம் சர்வக்ஞ.

1044. உடலுறவும் நன்றாம் கருத்தரிக்கா பெண்பால்,
உடலுறவும் கருத்தரித்த பெண்பாலென்ப - உண்டதாம்
உடைந்த தயிரும் சர்வக்ஞ.

1045. பட்டுடுத்திப் பின்வேறுடுத்தி முடிதிருத்தி பின்முடிந்து
வேட்கையில் கரையமர்ந்து உரக்கப்பேசிடுவாள் சிரித்து
கட்டுடலின் கணிகையேகாண் சர்வக்ஞ.

1046. பிள்ளையொன்றின் தாயோடு புணர்தலும் சிறப்பாம்,
பிள்ளைகள்பல பெற்றவள் தொடர்பினும் - சிறப்பாம்
கள்வருறை சிறையும் சர்வக்ஞ.

1047. சாரமற்ற புல்மேயும் பசுவும் - காமச்
சாரமற்ற பெண்டிரைக் கூடியே மகிழ்வோனும்
காராம்பசுவினும் கீழாம் சர்வக்ஞ.

1048. அழகுடையோள் வீசும்பார்வை அமுதுண்டது போலாம்
அழகற்றவள் வெற்றுப்பார்வை - நுண்மணலைத் திணிக்க
விழுங்கியது போலாம் சர்வக்ஞ.

1049. முதுநாய் முயலைக் கண்டும் அஞ்சியோடும்
முதியோன் இளமங்கையிடம் கூடுவதும் - முதுக்கூகை
உதறியது போலாமுடல் சர்வக்ஞ.

1050. செழிப்புடைய வயல்மேயும் எருமையும் - சகதியில்
மூழ்கியது போலாம் - முதியோன் பூப்படைந்த
அழகியை விரும்புவதும் சர்வக்ஞ.

1051. பாகலும் கசப்பாம் மாவடுவும் புளிப்பாம்
மோகம் கொண்டுநீ பெண்ணுக்கு ஏங்கற்க
தாகமெனில் இனிப்புண்க சர்வக்ஞ.

1052. வற்றிய குளத்துக்கு முற்றிய மரங்களில்லை
உற்றகுணமோ கழுதைக்கில்லை கத்திக்கு தயவில்லை
கற்றசத்தியமோ தாசிக்கில்லை சர்வக்ஞ.

1053. நரைக் கிழவனுக்கு விரைவின் இளமையேன்?
உறைந்த நெய்யுருகி வெண்ணெயாகா - இளமையாகா
நரையும் உலகில் சர்வக்ஞ.

1054. எரிந்த சாம்பல் துளிர்த்திடுமோ? இளமை
சரிந்த பெண்ணைப் புணர்தல் - வேம்பைச்
சாறு பருகியதொப்ப சர்வக்ஞ.

1055. சின்னவளைக் கூடுதல், சிறுமை பேசுதல்
கன்றிழந்த பசுவின் பால்கறத்தல் என்ப
தன்னையே கொன்றன்ன சர்வக்ஞ.

1056. வயதுடைப் பெண்நாடுவோன் வயதிலாப்
பேதைநாடுவனோ?
எய்துவரோ கூரம்பு பனங்காட்டு நரிமீது
எய்யாமற் கரிமீது சர்வக்ஞ.

28. கணிகைத் தொழில்

க. பல்வகை நிலையில் பரத்தையர்

1057. ஒருபுறம் வேசியும் மறுபுறம் விதவையுறவும்
பிரிதொருபுறம் மாக்களுறவு கைவிடார் - கழுதையாம்
பிறவி பலவும் சர்வக்ஞ.

1058. பளிங்குச் சேலைகட்டி பச்சை இரவிக்கையுடுத்தி
ஒளிமிகு ஒப்பனைகள் உடையோள் - காமன்
அளித்த கணையாம் சர்வக்ஞ.

1059. அலையும் கூந்தல்தடவி அல்குல் பரப்பி
சிலையளவின் முலைதெரிய முந்தானை விலக்குவள்
நிலையில் கணிகையாம் சர்வக்ஞ.

1060. அரைக்கும் பணிக்கும் அளவிலா ஒப்பனை
அரைநொடியில் உடுத்துவள்வேறு அழுக்கெனச் செப்பியே
தரையிலிவள் தாசியே சர்வக்ஞ.

1061. கடிப்பாள் கடிதில் இணைவாள், மூடியிலுண்பாள்
நடிப்பில் புகழுரைகள் பெய்வாள் - இப்பெண்ணைக்
கடிதில் நம்பற்க சர்வக்ஞ.

1062. அழகுடையோள் நட்பு சான்றோர் இல்லுக்குநிகராம்
அழகிலாள் நட்பு சாறுபிழிவில் சிக்கி
அழிந்தது போலாம் சர்வக்ஞ.

1063. மூட்டை கொசு அரக்கர் பரத்தையர்
பட்டென அடித்தும்கடித்தும் கொல்வ(ர்) இருளில்
அடங்குவர் பகலில் சர்வக்ஞ.

1064. நாளும் உண்டுதிரியும் கீழோர்உறவு வேண்டற்க
நாளும்கண்டு இலிங்கப் பூசனை செய்யார்க்கு
நாளும்தப்பா எமகண்டம் சர்வக்ஞ.

1065 வேசிகைம்பெண் வாயும் குதத்தின் நாற்றமுடைத்தாம்
ராசியாய் ஐம்பொன் சொரியினும் - அவள்
வீசியெறிந்தே நோக்குவள்பிறரை சர்வக்ஞ.

1066. வேசியான கைம்பெண்முகம் முதுநாயின் குதம்போலாம்
வேசியவள் தாம்பூலம் தரிப்பின் - கண்டவரின்
தாசியென்றே அறிவாய் சர்வக்ஞ.

1067. கற்கண்டும் கேட்பாள் கணவனை விரும்பாள்
நெற்புல்லென நிமிர்வாள் ஒப்பனையில் கணிகை
ஏற்கும்நோய் எந்நோயோ சர்வக்ஞ.

1068. விதவையின் கூந்தல் மழிப்பதும் நன்றே,
விதவையும் விரும்புவள் ஆடவர் பிறரை
விதவைக்கு கூந்தலிருப்ப சர்வக்ஞ.

1069. தனம் பெருத்தோள் எழுந்தோடி வருதல்
கனத்த சிறகசைய மேல்கீழ் பறக்கும்
வனப்புள் போன்றாம் சர்வக்ஞ.

1070. தொங்கிய தனமுடைவேசி கிழவனொடு புரள
அங்கிங்கும் தள்ளாடும் முலைக்காட்சி - பாழூரில்
ஏங்கியகழுகு சோர்ந்தாடியதன்ன சர்வக்ஞ.

1071. இரும்பின் கனமுடைக் கால்கள் மந்திமுகம்
விரும்பி நாடியோர் மதியும்திரிய - வேட்கையில்
அரும்பிடுவாள் கணிகையே சர்வக்ஞ.

1072. தாக்கும் நோக்கில் நூலெடுத்து வீசுவாள்
நோக்கும் விழியும்வாடப் பாடுவாள் - வேசியின்
போக்கும் அஃதாம் சர்வக்ஞ.

1073. நிறத்தில் பளிங்குடுத்தி உச்சந்தலை வகிடெடுத்து
பறக்கவிட்டே நடப்பாள் முந்தானை - இவள்
பரத்தையென அறிவாய் சர்வக்ஞ.

1074. இரட்டை வடத்தின் அட்டிகை செவிக்கோலை
தரமிகு ஒப்பனையோ ஒப்பனை - காமன்
தரைக்குவிடுத்த கணையாம் சர்வக்ஞ.

1075. உடுத்தியதைக் களைவள் பின்னொன்று உடுத்துவள்
சடுதியில் வருவள் புக்ககம்விட்டு - பாரில்
படுத்துவள்பாடு பரத்தையே சர்வக்ஞ.

1076. ஆல்போல் அகன்ற குணமுடையோள் அல்லள்
கால் பெருவிரலால் நிலம்கீறும் பெண்ணவள்
சால்பிலா வேசியே சர்வக்ஞ.

1077. சிறுபற்கள் காவிதெரிய செவ்வாய் திறந்தே
சிறுதூண் சாய்ந் துறங்குவள் - பரத்தையின்
சிறுக்கியே காண் சர்வக்ஞ.

1078. ஊரோர்நாடும் கிணற்றுக்கும் ஊர்த் தலைவாசலுக்கும்
வேர்விட்ட வேங்கைமர நிழலுக்கும் வேசிக்கும்
போராடுவோன் அறிவிலியே சர்வக்ஞ.

1079. கழுதைக்கு குணமில்லை கத்திக்கு அருளில்லை
விழுதும் வளர்வதில்லை பாலையில் - சால்பில்லை
வழுக்கிய பெண்ணிடம் சர்வக்ஞ.

1080. பட்டுடுத்தி பட்டுடுத்தி வேளைக்கொரு சேலைகளைவாள்
பொட்டிட்டுப் பல்லைப் பல்லைக் காட்டிடுவாள்
கெட்டவளே என்றுணர்வாய் சர்வக்ஞ.

1081. நெல்குத்திக் கல்சுற்றியதால் களைத் தேனென
பல்குத்தியே படுப்பாள் பகற்போதில் - பண்பில்
பல்லோரின் விலைமகளே சர்வக்ஞ.

1082. நடையிலொரு நாணம் உடையிலொரு கோணம்உரை
நடையிலொரு கானம் புன்னகையிலொரு கவிதானம்ஒடி
இடையின் வேசியாம் சர்வக்ஞ.

1081. கல் - மாவரைக்கும் கல்; பல்குத்துதல் - வெற்றிலைமென்றபின் கூர்மையும் தட்டையுமான கம்பியால் பல்குத்தும் வழக்கம் இன்றும் கிராமங்களில் காணலாம்.

1083. கெண்டைக் காலும்தெரிய மடித்தேநடப்பாள் மண்டியும்
கணக்கின்றியே காசைப்பெற காட்டிடுவாள் பல்வரிசை
கணிகையே காண் சர்வக்ஞ.

1084. கணுக்காலைக் குறுக்கி குலுங்கிடச் செய்வாள்
மினுக்கும் கொங்கை பிறரறியச் செய்வாள்
ஆணுக்குக் கேடிழைப்பாள் சர்வக்ஞ

1085. ஒருவருக் கிருவர்விடம் கனலுக்குப் பனிவிடம்
செருக்குடையோர்க்கு தெய்வமே விடம் - வேசியவள்
கருவுறுதலே விடமாம் சர்வக்ஞ.

1086. வேசிக் கணவன் வேற்றூர்ச் செல்வது
மசிந்த தயிரை மரத்தில்வைத்து - காகம்
புசிக்கக் காட்டியதன்ன சர்வக்ஞ.

1087. நீருள் தன்னுருக்கண்டு சந்தனம் இடுவாள்
விருப்பூற பெருமூச்செறிந்தே அடிவைப்பாள் - கணவனை
மீறியே நடப்பாள்வேசி சர்வக்ஞ.

1088. நீரில்லாக் குளம்நாடுவோர் ஊரில்லா தடம்நாடுவோர்
அரவமில்லா சந்தைநாடுவோர் பரத்தை நாடுவோரென்பர்
நிரந்தர மூடரே சர்வக்ஞ.

29. வேசியர்

க. உவமை

1089. பட்ட கடனுக்கு எல்லையில்லை ஆலுக்குப் பூவில்லை
முட்செடிக்கு வாசமில்லை இறைவனும் இல்லை
கெட்டவளுக்கு நடத்தையில் சர்வக்ஞ.

1090. பஞ்சில் சாறில்லை காதலுக்குக் கண்ணில்லைமூட
நெஞ்சினர்க்கு இணை யாருமிலர் - வேசிக்குஈர
நெஞ்சமே இல் சர்வக்ஞ.

1091. சொல்லும் எல்லையறியா வாழை முள்ளறியா
கொல்லும் தீயரக்கர் பயமறியார் - வேசியோ
மேல்கீழென பேதமறியாள் சர்வக்ஞ.

1092. மதியறியார் மூடர் முடிவறியா வாதம்
அதிவலிமை யறியார் தோற்றோடுவோர் - வேசியவள்
நீதியே அறியாள் சர்வக்ஞ.

1093. அருங்குணமில்லை அறிவிலிக்கு ஆலுக்குப் பூவில்லை
நெருங்கிய சாவுக்கு மருந்தில்லை - வரைவின் மகளிர்க்கு
கருணையே இல்லை சர்வக்ஞ.

1094. எட்டனுக்கு அறிவில்லை ஏதுமற்றோர்க்குப் போக்கில்லை
மட்டிலாது உழைப்போனுக்கு மதிப்பில்லை - கணிகைக்கு
கட்டுக்கொண்ட நோன்பில்லை சர்வக்ஞ.

1095. விடமறியாதோ நாகம்? பாலறியாதோ பசுவும்?
பட்டமரம் நிழலறியாதோ? வேசியர் நட்பில்
சட்டென வீழாதோருமுண்டோ சர்வக்ஞ.

1096. காலன் நாளறியான் கடன் எல்லையறியா
காலிலா முடவன் வலுவறியான் - வேசி
சால்பறியாள் உலகில் சர்வக்ஞ.

1097. இலைக்கு விதைகளில்லை முலைக்கு என்புகளில்லை
அலையெனமோதும் வாட்களுக்கு காயங்களில்லை -
வேசிக்கு
தலைசிறந்த குடிப்பெருமையிலை சர்வக்ஞ.

1098. அத்தியை அணிலறியா, கழுதை கொம்பறியா,
ஹத்தியைக் கிளியறியா, இருமனப் பெண்டிர்
சத்திய மறியார் சர்வக்ஞ.

1099. பெருங்காயமும் மிளகுமேன் தும்பைக் கீரைக்கு?
இருளுடை வறியோர்க்குப் புனைவுகளேன் - வேசியிடம்
பெருநம்பிக் கையுமேன் சர்வக்ஞ.

உ. உண்மை

1100. புள்ளும் பரத்தையும் இரண்டகத்தில் ஒன்றே
கள்ளமுடை கணிகை - விதைதின்றே உமிதள்ளும்
புள்ளின் நிலையோள் சர்வக்ஞ.

1101. பரியும் பரத்தையும் திறமையுள் ஒன்றாம்
பருப்பைத்தின்று பட்டையைத் தள்ளும் பரிபோலும்
பரத்தையர் தொழிலாம் சர்வக்ஞ.

1102. தோணியும் கணிகையும் நிலையில் ஒன்றே
தோணியின்கண் ஒருவர் இறங்க - பிறிதொருவர்
தோணி ஏறுவர் சர்வக்ஞ.

1103. புழுவும் பரத்தையும் ஒன்றெனக் காண்பாய்
புழுவும் இலையரித்துத் தள்ளும் காம்பு
பழுதுடைப் பரத்தையுமஃதே சர்வக்ஞ.

1104. கொடியும் கொடியிடைப் பரத்தையும் நன்றல்ல(ர்)
கொடியது கொம்பினைத் தழுவினும் - கால்பதிக்கும்
இடமே வேறாம் சர்வக்ஞ.

1105. கணிகையும் ஞமலியும் தன்மையில் நிகராம்
கானகத்துப் பிணம்தின்று - கூடுதள்ளும் நாயொப்ப
கணிகையாம் காண் சர்வக்ஞ.

1098. தமிழில் பருத்தி கன்னடத்தில் 'ஹத்தி' எனப்படுகிறது.

ரு. வேசிக்கு இவைகள் ஏன்?

1106. கணவனுக்குக் கஞ்சியேன்? சமணருக்கு வேலுமேன்?
கன்னியும் முதியோனுக்கேன்? விரும்பா ஆடவனும்
கணிகைக் கேன் சர்வக்ஞ.

1107. அல்லாத சொல்லுமேன்? அழகிலா மகனுமேன்?
புலிநட்பு ஒட்டைக்கேன்? வரைவின் மகளிர்க்கு
வேலொத்த நீள்பறகளுமேன். சர்வக்ஞ.

1108. செருக்கேன் வறியோனுக்கு? கரும்பேன் பொக்கைக்கு?
குருடனுக்கு மணிவடமுமேன்? கணிகைக்கு அழகியவிற்
புருவமு மேன் சர்வக்ஞ.

1109. பருந்துகேண்மை பாம்புக்கேன்? கட்டைக்கரிக்கு மடியேன்?
இரும்புக்கோலுக்குத் தங்கப் பூணேன்? வேசிக்கு
விரும்பியுறங்கும் இமைகளுமேன் சர்வக்ஞ.

சு. வேசிக்கு இவை கேடு பயப்பன

1110. பெரும்பந்தலுக்கு மழையேபகை! கிளிக்குப் பூனையேபகை
எரிசுடருக்கு சுழற்காற்றே பகை - தாசிக்கு
பருத்தகால்களே பகையாம் சர்வக்ஞ.

1111. அறுந்த உடையும்கேடு மனைவியற்றவன் வாழ்வும்கேடு
முறிந்த பற்களின் சிரிப்பும்கேடு கணிகை
கருத்தரித்தலும் கேடுடைத்தாம் சர்வக்ஞ.

1112. வெற்றிலையொன்று மெல்லுதலும் நிந்திப்போர் உறவும்
பெற்றவளைப் புறந்தள்ளும் மகனும் - வேசிப்பால்
பெற்றயின்னலும் கேடுடைத்தாம் சர்வக்ஞ.

1113 கருப்புப் பெண்ணும்கேடு மூங்கில் வீடும்கேடு
கருகிய உணவும் கேடு - பரத்தைக்குச்
சருமநோயும் கேடாம் சர்வக்ஞ.

1108. பாடபேதம் உள்ளது.

1114. கேடுடைத்து புறங்கூறல் கேடுடைத்து நொய்யுணவு
கேடுடைத்து செருக்குடைய மகனும் - நெடுந்துயிலும்
கேடுடைத்தாம் பரத்தைக்கு சர்வக்ஞ.

ரு. வேசிக்கு இவை இனிது

1115. சீனிப்பொங்கல் நன்று வில்லுக்கம்பு நன்று
நனிவுடைத்தாம் காலைவுலா - கலவியே கணிகைக்கு
இனிதாம் காண் சர்வக்ஞ.

சா. வேசியின் ஆசைகள்

1116. கன்றுக்குப் பாலாசை இடையனுக்கு ஆடாசை
ஆன்றமழையும் மக்களுக் காசை - பரத்தைக்கு
ஆண்கலவியிலாசை சர்வக்ஞ.

1117. கோட்டையாசை வேந்தனுக்கு தோட்டவாசை உழுவோனுக்கு
நட்டபயிருக்கு மழையின் ஆசை - வேசியர்க்கு
நாட்டத்தில் ஆசை சர்வக்ஞ.

1118. வில்லெறிய வேடனுக்காசை கொல்லுதல் கொலைஞர்க்காசை
வெல்லத்தில் ஆசை சிறுவர்க்கு - கணிகைக்கு
சல்லாபத்தில் ஆசை சர்வக்ஞ.

1119. ஊராசை குடிகளுக்கு வீட்டாசை சிறுவர்க்கு
நீர்ப்பறவைக்கு கடலாசை வரைவின் மகளிர்க்கு
ஊர்ப்பொருளில் ஆசை சர்வக்ஞ.

1120. வண்டிக்கு உருளையிலாசை வேசிக்கு முலையிலாசை
கணவனைக் கொண்டோனுக்கு குணத்திலாசை - வேசிக்கு
ஆண்களின் ஆசை சர்வக்ஞ.

எ. வேசியின் திறமை

1121. வெண்ணெயறிவான் இடையன், பயிரறிவான் உழவன்,
வண்ணான் சேலையறிவான் - பொய் அறிவள்
கணிகையு முலகில் சர்வக்ஞ.

1122. கொடியறிவான் தோட்டக்காரன் எள்ளறிவான் செட்டியார்
கொடிய கள்வரைக் காவலனறிவான் - பரத்தையோ
மடியில் இருப்பவரையறிவள் சர்வக்ஞ.

1123. அலைநீரறிவான் மாலுமி வேடன் வலையறிவான்
மலைவாழ் நாடோடி கூட்டமறிவான் - காமத்துக்கு
அலைவோரை வேசியறிவாள் சர்வக்ஞ.

1124. தட்டான் விலையறிவான் மீனவன் நீரறிவான்
கொட்டும் மழையளவை ஏரியாலறிவர் - விலைமகள்
மட்டிலாது கூடுவதறிவள் சர்வக்ஞ.

1125. மந்தி மரமறியும் வளர்ப்பவனை நாயறியும்
நந்தி பசுவறியும் வேசியர் பொருளறிவர்
அந்தி பகலாய் சர்வக்ஞ.

அ. வேசியும் கேடு செய்பவளே

1126. வனமெண்ணி ஏங்கும் பொறிவீழ்ந்த கரியும்
வனமோ எண்ணாது கரியை - வேசியோ
தனமில்லாதவரை நினையாள் சர்வக்ஞ.

1127. பருந்து பாம்பைவிழுங்க மருந்து நோயைவிழுங்க
விரும்பி உறங்குவோரை மரணம்விழுங்க - பரத்தை
நெருங்கியவரை விழுங்குவள் சர்வக்ஞ.

கூ. வேசி அதரம் தூய்மை

1128. தென்றலின் கீதம்தூய்மை வேசியதரம் தூய்மை
தென்மலையின் ஊற்றுத்தூய்மை நீரெடுக்கும் தோற்பையின்
சின்னவாயும் தூய்மையாம் சர்வக்ஞ.

1129. எச்சில் என்றெண்ணற்க விலைமகள் செவ்வாயும்
பச்சைப்புளியால் ஒளிரும் பித்தளை - வெற்றிலையால்
எச்சிலூறும் வாய்த்தூய்மை சர்வக்ஞ.

கo. ஏழைக்குக் கணிகை சுகமரிது

1130. ''கள்ளியெனக் கொடி தழுவிய'' பழமொழியொப்ப
வெள்ளியுடைவேசி வறியோர்க்கு வாய்ப்பது -
முன்வினையால்
அள்ளியெடுத்த பயனாம் சர்வக்ஞ.

கக. பணமிருப்பின் பரத்தை

1131. அம்பும்தேவை வில்லுக்கு அடியாருக்கு அரணும்தேவை
நம்பிக்கையும் வணிகருக்குத் தேவை - பரத்தைக்குச்
செம்பொன்னே தேவையாம் சர்வக்ஞ.

1132. பணம்காண குணம் கொண்டவள் போலாவாள்
பணமற்ற காளையோ நாடின் - பரத்தையவள்
பிணம் கண்டதுபோல்வள் சர்வக்ஞ.

1133. பணமெனில் பிணமும் தன்வாய் திறக்குமன்ன
பணம்காணப் பத்தும்செய் வேசி - அற்றகால்
மனமிலா சொல்லாவாள் சர்வக்ஞ.

1134. முகைக் கண்ணீரைக் கொட்டும் கணிகையும்
நகை முகத்தானுக் கென்றெண்ணற்க - பணத்தை
வகையாகப் பறிப்பதற்கே சர்வக்ஞ.

1135. எச்சில் யார்வாய் உடைத்தென் வேசிக்குஊர்
எச்சில் சுவைக்கும் நாய்க்கு - யார்யார்
எச்சில் ஆயினென் சர்வக்ஞ.

கஉ. வேசியை வஞ்சிப்போர்

1136. நயமிகு சொல்லாடிச் சொல்லாடியே மயக்கமூட்டி
நயச்சொல்லால் பணச்சிந்தை மாய்த்தே சென்றிடுவான்
பயனுற்ற நம்பியே சர்வக்ஞ.

1137. சொல்லால் உணவீந்து சொல்லால் உடையீந்து
சொல்லாடியே சுகமும்கண்டு - விடியலில் போவோன்
சொல்லற்கரிய திறமையோன் சர்வக்ஞ.

கரு. மூடன்

1138. உயிரீர்க்கும் பொதுமகளை நம்புவோன் மூடனாம்
தீயின்சுடரைப் பழமென நாடும் விட்டிலொப்ப
தீய்ந்தே மடிவர் சர்வக்ஞ.

கசு வேசியுறவு வேண்டற்க

1139. செல்வமீய வறியோனும் உயர்ந்தோனென எண்ணியே
செல்வம்நிகர் சுகம் தருவளோ? இருமனப்பெண்டிர்
பொல்லாவுறவே வேண்டற்க சர்வக்ஞ.

1140. விலைமகளை நாடுவோர்தம் வாழ்வை என்னென்ப
அலைநாயாவர் அல்லலுறுவர் புண்படும் உடலும்
தலைசாய்வர் சாவில் சர்வக்ஞ.

30. உணவு

க. உணவின் பெருமை

1141. நிலையில் குலம்கெடுக்கும் பலம் அழிக்கும்
புலையர் வீடும் தள்ளும் - கூழின்
தலையாய வலிமையைக்காண் சர்வக்ஞ.

1142. கன்னமிடத் தூண்டும் கலகம் உண்டாக்கும்
இன்னல் தழுவும் - குவளை யொன்றின்
அன்னப் பாடறிவாய் சர்வக்ஞ.

1143. சினம் தணிக்கும் சிறுநகைக் கூட்டும்
மனமகிழ சொல்லாட வைக்கும் - உணவின்
உன்ன தமறிவாய் சர்வக்ஞ.

உ. ஊட்டமிருப்பின் கூட்டம்

1144. கூழிருப்பின் வலியன் ஆளிருப்பின் அரசன்
கூழும் ஆளும் கூட்டமும் இல்லாதான்
வாழ்வும் கேடாம் சர்வக்ஞ.

ங. கூழின்றேல் யாதுமில

1145. உறக்கம் வாராது அறிவு தேறாது
அறவுரை ஏற்காது - சோற் றுருண்டை
புறமாயின் உலகில் சர்வக்ஞ.

1146. கண்கள் இருள தேகம் அழிய
வண்ண நிலவின் பிறைபோல்வர் - உலகில்
உண்டி இலாதார் சர்வக்ஞ.

1147. பாதையும் துலங்கும் பெரியோனென விளங்கும்
இராதைநிகர் இல்லாளை ஆட்டுவிக்கும் சாண்
உபாதையின் வயிறே சர்வக்ஞ.

ச. வயிறும் அடுப்பும்

1148. பாழ்மனைக்கொப்பாம் கூழில்லாதான் நிலையும் - காணா
ஆழத்துள்ளுறை நாபிநோயும் - நைந்த தாள்போல்
பாழாக்கு முடலை சர்வக்ஞ.

1149. தீயின்றிப் புகையின்றி அனலின்றி வேகும்
தீயுடைத் துன்பப் பசியும் - அடுப்பாம்
வயிற்றில் நாளும் சர்வக்ஞ.

1150. அன்னக் கடவுளுக்கு மாற்றுக் கடவுளுண்டோ?
அன்னம் விளையின் உண்ணுவம் - உலகில்
அன்னமே தெய்வமாம் சர்வக்ஞ.

1151. செல்லும் இடத்துக்குச் சோறுடன் சென்றிடுக
செல்லுமிடம் சோறின்றேல் - செல்வோர் உன்னை
அல்லற்படுத்தி அகற்றுவர் சர்வக்ஞ.

1152. தோற்பையாம் வயிற்றுக்கு கவளம் தேவை
தோற்பையெனும் வயிற்றுக்கு சிவன்தரு கவளமின்றேல்
தூற்றியவனைச் சுடுகாட்டுக்கனுப்பு சர்வக்ஞ.

1152. 'தனியொருவனுக்கு உணவிலை எனில்
ஜெகத்தினை அழித்திடுவோம்' - பாரதியார்

31. மருந்து

க. உணவில் கட்டுப்பாடு

1153. உண்டபின் கனல்முன் அமர்ந்துண்டபின் நடந்து
உண்டபின் இடம்படுப்பின் - மருந்துவத் துன்பம்
வேண்டற்க நாளும் சர்வக்ஞ.

1154. பசியின்றி உண்ணற்க பசியோடும் நில்லற்க
பசுமையோடு பழஞ்சோறு கொள்ளற்க - மருத்துவரை
காசினியில் வேண்டற்க சர்வக்ஞ.

1155. நாவடக்கி உண்போர்க்கு காலனும் சேய்மையாம்
நாவடக்கா சுவையின் மாந்தர்க்கு - காலன்
அவையும் அண்மையாம் சர்வக்ஞ.

உ. மிகின் நோயே

1156. சுவையில் நாவடக்கி நன்னெறியில் அறிவடக்கிச்
சிவத்தின் சுவையறியின் - மூப்பிலும் இளமையின்
சுவையாம் காண் சர்வக்ஞ.

1157. உண்பதில் நாவடக்கி தூய்மையில் நின்றோரும்
உண்பது செறித் துண்பாரும் வலியரென்ப
ஆன்றோர் பழமொழியாம் சர்வக்ஞ.

ங. உணவின் பயன்கள்

1158. கேழ்வரகு உண்போர் நோய் அறியாரென்க
கேழ்வரகு செல்வர்க்கன்று - எளியோர் உணவு
கேழ்வரகே ஆம் சர்வக்ஞ.

1159. ஒருணவுன்போர் யோகி ஈருணவுண்போர் போகி
அறுசுவைமூ வுணவுண்போர் ரோகியாம் - யோகி
ஏறெடுத்தும் பாராருணவு சர்வக்ஞ.

1154. அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து - குறள்.

1159. ஒருணவு, ஈருணவு, மூவுணவு - ஒரு வேளை, இருவேளை, மூவேளை
ரோகி - பிணியாளர்.

''ஒருபோது யோகியே ஒண்தளிர்க்கை மாதே
இருபோது போகியே என்ப - திரிபோது
ரோகியே நான்குபோ துண்பாண் உடல்விட்டுப்
போகியே என்று புகல்'' - நீதி வெண்பா.

1160. கள்ளும் உண்ணாமைநன்று உணவுக்கு அரிசிநன்று
புள்ளுள் கிளிநன்று - ஊருக்கொரு பொற்
கொல்லரும் நன்று சர்வக்ஞ.

32. மதிநுட்பம்

க. விடுகதைகள்

(பிராணி, விலங்கு, பறவை மற்றும் பிற)

1161. கடிக்குங்கால் துடிக்கவைக்கும் தேளுமல்ல,
நெருப்புமல்ல,
படிக்குங்கால் வியப்புமல்ல, இச்சொல் உண்மையாம்
விடுகதையில் காண் சர்வக்ஞ.

1162. நூறாயிர வண்ணக்கண்கள் நெற்றியாயினும் வாலுண்டு
புற்றினூடே புழுக்கள் பிடிக்கும் - கவிகளுக்கு
உற்றகுழு உடைத்தாம் சர்வக்ஞ.

1163. நாவும் பல்லுமற்றது நவிலும்சொல் வியப்புற்றது
பாயும்புலி வனவிலங்கெனப் பிடிப்பினும் கொல்லா
ஆயினும்வெல்லா உரைத்திடுதி சர்வக்ஞ.

1164. பல்குழவிகளின் தந்தையிவன் தலையிலொரு குடுமியுண்டு
பழுதிலாது காலப் பொழுதறிவான் - மனையாளுக்கு
முலைகள் கிடையா சர்வக்ஞ.

1165. மரக்கருவியால் செய்தானொருவன் இணைத்துக்
கட்டியதொருவன்
உருண்டாடிச் செத்தவனொருவன் - சந்தையில் விற்றவளோ
ஒருத்தியாம் பிணத்தை சர்வக்ஞ.

1166. நெற்றிக்கண் உண்ணும் சுற்றிலு மிறைக்கும்
உற்றவர் பிரிப்பின் இரண்டாம் - கவி
கற்றவரும் உரைப்பீர் சர்வக்ஞ.

1167. பரியில் இருந்து குரங்கும் பிறக்கும்
கரிக்கிரண்டு இறக்கைகள் முளைக்கும் - வானிலவை
பிரிந்தாடுவது கண்டேன் சர்வக்ஞ.

1161. மிளகு, 1162. மயில், 1163. வலை, 1164. சேவல், 1165. நெசவாடை,
1166. கையால் ஆட்டும் அரைவைக்கல், 1167. முகில்,

1168. விரிமண்ணில் பிறந்து விண்ணில் சுற்றும்
விர்ரென சப்திக்கும் நீள்பானம் அனல்கக்கும்
கூர்மதிகாள் உரைப்பீர் சர்வக்ஞ.

1169. கால்களுண்டு நடக்காது கட்டியிருக்கும் மூலையில்
பாலருந் துவோனைச் சுமக்கும் - இளங்கவிகாள்
சொல்லுரைப்பீர் யாதென சர்வக்ஞ.

1170. கால்களின்றி தாண்டும் தோள்களின்றி நீந்தும்
வேலன்ன நாவின்றி இசைக்கும் - பாக்குலத்தீர்
சொல்லெடுப்பீர் யாதென சர்வக்ஞ.

1171. வெட்ட வெட்ட வளரும் - களைந்து
நட்டாலோ வளரா - கவிக் குலத்தீர்
பட்டென் னுரைப்பீர் சர்வக்ஞ.

1172. கற்பூர விளைச்சல் கற்பூரம் அதுவன்று
கற்பூரமாம் கடைந்த வெண்ணெயல்ல - இவ்வுரையில்
கற்பூர முண்டு சர்வக்ஞ.

1173. கையிருக்கும் காலிருக்கும் வாராது அழைப்பினும்
கையால் பிறப்பெடுத்து நின்றிருக்கும் நிலையாகி
கைகாலுள்ளோரே செப்பிடுதி சர்வக்ஞ.

1174. அரண்மனை உள்ளுமிருக்கும் அழைக்குமிடம் தான்வரும்
உறவையே அரித்துண்ணும் - உரைப்பீர் கவிகாள்
அறிந்ததை அரசுக்கு சர்வக்ஞ.

1175. பாதாள மிறங்கும் கங்கையுடன் தான்வரும்
சாதாரணமாய்க் கிடக்கும் மண்மீது - புகல்வீர்
யாதென நொடியில் சர்வக்ஞ.

1176. கரமீ தமர்ந்தாடும் காணாதுபோம் வருமீண்டும்
கூர்முள்ளில் கீச்சென்னும் - வனப்புள்ளின்
தாரழகைக் காண் சர்வக்ஞ.

1168. அம்பு, 1169. தொட்டில், 1170. நதி. 1171. தலைமயிர், 1172. கற்பூர எண்ணெய், 1173. சோளக்காட்டு பொம்மை, 1174. அரம், 1175. ஏற்றம், 1176. கிளி

1177. வருவேன் ஒருமுறை வந்துபோவேன் மறுமுறை
வருகை தந்தபின் வரமாட்டேன் - கவிகாள்
பெருமையோடு உரைப்பீர் சர்வக்ஞ.

1178. முக்காலின்மீ தமர்ந்தே மரக்காலை அரிந்துண்ணும்
தக்க தருணத்தில் நீருமருந்தும் - கவிகளுள்
தக்காரே உரைப்பீர் சர்வக்ஞ.

1179. கம்மென்றரைக்கும் கல்லில் வளர்மரம் கண்டேன்
அம்மர மேலிரண்டு கரம்கண்டேன் - மணமும்
அம்மரத்தில் கொண்டேன் சர்வக்ஞ.

1180. இன்னும் காய்களாம் முந்நூற்றி யறுபது
மன்னுதலோ முக்கிளையில் பழமெனப் பன்னிரெண்டு
மண்ணில் மூலமொன்றென்பர் சொல்சர்வக்ஞ.

1181. கரமுண்டு காலில்லை சிரமற்ற முண்டமது
நரம்பால் இணைப்பர் துண்டுகளை - இஃது
அறிந்தோர் செப்பீடுவீர் சர்வக்ஞ.

1182. அடியெடுக்க புலியாகி இடையில் எலியாகி
முடிவில் பித்தாவர் - கவிகள் உரைப்பர்
கடிதில் யாரென்றிவர் சர்வக்ஞ.

1183. பாடென்றால் பாடாது பாடிட மரமேறும்
கூடாமற் பாடிடும் வளையத்தில் - வெட்டினால்
வாடாது காண் சர்வக்ஞ.

1184. தன்னைச் சுற்றி கயிறுண்டு - உண்ணாது
வெண்ணெய் மோர் பிறர்க்குண்டு - கவிகள்
விண்டுரைப்பர் கேளீர் சர்வக்ஞ.

1185. வட்டதாலத்தின் வாய்போல் பிறப்பெடுக்கும் முலகில்
தொட்டும் பாராது கிழத்தியரை - கவிகாள்
நோட்டமிருப்பின் உரைப்பீர் சர்வக்ஞ.

1177. விண்ணுலகு, 1178. சாணைக்கல், 1179. சந்தனக்கட்டை, 1180. ஓராண்டின் கூறுகள், (12 மாதம், பருவம் மூன்று, நாட்கள் 360), 1181. சட்டை அல்லது கோட்டு, 1182. பரத்தையரை நாடுவோர், 1183. வீணையின் தந்தி, 1184. மோர்கடையும் பானை, 1185. சூரியன்.

1186. எண்விரலளவு பெயருண்டு தொண்டையில் முள்ளுண்டு
பணியாளையும் பிடித் தாட்டும் - கவியுள்
பணியாளிருப்பின் பகர்வீர் சர்வக்ஞ.

1187. கைப்பிடியோ புறமிருக்கும் முகமோ முழங்காலாம்
கைப்பிடித்து கடைந்திட வருவாள் மனைவி
கையிலுருண்டை யாம்பின் சர்வக்ஞ.

1188. எரியுங்கால் சிவக்கும் தணியுங்கால் கறுக்கும்
நெறிநின்ற அன்னையைச் சுட்டெடுக்கும் - பொருள்
அறிந்துரைப்பீர் கவிகாள் சர்வக்ஞ.

1189. யாரோ உண்ணும்முன் யாரோ உண்பர்
மானுமல்ல பிரம்மனு மல்லன் - அடிசில்
யாருண்பர் சொல் சர்வக்ஞ.

1190. உண்பது புறவாயில் உமிழ்வது செவ்வாயில்
உன்மத்த வேளைக் குதவும் - கவியேறே
மண்ணில் உரைப்பீர் சர்வக்ஞ.

1191. வருவேன் மீண்டும் வந்ததும் போவேன்
இருவெனில் நில்லேன் போனபின்னும் வருவேன்
வராமலு மிருப்பேன் சர்வக்ஞ.

1192. சாயும் தோளினள் துளிரிலை தருபவள்
தாய்மையினள் மக்கட் பேற்றில் - மண்ணில்
சாயும் பெண்ணிவள் சர்வக்ஞ.

1193. உருண்டுருண்டு வருமது வெள்ளை உடலுடைத்து
கரவாதுரைப்பேன் கேள் கன்னியரை அழவைக்கும்
உரைமின் அறிவுடையோர் சர்வக்ஞ.

1194. சினப்பின் பிறந்தகம் விட்டெழு வாள்
சினம்தணிய பிறந்தகம் புகுவாள் - கவிகாள்
மனம்திறந் துரைப்பீர் சர்வக்ஞ.

1186. குறடு. 1187. மத்து, 1188. நெருப்பு, 1189. அகப்பை, 1190. துப்பாக்கி,
1191. பணம், 1192. வாழைமரம், 1193. புழு, 1194. மழை

1195. கருவண்ணச் சேலையாள் வானேறி வலம்வருவாள்
கருப்பு வெளுப்பினும் கன்னி அவளை
யாருமிலர் ஆரத்தழுவ சர்வக்ஞ.

1196. நீரில் பிறப்பினும் தன்நட்பை வேண்டாள்
நாரியரை நம்பியே கெடுவாள் - இச்சொல்
பாரில் அறிவரோ சர்வக்ஞ.

1197. பல்லிருக்கும் விலங்கல்ல சொல்லில் வியப்பில்லை
பல்லின்றி கொல்லும் நம்பின் - அறிவில்
வல்லோர் உரைமின் சர்வக்ஞ.

1198. சாலைவேலிக்குள்ளே பாய்ந்து வருகுது நெருப்பொன்று
பாலை வனமெங்கும் பரந்தொளிரும் விந்தையை
காலையில் உரைப்பீரோ சர்வக்ஞ.

புகை, 1196. உப்பு, 1197. வாள், 1198. காலைநேர கதிரவனொளி.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113

அண்மை வெளியீடுகள்

தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	125.00
சங்க இலக்கிய ஆய்வுகள்	30.00
தொல்காப்பிய ஆய்வுகள்	20.00
Indian Epistemology	125.00
பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2	80.00
தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு	75.00
ஜப்பானியக் காதல் பாடல்கள்	75.00
குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு	80.00
பயிலரங்கக் கவிதைகள்	18.00
உ.வே.சா. நூல்களில் சொல்லும் சுவையயும்	18.00
தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும்	30.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
சங்க கால மன்னர்களின் காலநிலை தொகுதி-2	64.00
சங்க கால மன்னர்களின் காலநிலை தொகுதி-1	56.00
இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து	125.00
லவகுச நாடகம்	30.00
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4	110.00
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-3	110.00
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-2	110.00
எட்டையபுரப் பள்ளு	60.00
திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு	100.00
தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள்	40.00
இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் தொகுதி-2	65.00
நானும் என் கவிதையும்	40.00
On Translation	95.00
ஐங்குறுநூறு மூலமும் உரையும்	85.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
Literary Criticism in Tamil and Sanskrit	45.00
செந்தமிழ் அகராதி	150.00
சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி	200.00
தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி	30.00
பிரதிமா ஸ்வப்ன வாசவதத்தம்	55.00
அறநூல்	38.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள்	75.00
பொருள் புதிது	35.00
ஆளும் தமிழ்	28.00
தமிழர் கொடிகள்	30.00
தமிழர் சமூகவியல்	35.00
THE NARRINAI FOUR HUNDRED	**175.00**
தமிழ் மேடை நாடக வரலாறு	55.00
தமிழில் ஆவணங்கள்	75.00
தமிழ் கற்பித்தலில் உன்னதம்	20.00
பரதநாட்டிய சாஸ்திரம்	150.00

Pub.No. 393 **சர்வக்ஞர் உரைப்பா** **40.00**